# உதயன்

Uthayan - A lively National Tamil Daily

சுடர்: 30 கதிர்: 041 வள்ளுவர் ஆண்டு: 2045 மார்கழி 22, செவ்வாய்க்கிழமை 06.01.2015


வானிலை
மேகமூட்டமான வானிலை காணப்படும் இரவு வேளைகளில் கடும் குளிர் காணப்படும்

## "எனது வெற்றி நாட்டை பிளவுபடுத்தாது"



நான் வெற்றியீட்டினால், நாடு பிளவுபடும் என்று கூறுகின்றார்கள். அதில் உண்மையில்லை. – என்று கூறியுள்ளார் பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன. வடக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்றும் எண்ணமும் எனக்கில்லை – என்றும் அவர் கூறியுள்ளார்.

பக்.23

## "தேர்தலின் பின்னர் எதிர்க்கட்சி வரிசைதான்"



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் நான் எதிர்க்கட்சிவரிசையில் தான் அமர்ந்திருப்பேன் என்று கூறியுள்ளார் அமைச்சர் மேர்வின் சில்வா. ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் தாம் விரும்பியவர்களுக்கு வாக்களியுங்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பக்.23

## திஸ்ஸ வெளியிட்ட ஆவணம் போலி!

மைத்திரி–ரணில் ஒப்பந்தம் என்று தெரிவித்து அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்க வெளியிட்ட ஆவணம் போலியானது என்று கூறியுள்ளார் அரச பகுப்பாய்வாளர்.

பக்.23

நில ஆக்கிரமிப்பு, அடக்கு முறை, இன அழிப்பு என்பவற்றை எதிர்க்க

# அன்னமே எமது சின்னம் தமிழர்களே வாக்கிடுங்கள்

## மாவை சேனாதிராசா நானாட்டானில் நேற்று அறைகூவல்

யாழ்ப்பாணம், ஜனவரி 6
தமிழ் நில ஆக்கிரமிப்பு, அடக்கு முறை, இனஅழிப்பு, குடும்ப ஆட்சி, சர்வாதிகாரம், ஜனாதிபதி நிர்வாக ஆட்சி, ஊழல், பெண்கள் பாதுகாப்பின்மை இவற்றுக்கு எதிராக வாக்களியுங்கள் என்று அறைகூவல் விடுத்துள்ளார் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராசா. பொது எதிரணியின் வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் சின்னமான தாரா போன்றிருக்கும் அன்னத்திற்கு அனைத்துத் தமிழ் மக்களும் வாக்களியுங்கள் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.
மன்னார் மாவட்டம் நானாட்டானில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றினார் மாவை. சேனாதிராசா.

பக்.21



## குடாநாட்டில் போலி வாக்குச் சீட்டு வைத்திருப்போர் உடன் கைதாவர்

### மஹிந்த ஆதரவு நீலப் படையணியால் விநியோகிக்கப்பட்டவை சட்டவிரோதமானவை

யாழ்ப்பாணம், ஜன. 6
யாழ். மாவட்டத்தில் போலியான வாக்குச் சீட்டுக்கள் நேற்று விநியோகிக்கப்பட்டுள்ளன என்று தேர்தல்கள் திணைக்கள அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர். இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்களான நீலப் படையணியினரால் இவை விநியோகிக்கப்பட்டன. விநியோகிக்கப்பட்ட அந்தப் போலி வாக்குச் சீட்டை வைத்திருப்பது சட்டவிரோதம் என்றும் அதனை வைத்திருக்கும் எந்த ஒருவரும் உடனடியாகக் கைது செய்யப்படுவர் என்றும் தேர்தல் திணைக்கள அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

பக்.21

## பிரதியமைச்சர் ஜயசேகரவை கைது செய்ய உத்தரவு

பிரதி அமைச்சர் பிரேமலால் ஜயசேகரவைக் கைது செய்யுமாறு பெல்மடுல்ல நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் பரப்புரை மேடை ஒன்றின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பக்.02

## வாக்களிப்பதற்கு அஞ்ச வேண்டாம்

யாழ்ப்பாணம், ஜன. 6
வாக்களிப்பது மக்கள் உரிமை. அதனைப் பாதுகாப்பதற்கு முழுமையான நடவடிக்கை எடுக்கப்படும். எதுவித அச்சமுமின்றி வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று மக்கள் வாக்களிக்க முடியும்.
தேர்தல்கள் திணைக்களத்தின் இந்த அறிவிப்பு ஒலிபெருக்கி மூலம் நேற்று முதல் யாழ். மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் அறிவிக்கப்பட்டு வருகின்றது.

பக்.19




யாழ்பல்கலைக்கழகத்துக்குஉள்ளேயும்,வெளியேயும்'எமது தேசத்தை சுடுகாடாக்கியவர்களுக்கு பதிலடி கொடுப்போம்' என்ற வாசகம் அடங்கிய சுவரொட்டிகள் நேற்று ஒட்டப்பட்டிருந்தன.

பக்.23

## செந்திலுக்கு நீதிமன்று பிடியாணை

ஊவா மாகாண சபை அமைச்சர் செந்தில் தொண்டமானை கைது செய்யுமாறு பண்டாரவளை நீதிவான் நீதிமன்றம் பிடியாணை உத்தரவு பிறப்பித்துள்ளது.
தபால் ஊழியர் ஒருவரைத் தாக்கினார் என்ற சந்தேகத்தின் பேரிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பக்.02

## டக்ளஸின் அலுவலகத்தில் நேற்றுத் திடீர்த் தேடுதல்

### கடமை நேரத்தில் அங்கு சென்றிருந்த சமுர்த்தி அலுவலர்கள் மீது நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 6
ஈபிடிபியின் யாழ்ப்பாண தலைமை அலுவலகமான ஸ்ரீதர் தியேட்டரினுள் நேற்று மாலை தேர்தல் அதிகாரிகள் திடீர் தேடுதல் நடத்தியுள்ளனர்.
தேர்தல்கள் திணைக்களத்திற்கு கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய தாம் தேடுதல் நடத்தினர் எனவும் – தேடுதல் நடத்தப்பட்டபோது கட்சி அலுவலகத்தினுள் அரச அதிகாரிகளான சமுர்த்தி அலுவலர்கள் 400 பேர் வரையிலானோர் இருந்தமை கண்டறியப்பட்டது என்றும் –
இவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்குரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன

பக்.21

## அமைதியான தேர்தல் குறித்து ஐ.ஒன்றியம் கரிசனை

கொழும்பு, ஜன.6
நம்பகத்தன்மையுடைய தேர்தலுக்கு அமைதிமிக்க சூழல் அத்தியாவசியமானது என்று ஐரோப்பிய ஒன்றியம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பக்.25

## தேர்தல் அதிகாரிகள் நேற்று தெற்கிலிருந்து படையெடுப்பு

### சுதந்திரமான தேர்தலை உறுதிப்படுத்த

யாழ்ப்பாணம், ஜன. 6
வடக்கில் மக்கள் அச்சமின்றி வாக்களிப்பதை உறுதிப்படுத்துவதற்கும் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குமாக தென்பகுதியிலிருந்து பெரும் எண்ணிக்கையான அதிகாரிகள் வடக்கே வருகை தந்துள்ளனர். மூத்த உதவித் தேர்தல்கள் ஆணையாளர் தலைமையில் நேற்றிரவு இந்த அதிகாரிகள் குழாம் வடக்குக்கு வந்து சேர்ந்தது.
ஜனாதிபதித் தேர்தல் நாளைமறுதினம் வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது. வடக்கில் எந்தக் குழப்பமும் இன்றி தேர்தலை

பக்.19

# செய்திகள்

## விஹாரமாதேவி பூங்கா அருகில் ஒருவர் தீக்குளிப்பு



கொழும்பு, ஜன.6

கொழும்பு விஹாரமாதேவி பூங்காவிற்கு அருகே தீக்குளித்த ஒருவர், தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பன்னிப்பிட்டிய பகுதியில் வசிக்கும் 72 வயதான ஒருவரே தனது உடலுக்கு தீ மூட்டிக் கொண்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மண்ணெண்ணையை பயன்படுத்தி இன்று காலை 5.30 அளவில் குறித்த நபர் தீக்குளித்துள்ளார். பலத்த காயங்களுடன் அவர் மருத்துவனையில் சேர்க்கப்பட்டார்.

ஆயினும் இவர் தீமூட்டிக் கொண்டமைக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை. சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர். (ற)

## அரச வளப் பயன்பாடு இராணுவத் தலையீடு முறைப்பாடுகள் அதிகம்

### வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் கவலை

கொழும்பு, ஜன. 6

அரச வளங்களின் பயன்பாடு மற்றும் இராணுவத் தலையீடு உள்ளிட்ட விவகாரங்கள் குறித்துக் கவலையடைந்துள்ளதாக ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிக்க வந்துள்ள வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பொதுநலவாயக் கண்காணிப்பாளர் குழுவின் தலைவர் கலாநிதி பாரத் ஜக்டியோ இது குறித்து மேலும் தெரிவிக்கையில்,

தேர்தல் நாளன்றோ, அதற்கு முதல் நாளோ இராணுவம் பயன்படுத்தப்படுவது குறித்த முக்கியமான கவலை உள்ளது.தேவை எனக் கருதினால் இது குறித்து விவாதிக்க இராணுவத்துடன் ஒரு சந்திப்பைக் கோருவோம்.

அரச வளங்கள் முறைகேடாகப் பயன்படுத்தப்படுவது, வன்முறைகள், முறைகேடுகள் குறித்தும் எமக்கு முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன, என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பொதுநலவாயக் கண்காணிப்பாளர்கள் 9 பேர், ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிக்க வந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, ஆசிய தேர்தல் கண்காணிப்பாளர்கள் குழுவும், அரச வளங்களின் துஷ்பிரயோகம், பொலிஸார் செயற்திறன் அற்றிருப்பது குறித்து கவலை வெளியிட்டுள்ளது.

தமது கலந்துரையாடல்களில் முக்கியமாக அரச வளங்களின் துஷ்பிரயோகம், பொலிஸாரின் பாகுபாடான செயற்பாடுகள் குறித்துகவலைஎழுப்பப்பட்டதாக, இந்தியாவின் முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையாளரும், தேர்தல் அதிகாரிகள் சங்கத்தின் குழுவுக்குத் தலைமை தாங்கி வந்துள்ளவருமான எஸ். வை.குரேசி தெரிவித்துள்ளார். (த-5)

## வாக்குப் பெட்டிகளை கொண்டு செல்வதற்கு 125 தனியார் பஸ்கள்

யாழ்ப்பாணம்.ஜன.6

ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்குப் பெட்டிகளை எடுத்துச் செல்வதற்கு யாழ்.மாவட்டத் தனியார் பஸ் சங்கத்தில் இருந்து 125 பஸ்கள் பயன்படுத்தப்படவுள்ளன.

இது தொடர்பில் யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக தனியார் பஸ் சங்கத்தின் உப தலைவர் பொ. கெங்காதரன் உடன்பாடு தெரிவித்துள்ளார்.

பொது மக்களுக்கான சேவைக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் தேர்தலுக்கான வாக்குப் பெட்டிகளை நிலையங்களுக்குக் கொண்டு சேர்ப்பதற்கும், வாக்கெண்ணும் நிலையத்துக்குப் பெட்டிகளை எடுத்து வருவதற்கும் இரு நாள்கள் பஸ்கள் பயன்படுத்தப்படவுள்ளன.

இன்று மாலை 2 மணிக்கு யாழ்.மாவட்ட செயலத்துக்கு அனுப்பப்படும் பஸ்கள் குறிக்கப்பட்ட வாக்கு நிலையங்களுக்குப் பயணிக்கும். தொடர்ந்து தேர்தல் தினத்தன்று மாலை வாக்குப்பெட்டிகளை வாக்கெண்ணும் நிலையத்துக்கு கொண்டு செல்வதற்கான சேவையில் ஈடுபடும்.

125 பஸ்கள் தேர்தல் பணிக்காகக் கொண்டு செல்லப்பட்டாலும் பொதுமக்களின் சேவையில் பாதிப்பு ஏற்படாது. வழமையான சேவைகள் அந்தந்த நேரங்களில் சேவையில் ஈடுபடும் எனத் தனியார் பஸ் சங்கத்தின் உப தலைவர் பொ. கெங்காதரன் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, எதிர்வரும் 8ஆம் திகதி நடைபெறும் தேர்தல் நடவடிக்கைக்காக யாழ்.மாவட்டத்தில் 191 பஸ்கள் சேவையில் ஈடுபடவுள்ளன.

இந்த பஸ்சேவைகள் இன்று மாலை யாழ்.மாவட்ட செயலகத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு 8 ஆம் திகதி மாலை வரை சேவையில் ஈடுபடவுள்ளன.

இந்தச் சேவையினால் வழமையான போக்குவரத்துக்கள் எதுவும் பாதிப்படையாது என இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வடமாகாண பிரதான பிராந்திய முகாமையாளர் எஸ். அஸ்கர் தெரிவித்தார் இதில் யாழ்.மாவட்டத்தில் இலங்கைப் போக்குவரத்துக்கான சாலைகளிலிருந்து பருத்தித்துறை சாலையினால் 10 பஸ்களும், காரைநகர் சாலையினால் 10 பஸ்களும், யாழ்.சாலையினால் 63 பஸ்களும் சேவையில் ஈடுபடவுள்ளன.

இதேபோல தனியார் பஸ் சங்கத்தில் யாழ்.மாவட்ட தனியார் சங்கத்தினால் 108 சிற்றூர்திகளும் வடமராட்சி தனியார் பஸ் சங்கத்தினால் 20 சிற்றூர்திகளும் சேவையில் ஈடுபடவுள்ளன. (த-14, 422)

## சுன்னாகம் கழிவு ஒயில் விவகாரம்: பரிசோதனைக்கு நீதிமன்று பணிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 6

சுன்னாகத்திலுள்ள மின் நிலைய சுற்றுவட்டாரத்தில் உள்ள கிணறுகளில் கலக்கும் கழிவு ஒயிலும் மின் நிலையத்திலிருந்து வெளியேற்றப்படும் கழிவு ஒயிலும் ஒன்றுதானா என்பதைக் கண்டறியுமாறு மல்லாகம் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

யாழ். குடாநாட்டின் வலிகாமம் வடக்கில் உள்ளது சுன்னாகம். அங்குள்ள மின் நிலையத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் இருக்கும் கிணறுகளில் எண்ணெய்க் கசிவு ஏற்பட்டு வருகின்றது. மின்சார நிலையத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட கழிவு ஒயிலே இவ்வாறு கிணறுகளில் எண்ணெய்க் கசிவு ஏற்படக் காரணம் என்று கூறப்படுகிறது.

இது தொடர்பாக மல்லாகம் நீதிமன்றத்தில் மூன்று வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அவற்றின் மீது விசாரணை இடம்பெற்று வருகின்றது.

இந்த இயற்கைப் பேரிடருக்குப் பொறுப்புக்கூற வேண்டிய கடப்பாடு – பொறுப்பு – வலி. வடக்கு பிரதேச சபை, உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி, நீர் வளச் சபை, மத்திய சுற்றாடல் மற்றும் சுற்றுச்சூழல் அதிகார சபை ஆகியவற்றுக்கும் இருக்கிறது எனத் தெரிவித்து பொலிஸார் நான்காவதாக ஒரு மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தனர்.

நேற்று அந்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. நான்கு பிரதிவாதிகளும் நீதிமன்றில் முற்பட்டிருந்தனர்.

கிணற்றுத் தண்ணீரில் கலக்கும் கழிவு ஒயிலும் சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்திலிருந்து வெளியேறிய கழிவு ஒயிலும் ஒன்றுதானா என்பதனைப் பரிசோதித்து உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று பொலிஸார் அப்போது நீதிமன்றத்தில் கோரிக்கை வைத்தனர். அதனை ஏற்றுக் கொண்ட நீதிமன்றம் பரிசோதனைகளை மேற்கொள்ள பணித்தது.

அதற்காக 5 கிணறுகளிலிருந்து எடுக்கப்பட்ட தண்ணீர் மாதிரிகளும் மின்உற்பத்தி நிலையத்திலிருந்து 2 மாதிரிகளும் எடுக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் 12ஆம் திகதி அது பரிசோதனைக்காக பொலன்னறுவைக்கு அனுப்பப்படவுள்ளது.

மனுவில் தம்மீது சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டை பிரதேச சபை மறுத்தது. அந்த இடத்தில் மின்சார சபை இயங்குவதற்கு பிரதேச சபை அனுமதி வழங்கவில்லை, அதனைக் கட்டுப்படுத்துவது அனுமதி வழங்குவது சுற்றுச்சூழல் சபையே என்று சுட்டிக்காட்டியது.

எதிர்வரும் 14ஆம் திகதிக்கு இந்த வழக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது. (உ-4)

## செந்தில் தொண்டமானை கைது செய்யுமாறு உத்தரவு

### பண்டாரவளை நீதிவான் நீதிமன்றம் பிறப்பித்தது

கொழும்பு, ஜன.6

ஊவா மாகாண சபை அமைச்சர் செந்தில் தொண்டமானை கைது செய்யுமாறு பண்டாரவளை நீதிவான் நீதிமன்றம் பிடியாணை உத்தரவு பிறப்பித்துள்ளது.

ஊவா மாகாண அமைச்சர் செந் தில் தொண்டமான், தபால் ஊழியர் ஒருவரைத் தாக்கியதாக பதுளை – எல்ல பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பதுளை – எல்ல தபால் நிலையத்தைச் சேர்ந்த பெரியசாமி ஞானசேகரன் என்ற தபால் ஊழியரே இவ்வாறு தாக்குதலுக்குள்ளாகி பதுளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். குறித்த தபால் ஊழியர் எல்ல நியூபோர்ட் தோட்டத்தில் வாக்காளர் அட்டைகளை விநியோகித்து விட்டுத் திரும்பிக் கொண்டிருந்தவேளையிலேயே தாக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தன்னைத் தாக்கும்போது தன்னிடம் 35 வாக்காளர் அட்டைகள் இருந்தன என்றும், அந்த வாக்காளர் அட்டைகளும் தன்னிடமிருந்த கையடக்கத் தொலைபேசி மற்றும் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலி என்பவற்றையும் காணவில்லை எனவும் அவர் பொலிஸ் நிலையத்தில் முறைபாடு செய்துள்ளார்.

அதேவேளை, தனது மகனின் முகத்தில் செந்தில் தொண்டமான் தாக்கியதாகவும் அதன்போது மகன் மயங்கி வீழ்ந்ததாகவும் முகத்திலிருந்து இரத்தம் கொட்டியதாகவும், தனது கணவரைப் பறிகொடுத்து இரண்டு மாதகாலமாகவில்லை. இந்த நிலையிலேயே மகன் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என தாக்குதலுக்குள்ளானவரின் தாயார் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, அமைச்சர் செந்தில் தொண்டமான் இந்தத் தாக்குதலை தான் மேற்கொள்ளவில்லையென மறுத்திருந்தார். (ற)

## பிரதியமைச்சர் ஜயசேகரவை கைது செய்யுமாறு உத்தரவு

கொழும்பு, ஜன.6

மின்வலு மற்றும் எரிசக்தி பிரதி அமைச்சர் பிரேமலால் ஜயசேகரவை கைது செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. பெல்மடுல்ல நீதிமன்றம் இந்த உத்தரவினை நேற்றுப் பிறப்பித்துள்ளது.

கஹாவத்தையில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் பரப்புரை மேடை ஒன்றின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த தாக்குதல் சம்பவத்தில் மூன்று பேர் காயமடைந்துள்ளதுடன் ஒருவரின் நிலைமை ஆபத்தானது என தெரிவிக்கப்படுகிறது. இந்த சம்பவத்தில் கஹாவத்தை வர்த்தக சங்க செயலாளரே சம்பவத்தில் படுகாயமடைந்திருந்தார்.

இந்த தாக்குதல் சம்பவம் நேற்று அதிகாலை 2.00 மணியளவில் இடம்பெற்றிருந்தது.

சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டின் பேரில் சபரகமுவ மாகாணசபை உறுப்பினர் நிலந்த ஜயகொடி மற்றும் கஹாவத்தை பிரதேசசபையின் தலைவர் வஜிர சில்வா ஆகியோரையும் கைது செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அவர்கள் நாட்டை விட்டு தப்பிச் செல்லாமல் இருக்க கட்டுநாயக்க மற்றும் மத்தள விமான நிலையங்களுக்கு அறிவிக்கப்பட்டு உள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். சம்பவத்தில் காயமடைந்தவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களாவர். (ற)

# இதற்கும் பயிற்சி வகுப்பா ?



தன்னைத் தானே படம் எடுத்துக் கொள்ளும் 'செல்பி' கலையை, பிரிட்டனைச் சேர்ந்த கல்வி நிறுவனம் ஒன்று ஒரு மாத பயிற்சி வகுப் பாக நடத்த திட்டமிட்டுள்ளது.

ஸ்மார்ட் கைத்தொலைபேசிகளின் வருகை அதிகரித்துள்ளதை அடுத்து, தனக்குத் தானே படம் எடுத்துக் கொள்ளும் செல்பி கலாசாரமும் வேகமாகப் பரவி வருகிறது.

அதையடுத்து, இதை தொழில் முறையில், பயிற்றுவிக்க, லண்டனைச் சேர்ந்த கல்வி நிறுவனம் முன்வந்துள்ளது. இதற்காக, எதிர்வரும் மார்ச் மாதம் ஒரு மாத சிறப்பு பயிற்சி வகுப்பை நடத்த திட்டமிட்டுள்ளது.

இந்த வகுப்பில் சேர்வதற்கு, 20 ஆயிரம் ரூபா கட்டணமாக நிர்ண யிக்கப்பட்டுள்ளது.





எத்தனை பேர் இப்படி சைக்கிள் ஓடிப் பழகினீங்க ?

# ரிலாக்ஸா வாசியுங்க...



**மனைவி :** வந்திட்டீங்களா! உங்களைத்தான் தேடிக்கிட்டு இருந்தேன்!

**கணவன் :** ஏன்? என்னாச்சு ?

**மனைவி :** இன்றைக்கு ஒருத்தன் எங்கள் அப்பாவைப் பற்றி தவறா பேசிட்டான். நானும் அவன் அப்பனை நல்லா திட்டிட்டேன்!

**கணவன் :** சரி...!

**மனைவி :** இருந்தாலும் ஆத்திரம் அடங்கவில்லை! அவன் அப்பனோட மண்டைய உடைச்சாத்தான் நிம்மதி!

**கணவன் :** (கலவரப் பீதியில்...) நமக்கு எதுக்கு இந்த வம்பு? மன்னிச்சுவிட்டுட வேண்டியதுதானே!

**மனைவி :** மன்னிக்கிறதா? அந்தப் பேச்சுக்கே இடமில்லை. எங்க அந்த உருட்டுக்கட்டை.....(என்று தேடிக் கொண்டே செல்ல...)

(வாசலிலிருந்து வந்த மகன்...)

**மகன் :** அப்பா...சீக்கிரம் ஓடிடுப்பா!

**அப்பா :** ஏண்டா..?

**மகன் :** நான் தான் கோபத்தில தாத்தாவை திட்டிவிட்டேன்.

**அப்பா:** அடப்பாவி மகனே! வீட்டுக்குள்ள வந்தால் உயிர கையில பிடிச்சுக் கொண்டு அலைய வேண்டியதா இருக்கே., அய்யய்யோ ... இப்ப நான் என்ன செய்வேன்..! எங்க போவேன்..! செய்யாத குற்றத்துக்கு நாயா, பேயா அலைய வைக்கிறாங்களே..... இதைக் கேட்க நாதியில்லையா....

## 10 வருசம் படிச்சா வராத இங்கிலிஷ்



## 10 நிமிசம் குடிச்சா எப்படி வந்தோ தெரியல

**டுமீல் கண்ணா... எல்லோருக்கும் உன்னை ஏன் பிடிக்கல தெரியுமா? 90 வயசானாலும் உன் மொள்ளமாரித்தனமும் முடிச்சவுக்கித் தனமும் இன்னும் உன்ன விட்டு போகல!**



Thank u thank u thank u
கூடவே பிறந்தது என்னைக்கும் போகாது



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



தருபவர்: விஜயா

**மேடம்:** விரோதிகளும் நண்பர்களாவார்கள். மறைமுக எதிர்ப்புகள் விலகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் செய் தொழிலில் முன்னேற்றம் காண்பார்கள். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டி குறையும்.

**இடபம்:** மேலதிகாரிகளால் உத்தியோகத்தர்களுக்கு நன்மை உண்டாகும். வாழ்க்கைத் துணை மூலம் ஆதாயம் கிடைக்கப் பெறுவீர்கள். உறவினர்கள், நண்பர்கள் மூலம் தக்க தருணத்தில் உதவிகள் கிடைக்கும்.

**மிதுனம்:** வேலைப்பளு அதிகரிக்கும். மன உளைச்சல் மற்றும் உடல் களைப்பை தூக்கி எறிந்து விட்டு உழைக்க ஆரம்பியுங்கள். எதைப்பேசினாலும் நன்கு ஆராய்ந்து ஆலோசனை செய்த பின்னரே பேசவும்.

**கடகம்:** அலுவலக வேலைகளால் அலைச்சல் உண்டாகும். சக ஊழியர்களிடம் அலுவலகம் தொடர்பான இரகசியங்களை கூறுவதைத் தவிர்ப்பது நல்லது.

**சிங்கம்:** பெண்கள் நண்பர்களிடம் உறவினர்களிடம் கவனமாக பேசுவது நல்லது. வீண் மனக்கவலை ஏற்பட்டு நீங்கும். புதிய செயல்களை யோசித்து செய்வது நல்லது.

**கன்னி:** கூடுதல் கவனத்துடன் இருப்பது நன்மையைத் தரும். மனக் குழப்பம் நீங்கும். வெளியூர் பயணங்கள் உண்டாகும். அதனால் நன்மையும் ஏற்படும். நண்பர்கள் பலவிதங்களிலும் ஆதரவாக இருப்பார்கள்.

**துலாம்:** ஆக்கபூர்வமான யோசனைகள் தோன்றும். தொழில் வியாபாரத்தில் இருந்து வந்த இடையூறுகள் குறையும். உறவினர்கள் மூலம் அனுகூலம் உண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் திருப்தியாக உணர்வார்கள்.

**விருச்சிகம்:** பணவரத்தும் இருக்கும். சக ஊழியர்களின் உதவியும் கிடைக்கும். உத்தியோகத்தர்களுக்கு எதிர்பார்த்த லாபம் வந்து சேரும்.

**தனுசு:** தடைப்பட்ட காரியங்கள் சாதகமாக நடந்து முடியும். மனத் தெளிவு உண்டாகும். சக ஊழியர்கள் ஆதரவாக இருப்பார்கள். மனத் துணிவு உண்டாகும். எந்த ஒரு காரியத்தையும் துணிவுடன் செய்து அதிக நன்மை அடைவீர்கள்.

**மகரம்:** வீண் தர்க்கங்களில் ஈடுபடுவதைத் தவிர்ப்பது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் கோபப்படாமல் மேல் அதிகாரிகள் சொன்ன வேலையை செய்து முடிப்பது நல்லது.

**கும்பம்:** சக ஊழியர்கள் பேச்சைக் கேட்டு நடப்பதைத் தவிர்ப்பது நன்மை தருவதாக இருக்கும். உறவினர்களுடன் பேசும்போது நிதானத்தை கடைப்பிடிப்பது நல்லது.

**மீனம்:** உத்தியோகத்தர்களுக்கு மனதில் இருந்த பயம் நீங்கி துணிவு உண்டாகும். வீண் வாக்கு வாதங்களைத் தவிர்ப்பது நல்லது. அடுத்தவர்களுக்கு ஆதரவாக செயற்படும் போது கவனம் தேவை.

# செய்திகள்

## தினமும் நான்கு ரயில் சேவைகள்

### காங்கேசன் – கொழும்பு இடையே

யாழ்ப்பாணம். ஜன. 6

காங்கேசன்துறை – கொழும்புக்கு இடையில் தினமும் 4 பிரதான ரயில் சேவைகள் இடம்பெறும். அத்துடன் காங்கேசன்துறையில் இருந்து யாழ்ப்பாணம் ரயில் நிலையம் வரை தினமும் ஒரு சேவை இடம்பெறும் என்று யாழ்.ரயில் நிலையத்தின் பிரதான ரயில் அதிபர் ரி.பிரதீபன் தெரிவித்தார்.



காங்கேசன்துறை – கொழும்புக்கு இடையில் 4 பிரதான சேவைகளும், கொழும்பு– சுன்னாகம் வரை ஒரு சேவையும், காங்கேசன்துறை – யாழ்ப்பாணத்துக்கிடையில் இன்னொரு சேவையும், சுன்னாகம்– யாழ்ப்பாணத்துக்கிடையில் இணைப்புச் சேவையும் இடம்பெறும்.

இதற்கமைவாக கொழும்பிலிருந்து அதிகாலை 5.30 மணிக்குப் புறப்படும் ரயில் யாழ்ப்பாணத்தை முற்பகல் 11.56 வந்தடைந்து அங்கிருந்து நண்பகல் 12 மணிக்குப் புறப்பட்டு நண்பகல் 12.17 மணிக்கு காங்கேசன்துறையை சென்றடையும். மீண்டும் அதே ரயில் பிற்பகல் 1.25 மணிக்கு காங்கேசன்துறையில் இருந்து புறப்பட்டு பிற்பகல் 1.42 மணிக்கு யாழ்ப்பாணத்தை வந்தடைந்து அங்கிருந்து பிற்பகல் 1.45 மணிக்குக் கொழும்பு நோக்கி புறப்படும்.

கொழும்பிலிருந்து முற்பகல் 11.50 மணிக்கு புறப்படும் ரயில் மாலை 6.15 மணிக்கு யாழ்ப்பாணத்தை வந்தடையும். அங்கிருந்து மாலை 6.18 மணிக்கு புறப்படும் ரயில் மாலை 6.42 மணிக்குக் காங்கேசன்துறையைச் சென்றடையும்.

சாதாரண ரயில் சேவை தினமும் காங்கேசன்துறையில் இருந்து இரவு 7 மணிக்குப் புறப்பட்டு இரவு 7.24 மணிக்கு யாழ்ப்பாணத்தை வந்தடையும்.

யாழ்ப்பாணத்திலிருந்து முற்பகல் 9.40 மணிக்கு புறப்படும் ரயில் முற்பகல் 10.04 மணிக்குக் காங்கேசன்துறையைச் சென்றடையும். அங்கிருந்து முற்பகல் 10.30 மணிக்குப் புறப்படும் ரயில் முற்பகல் 10.54 மணிக்கு யாழ்ப்பாணத்தை வந்தடைந்து அங்கிருந்து முற்பகல் 11 மணிக்குக் கொழும்பு நோக்கிப் புறப்படும்.

கொழும்பில் இருந்து காலை 7.15 மணிக்குப் புறப்படும் ரயில் பிற்பகல் 3.23 மணிக்கு யாழ்ப்பாணத்தை வந்தடைந்து அங்கிருந்து பிற்பகல் 3.25 மணிக்கு புறப்பட்டுப் பிற்பகல் 3.39 மணிக்குச் சுன்னாகத்தைச் சென்றடையும்.

கொழும்பிலிருந்து இரவு 7.40 மணிக்குப் புறப்படும் மெயில் ரயில் அதிகாலை 5.08 மணிக்கு யாழ்ப்பாணத்தை வந்தடையும். அங்கிருந்து அதிகாலை 5.10 மணிக்குப் புறப்பட்டு அதிகாலை 5.26 மணிக்குச் சுன்னாகத்தைச் சென்றடையும்.

சுன்னாகத்தில் இருந்து மாலை 6.30 மணிக்குப் புறப்படும் ரயில் சேவை மாலை 6.48 மணிக்கு யாழ்ப்பாணத்தை வந்தடையும். இந்த ரயில் சேவை யாழ்ப்பாணத்தில் இருந்து இரவு 7.10 மணிக்குக் கொழும்பு நோக்கிப் புறப்படும் யாழ்தேவி ரயில் சேவைக்கு இணைப்புச் சேவையில் ஈடுபடும்.

காங்கேசன்துறையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு 30 ரூபாவும், சுன்னாகம், தெல்லிப்பழையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு 20 ரூபாவும், கோண்டாவிலில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு 10 ரூபாவும் மூன்றாம் வகுப்புக் கட்டணங்களாக அறவிடப்படும்.

ரயில் சேவை தொடர்பான தகவல்களை 021222 2271 எனும் தொலைபேசி ஊடாகப் பொதுமக்கள் அறிந்துகொள்ள முடிவதுடன் தினமும் காலை 7 மணியில் இருந்து மாலை 5 மணி வரை முற்பதிவுகளை மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவித்துள்ளார். (த–14)

## காணாமற்போன மீனவர்கள் கடலில் பாதுகாப்பாக மீட்பு

யாழ்ப்பாணம், ஜன 5

பருத்தித்துறை கொட்டடிப் பகுதியில் கடற்தொழிலுக்காகப் படகுடன் சென்ற கடற்தொழிலாளர்களை நேற்று முன்தினம் மாதகல் கடற்தொழிலாளர்கள் மீட்டுள்ளனர்.

பருத்தித்துறை கொட்டடியைச் சேர்ந்த துரை ஜெயநந்தராஜன் (வயது–45), விக்னராஜா மதன் (வயது–34) ஆகியோரே கடந்த 2 ஆம் திகதி கடற்தொழிலுக்கு சென்றவேளை காணாமற்போயுள்ளனர்.

கடந்த 2 ஆம் திகதி நள்ளிரவு 12 மணியளவில் இருவரும் படகுடன் கடற் தொழிலுக்குச் சென்றுள்ளனர். மறுநாள் காலை 10 மணிக்குக் கரைக்குத் திரும்ப வேண்டிய இருவரையும் காணவில்லை என வீட்டுக்காரரும் பருத்தித்துறை கொட்டடி கடற்றொழிலாளர் சங்கத்தினரும் படகுடன் தேடுதலுக்காகப் போய் ஏமாற்றத்துடன் கரை திரும்பினர்.

கரை திரும்பிய இவர்களுடன் 5 படகுகளில் கடற்தொழிலாளர்கள் கடந்த 3ஆம் திகதி மீண்டும் கடலுக்குச் சென்று தேடினர். எனினும் அவர்களைக் கண்டுபிடிக்க முடியாமல் கரை திரும்பினர். இதேவேளை, காணாமற்போன இருவரையும் மாதகல் கடற்தொழிலாளர்கள் மீட்டுள்ளனர்.

கடற்தொழிலாளர்கள் இருவரும் சென்ற படகு எண்ணெய் இல்லாத நிலையில் சுமார் 48 மணித்தியாலங்கள் கடலினுள் தொலைபேசி மற்றும் எதுவித தொடர்புமின்றி இருந்துள்ளனர். இந்த நிலையில் மாதகல் பகுதியிலிருந்து கடல் தொழிலுக்குச் சென்ற மீனவர்கள் கடலினுள் நின்ற இருவரையும் தமது படகின் உதவியுடன் மாதகல் பகுதிக்கு மீட்டு வந்தனர். (த–422)

## இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம். ஜன.6



இலங்கைக் கடற்பரப்பில் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றத்துக்காக கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 15 பேருக்கு மூன்றாவது தடவையாக மீண்டும் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த 2 படகுகளுடன் 14 மீனவர்கள், காரைக்கால் மாவட்டத்தைச் சேர்ந்த 3 படகுகளுடன் 29 மீனவர்கள் என 43 மீனவர்களையும், 5 விசைப்படகுகளுடன் இலங்கைக் கடற்படையினர் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் யாழ்.நீரியல் வளத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டபின் பருத்தித்துறை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். எனினும் ஏற்கனவே கைது செய்யப்பட்ட மீனவர்கள் உட்பட 38 மீனவர்களை நல்லிணக்க அடிப்படையில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் பணிப்புரைக்கு அமைவாக டிசெம்பர் மாதம் 22 ஆம் திகதி விடுவிப்புச் செய்திருந்தனர்.

எனினும் காரைக்கால் மாவட்டத்தைச் சேர்ந்த 15 மீனவர்களுக்கு நேற்றுவரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டிருந்தது.

பருத்தித்துறை நீதிமன்றில் இன்று மீண்டும் மீனவர்களின் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டது. (த–14)

## தேர்தல் முறைகேடுகள் வடக்கில் 19 ஆகப் பதிவு

### கபே அமைப்பு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 6

ஜனாதிபதித் தேர்தல் சூடுபிடித்துள்ள நிலையில் தேர்தல் வன்முறை மற்றும் விதிமுறை மீறல் தொடர்பில் வடக்கில் 19 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக தேர்தல் கண்காணிப்பு அமைப்பான கபே தெரிவித்துள்ளது.

நாட்டில் நேற்றுக் காலை வரையான முறைப்பாடுகளின்படி ஆயிரத்து 358 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கில் பொதுச் சொத்துக்களைத் தேர்தலுக்குப் பயன்படுத்தியமை, தேர்தல் பணிகளில் அரச ஊழியர்களை ஈடுபடுத்தியமை, நியமனம் மற்றும் இடமாற்றம் தொடர்பான வகை முறைப்பாட்டில் யாழ். தேர்தல் தொகுதியில் 3, வன்னித் தேர்தல் தொகுதியில் 5 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

சட்டவிரோத தேர்தல் நடவடிக்கை தொடர்பில் யாழ். தேர்தல் தொகுதியில் 3 முறைப்பாடுகளும், வன்னித் தேர்தல் தொகுதியில் 8 முறைப்பாடுகளுமாக 19 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. இவற்றில் அதிகளவான முறைப்பாடுகள் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு எதிராகவே பதிவாகியுள்ளன என்று கபே மேலும் தெரிவித்துள்ளது. (த–4)

## ஜனாதிபதியின் தொலைக்காட்சி நிகழ்ச்சிக்கு நீதிமன்றம் தடை

கொழும்பு, ஜன. 6

ஜனாதிபதி மஹிந்தவின் 'ஜன பதி ஜனஹமுவ' என்னும் நிகழ்ச்சியை ஒளிபரப்ப 4 தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு, கடுவலை நீதிவான் நீதிமன்றம் இடைக்காலத் தடையுத்தரவு விதித்துள்ளது.

குறித்த நிகழ்ச்சிக்கு இடைக்கால தடைவிதிக்குமாறு, பொது எதிரணியின் ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் வழக்கறிஞர், கடுவலை நீதிவான் நீதிமன்றத்தில் மனுவொன்றினைச் சமர்ப்பித்திருந்தார். (த)

## பாடசாலைகள் இன்று தேர்தல் செயலகத்திடம்

### வாக்களிப்புப் பணிகளுக்காக

யாழ்ப்பாணம், ஜன.6

தேர்தல் நடவடிக்கைகளுக்காகப் பாடசாலைகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு தேர்தல்கள் செயலகத்தினால் பொறுப்பேற்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் நாளை மறுதினம் 8 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இதற்குரிய ஏற்பாடுகள் தேர்தல்கள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

வாக்களிப்பு நிலையங்களாகப் பாடசாலைகளே செயற்படவுள்ளன. இதனால் பாடசாலைகளில் வாக்களிப்பு நிலையத்திற் குரிய ஒழுங்குகளை மேற்கொள்வதற்காக இன்று பிற்பகல் 2 மணிக்கு அவை, தேர்தல்கள் திணைக்களத்தினால் பொறுப்பேற்கப்படவுள்ளன.

2015 ஆம் ஆண்டின் முதலாம் தவணைக்காகப் பாடசாலைகள் நேற்றைய தினமே ஆரம்பமாகியிருந்தன. சில பாடசாலைகள் எதிர்வரும் 12 ஆம் திகதியே முதலாம் தவணைச் செயற்பாடுகளுக்காக ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த–5)

செய்திகள்



# தேர்தல் ஏற்பாடு யாழில் பூர்த்தி

## தெரிவத்தாட்சி அலுவலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன 6

யாழ். மாவட்டத்தில் ஜனாதிபதித் தேர்தலுக்கான முன்னேற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இந்த முறை யாழ்.மாவட்டத்தில் 4 இலட்சத்து 50 ஆயிரத்து 132 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். என்று யாழ்.மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–


தேர்தலுக்காக யாழ்.மாவட்டத்தில் 526 வாக்களிப்பு நிலையங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. எனவே வாக்களிப்பு நிலையங்களுக்கான உத்தியோகத்தர்கள் மற்றும் மேற்பார்வை செய்கின்ற உத்தியோகத்தர்களாக ஏறத்தாழ 5 ஆயிரம் அரச உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட இருக்கின்றார்கள். இது மட்டுமல்லாமல் வாக்களிப்பு நிலையங்களுக்கும் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களுக்கும் பாதுகாப்பு ஏற்பாடுகளாகப் பொலிஸ் உத்தியோகத்தர்களும் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

அத்துடன் வாக்கெண்ணும் நிலையத்தைப் பொறுத்த வரையில் யாழ்.மத்திய கல்லூரியிலேயே வாக்கெண்ணும் நடவடிக்கைகள் இந்தமுறையும் நடைபெறும். மற்றும் சிரேஷ்ட தலைமை தாங்கும் உத்தியோகத்தர்களுக்கான உரிய பாதுகாப்பு பொருள்களை வழங்குகின்ற நடவடிக்கைகளும் மேற்கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

எனவே இந்த நடவடிக்கைகளுக்கான 44 நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த நிலையங்களிலும் கடமையாற்றுவதற்காக 2 ஆயிரம் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். அதனுடன் இணைந்த வாக்களிப்பு நிலையங்களுக்கான பாதுகாப்பு ஏனைய சுற்றாடலுக்கான பாதுகாப்பைப் பொலிஸார் மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இது தொடர்பில் சிரேஷ்ட பொலிஸ்மா அதிபருடன் கலந்துரையாடப்பட்டுள்ளது. பொலிஸாரும் முழுமையான ஒத்துழைப்பைத் தருவதற்கான உறுதிமொழியை வழங்கியுள்ளனர்.

மேலும் தேர்தல் தொடர்பான விதிமுறைகளை மீறுகின்ற சந்தர்ப்பங்களிலே ஒரு பொதுமகன் தன்னுடைய முறைப்பாட்டை பதிவு செய்வதற்கு இதுவரை யாழ்.மாவட்டத்தில் 5 முறைப்பாட்டு நிலையங்கள் இயங்கி வந்தன. அதனைத் தொடர்ந்து தற்போது சகல பிரதேச செயலகங்களிலும் முறைப்பாட்டு நிலையங்களை அமைத்து அதனூடாகச் செயற்படுத்துமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. எனவே சகல பிரதேச செயலங்களிலும் முறைப்பாட்டு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. எனவே முறைப்பாடுகளைத் தெரிவிப்பவர்கள் இந்த நிலையங்கள் ஊடாக முறைப்பாடுகளை வழங்கலாம். எனவே இந்தத் தேர்தலைச் சுமுகமாகவும் நேர்மையாகவும், அமைதியாகவும் நடத்தவதற்குச் சகல தரப்பினருக்கும் ஒத்துழைப்பு வழங்குமாறும் கேட்டுள்ளார்.

(த–14)




வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சி உறுப்பினரும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளருமான அங்கஜன் இராமநாதனின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் நேற்று நீலப்படையணியால் மாதிரி வாக்குச்சீட்டுகள் விநியோகிக்கப்பட்டன. நீலப் படையணியைச் சேர்ந்தவர்கள் இந்த மாதிரி வாக்குச்சீட்டை மக்களுக்கு விநியோகித்து குறித்த ஒரு கட்சிக்கு வாக்களிக்குமாறு கோரினர். அத்தோடு குறித்த கட்சியை வெற்றி பெறச் செய்வதற்காக அவர்களால் விநியோகிக்கப்பட்ட மாதிரி வாக்குச் சீட்டில் மைத்திரிபாலவின் பெயருக்கு அருகில் சின்னம் காணப்பட்டது. அதனை மேலே காணலாம்.

(த–21–ரி)

## காளை மாட்டை திருடி வெட்டிய மூவர் கைது

தென்மராட்சி, ஜன.6

மேய்ச்சலுக்கு கட்டப்பட்டிருந்த 20 ஆயிரம் ரூபா பெறுமதியான காளை மாட்டைத் திருடி அதனை இறைச்சிக்காக வெட்டிய மூவரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றப் பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை உத்தரவிட்டார்.

சாவகச்சேரி வடக்கு மண்டுவில் பகுதி காணியொன்றில் கடந்த முதலாம் திகதி மேய்ச்சலுக்காகக் கட்டப்பட்டிருந்த மாட்டைத் திருடிச் சென்று கடந்த மூன்றாம் திகதி சங்கத்தானைப் பகுதியில் இறைச்சிக்காக வெட்டிப் பங்கு போட்டு விற்றுள்ளனர்.

மாடுதிருட்டுப் போனமை தொடர்பாக அதன் உரிமையாளர் செய்த முறைப்பாட்டையடுத்து சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு தொடர்புடைய மூவரைக் கைது செய்து நேற்றுமுன்தினம் பதில் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தினார். இந்த மூவரையும் எதிர் வரும் 13 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு பதில் நீதிவான் உத்தரவிட்டார். (த–9)

## காலாவதியாகிய முகக் கிறீம், பெயின்ட் விற்ற இருவருக்கு 20 ஆயிரம் அபராதம்

யாழ்ப்பாணம், ஜன 6

முகத்துக்குப்பூசும் கிறீம் மற்றும் வீட்டுக்குப் பூசும் பெயின்ட் என்பனவற்றைக் காலாவதித் திகதி முடிவடைந்த பின்னரும் விற்பனை செய்தவர்களுக்கு 20 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது யாழ்.நீதிமன்று.

யாழ்.நகரிலுள்ள பான்சி கடை மற்றும் பெயின்ட் விற்பனை செய்யும் கடைகள் என்பனவற்றிலேயே முகக் கிறீம், பெயின்ட் என்பவை காலாவதியான பின்னரும் விற்பனை செய்யப்பட்டு வந்துள்ளன. அங்கு பரிசோதனை மேற்கொண்ட பாவனையாளர் அதிகார சபையின் யாழ். மாவட்ட இணைப்பாளர் வசந்தசேகரன் உள்ளிட்டவர்கள் அவர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தனர். அவர்கள் நீதிமன்றில் தம் மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டனர். அதனையடுத்து அவர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

(த–4)

## வீதியில் சென்ற குடும்பஸ்தரை போதையில் துரத்தி கடித்த நபர்

தென்மராட்சி, ஜன.6

சைக்கிளில் சென்ற குடும்பஸ்தரைத் துரத்திச் சென்று தள்ளி வீழ்த்தி கடித்துக் குதறினார் மதுபோதையில் காணப்பட்ட நபர்.

இதனைக் கேள்வியுற்று ஓடி வந்த கடியுண்டவரின் பெறாமகனைக் கொட்டனால் அடித்துக்காயப்படுத்தினார் அதேநபர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை மட்டுவில் மகா வித்தியாலயத்துக்கு அருகில் இடம்பெற்றது.

தோளில்கடிகாயங்களுக்குஇலக்கான 55 வயது குடும்பஸ்தரும், தலையில் காயமடைந்த 25 வயது இளைஞரும் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த–9)

## ‘வாலையூர் வாலிபரின் நேத்திரம்’ சஞ்சிகை வெளியிடப்பட்டது



இளவாலை வருத்தப்படாதவாலிபர் சங்கத்தின் ‘வாலையூர் வாலிபரின் நேத்திரம்’ சஞ்சிகை வெளியீட்டுவிழா கடந்த 27 ஆம் திகதி இளவாலை புனித அன்னாள் ஆலய முன்றிலில் கோலாகலமாக இடம்பெற்றது. இளவாலை ஊரின் பெருமைகளை எடுத்தியம்ப வேண்டியும் இளவாலையூரின் கலைஞர்கள் மற்றும் எழுத்தாளர்களுக்கு களம் அமைத்துக் கொடுக்கும் முகமாகவும் அரையாண்டு சஞ்சிகையாக வெளிவந்திருக்கும் இந்த ‘நேத்திரம்’ சஞ்சிகையை அளவையூர் எழுத்தாளரும் சமூக சேவை உத்தியோகத்தருமான எஸ். சிவராஜா வெளியிட்டு வைத்தார். இந்த நிகழ்வில் வட மாகாண சபை உறுப்பினர் பா கஜதீபன், வலி.வடக்கு பிரதேச சபை தவிசாளர் சோ.சுகிர்தன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (வ-14)

## ஓய்வூதிய கொடுப்பனவு திகதிகள்

2015ஆம் ஆண்டுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவுத் திகதிகள் வருமாறு:-

தைமாதம் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, மாசி மாதம் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, பங்குனி 10ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, சித்திரை 8 ஆம் திகதி புதன்கிழமை, வைகாசி 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, ஆனி 10 ஆம் திகதி புதன் கிழமை, ஆடி 10ஆம் திகதி வெள்ளிக் கிழமை, ஆவணி 10 ஆம் திகதி திங்கட்கிழமை, புரட்டாதி 10 ஆம் திகதி வியாழக்கிழமை, ஐப்பசி 7ஆம் திகதி புதன் கிழமை, கார்த்திகை 9ஆம் திகதி திங்கட் கிழமை, மார்கழி 10ஆம் திகதி வியாழக்கிழமை. (வ-7)

## வறட்சி நிவாரண சிரமதானம் தென்மராட்சியில் ஆரம்பம்



கொடிகாமம், ஜன.6

உலக உணவுத்திட்டத்தின் வறட்சி நிவாரணத்துக்கான, கிராம மட்டத்திலான சிரமதானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தென்மராட்சி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுகளிலும் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான சிரமதானப் பணிகள் கடந்த 31 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தமது கிராமத்தில் தமக்கென ஒதுக்கப்பட்ட பகுதிகளை, ஒரு நாளைக்கு நான்கு மணித்தியாலங்கள் என்ற அடிப்படையில் 10நாள்களுக்கு சிரமதானப் பணிகளை அவர்கள் மேற்கொள்ள வேண்டும். (வ-105)

# தென்மராட்சிக்கு வன்னிப்பகுதி மாம்பழங்கள்



தென்மராட்சி, ஜன.6

மாம்பழ உற்பத்தியில் பிரபல்யம் பெற்ற தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள சந்தைகளுக்கு தற்போது வன்னி மற்றும் காரைநகர் பகுதிகளிலிருந்து மாம்பழங்கள் கொண்டு வரப்படுகின்றன.

கறுத்தக் கொழும்பான் மாம்பழமொன்று 40 ரூபாவிலிருந்து 50ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது.

தென்மராட்சி பிரதேசத்தில் ஏப்ரல் தொடக்கம் ஜூலை வரையான காலப்பகுதியிலும் நவம்பர் தொடக்கம் ஜனவரி வரையான காலப்பகுதியிலும் மாம்பழங்கள் சந்தைகளில் விற்பனைக்கு கொண்டு வரப்படும். அத்துடன் பருவ காலம் தவிர்ந்த இடைப்பட்ட காலத்திலும் (வம்புப் பழம் என அழைக்கப்படும்) இடைக்கால மாம்பழங்களும் சந்தைகளில் விற்பனை செய்யப்படுவதுடன் விலை ஏற்ற இறக்கத்துடன் வருடம் முழுவதும் சாவகச்சேரி கொடிகாமம் சந்தைகளில் மாம்பழம் விற்பனை செய்யப்படும்.

ஆனால் கடந்த வருட பிற்பகுதியில் மாமரங்கள் பூத்த வேளையில் தொடர்ச்சியாக மழை பெய்ததால் மரங்களில் மிக மிக குறைவாகவே பிஞ்சுகள் பிடித்தன. பல மரங்களில் மாங்காய் காணப்படவில்லை.

சில மரங்களில் காய்கள் காணப்பட்ட போதிலும் குரங்குகளின் தொல்லையால் காயாகப் பிடுங்கப்பட்டு தென்னிலங்கை வியாபாரிகளுக்கு மொத்தமாக விற்பனை செய்யப்பட்டன. இதனால் சந்தைகளுக்கு மாம்பழத்தின் வரவு இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது.

பிள்ளையார் பெருங்கதை, திருவெம்பாவை காலத்தில் மாம்பழம் சந்தைகளில் இல்லாததால் மாம்பழம் வெளியிடங்களிலிருந்து கொண்டு வர வேண்டிய நிலை வியாபாரிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

தினமும் இறக்குமதி செய்யும் அளவுக்கு மாம்பழ விற்பனை அமோகமாக இடம்பெறுவதாக வியாபாரிகள் தெரிவித்தனர். (வ-9)

## வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்ட பாலம்

### கிண்ணியா, குறிஞ்சாக்கேணி மக்கள் அவலத்தில்



மூதூர், ஜன.6

கிண்ணியா, குறிஞ்சாக்கேணி பிரதான பாதையின் பாலம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டது. இதனால் மக்களின் போக்குவரத்து இக்கட்டான நிலைக்குள்ளாகியுள்ளது.

கடந்த சில தினங்களாகக் கொட்டிய கடும் மழை காரணமாக கந்தளாய் தொடக்கம் கிண்ணியா வரையான பகுதிகளின் வெள்ள நீர் குறிஞ்சாக்கேணி பாலம் வழியாக கடலுக்குள் பாய்ந்தது.

பாலத்தை மூழ்கடித்து வெள்ள நீர் பாய்ந்து கொண்டிருந்த நிலையில், பிரதேச மக்கள் டிராக்டர்களின் ஊடாக பாலத்தைக் கடந்து பயணித்து வந்தனர்.

இதன்போது டிராக்டரொன்றும் கடலுக்குள் இழுத்துச் செல்லப்பட்டு அதில் இருந்தவர்கள் தெய்வாதீனமாக உயிர்தப்பிய சம்பவமொன்றும் கடந்த வாரம் இடம்பெற்றிருந்தது. இந்நிலையில் தற்போது வெள்ளம் வடிந்து வரும் நிலையில் குறிஞ்சாக்கேணி பாலம் முற்றாகச் சேதமடைந்துள்ளமை தெரிய வந்துள்ளது. இதன்காரணமாக கிண்ணியா, புகாரியடி பிரதேசத்தில் இருந்து குறிஞ்சாக்கேணி வரையான அரைக் கிலோ மீற்றர் தூரத்தைச் சென்றடைவதற்கு காக்காமுனை ஊடாக 6 கிலோ மீற்றர் தூரம் பயணம் செய்ய வேண்டிய நிலையில் பொதுமக்கள் அவதியுற்று வருகின்றனர். (வ)




அடைமழை, வெள்ளப் பெருக்கால் மிகவும் பாதிக்கப்பட்ட முள்ளிப்பொத்தானை விக்னேஸ்வரா வித்தியாலய மாணவ, மாணவிகளுக்கு திருகோணமலை நகரசபைத் தலைவர் க. செல்வராஜா கடந்த வியாழக்கிழமை தனது பணத்தில் கற்றல் உபகரணங்களை அங்குள்ள அறநெறி பாடசாலையின் அதிபர் ஜெயசீலன் முன்னிலையில் வைத்து வழங்கினார். (வ-40)

## ஆலயங்களைப் புனரமைக்க மாகாணசபை உறுப்பினர் நிதி உதவி

வட மாகாண சபை உறுப்பினர் மயில்வாகனம் தியாகராசாவுக்கு ஒதுக்கப்பட்ட பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியில் இருந்து நெடுங்கேணிப் பிரதேசத்தில் உள்ள 8 ஆலயங்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபா வீதம் புனரமைப்பு வேலைத் திட்டத்துக்கான காசோலைகள் வழங்கப்பட்டன.

சின்னப்பூவரசங்குளம் அரசடி விநாயகர், பட்டிக்குடியிருப்பு அம்மன் கோயில், மாறா இலுப்பைபிள்ளையார் கோயில், கரப்புக்குத்தி பிள்ளையார் கோயில், சின்னடம்பன் ஐயனார் கோயில், கொல்லர் புளியங்குளம்-முனியப்பர் கோயில், அனந்தர் புளியங்குளம் வில்லையடிப் பிள்ளையார் கோயில், நெடுங்கேணி பழைய கந்தசாமி கோயில் என 8 ஆலயங்களுக்கே நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. காசோலை வழங்கும் நிகழ்வில். வட மாகாணசபை உறுப்பினர் மயில்வாகனம் தியாகராசா, பிரதேச சபைத் தலைவர் மு.பாலசுப்பிரமணியம், கலாசார உத்தியோகத்தர் திருமதி விஜிதா, ஆலய பரிபாலன சபைத் தலைவர், கிராம அபிவிருத்தி சங்க தலைவர், செயலாளர் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (வ-421)

# அம்மாடியோவ்!



இவ்வளவு போட்டிகளும் பரிசுகளும் எமக்கா?

| இல | போட்டிகள் | பிரிவு | தரம் | 1ஆம் பரிசு ரூ. | 2ஆம் பரிசு ரூ. | 3ஆம் பரிசு ரூ. | மட்டம் |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | சிறுகதை | A | தரம் 10, 11, 12, 13 | 10,000 | 7,000 | 5,000 | மாகாணம் |
| 02 | கவிதை | A | தரம் 10, 11, 12, 13 | 10,000 | 7,000 | 5,000 | மாகாணம் |
| 03 | கட்டுரை | A | தரம் 10, 11, 12, 13 | 10,000 | 7,000 | 5,000 | மாகாணம் |
| | | B | தரம் 6, 7, 8, 9 | 7,000 | 5,000 | 4,000 | மாகாணம் |
| 04 | ஓவியம் | A | தரம் 10, 11, 12, 13 | 10,000 | 7,000 | 5,000 | மாகாணம் |
| | | B | தரம் 6, 7, 8, 9 | 7,000 | 5,000 | 4,000 | மாகாணம் |
| | | C | தரம் 3, 4, 5 | 5,000 | 4,000 | 3,000 | மாகாணம் |
| 01 | சிறுகதை | A | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| 02 | கவிதை | A | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| 03 | கட்டுரை | A | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| | | B | தரம் 6, 7, 8, 9 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| 04 | ஓவியம் | A | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| | | B | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| | | C | தரம் 3, 4, 5 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |



அகவையில் உதயன்

**தமிழ் வளர்ப்போம் தமிழால் இணைவோம்!**

## ஓவியங்களே!

ஆம்! மாணவச் செல்வங்களைத்தான் அழைக்கின்றோம்!!
ஒவ்வொரு மாணவரும் ஒவ்வொரு ஓவியம்தான்.
ஓவியங்கள் வரையும் ஓவியம்.

உதயன் தனது 30 ஆவது ஆண்டினை முன்னிட்டு நடாத்தும் மாணவச் செல்வங்களுக்கான மாபெரும் ஓவியத் தேர்வு.

தேர்வு செய்யப்படும் ஓவிய மாணவச் செல்வங்களுக்குப் பெரிய அளவிலான பரிசு மழை.

ஓவியத் தேர்வு தரம் 3, தரம் 4, தரம் 5 மாணவர்களுக்கும் நடத்தப்படவுள்ளது.

உங்கள் எண்ணங்களை வண்ணமாக்கி எமக்கு அனுப்பி வையுங்கள்.
அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 28.02.2015.

**புத்தாண்டு அன்று பரிசு மழையில் நனையத் தயாராகுங்கள்.**
**ஆம்! சித்திரைப் புத்தாண்டு தினத்தன்று பரிசுகள் வழங்கப்படும்.**

உங்கள் எண்ண ஓட்டங்களை வண்ண ஓவியங்களாக்கி அனுப்பிவைக்கும் போது உதயன் படிவத்திலே உங்கள் பெயர் விவரங்களை, ஓவிய ஆக்கத்துடன் சேர்த்து அனுப்ப மறந்து விடாதீர்கள். அனுப்ப வேண்டிய முகவரி

**30 ஆவது அகவையில் உதயன்,**
மாணவர் இலக்கியத் தேர்வுகள்
ஆசிரியர்,
உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

உங்கள் எண்ணக் காவியங்களை வண்ணக் காவியமாக்கும் வகையில் ஓவியப் போட்டிக்கான தலைப்புகளைத் தருகின்றோம்.

| பிரிவு | வகுப்புத் தரம் | தலைப்பு |
|---|---|---|
| A | தரம் 10,11,12,13 | தமிழர் பாரம்பரிய விளையாட்டில் ஈடுபடுவோர் |
| B | தரம் 06,07,08,09 | பனை வளமும் நாமும் |
| C | தரம் 03,04,05 | பண்டிகை நிகழ்வு |

35 செ.மீ. x 45 செ.மீ. (14" x 18") அளவுடைய வெள்ளை 'பிறிஸ்டல் போட்' அல்லது வெள்ளை நிற கென்ற் (Kent) தாளில், நீர் வர்ணம், பேஸ்டல் கலர், சோக் என்பன பயன்படுத்தி வரையலாம்.

உரிய பிரிவில் ஒருவர் ஓர் ஆக்கத்துக்கு மேலாகவும், உங்கள் ஆக்கங்களை அனுப்பலாம். ஆனால் ஒவ்வொரு ஆக்கங்களுடனும் தனித் தனி விண்ணப்பப் படிவம் இணைத்தல் வேண்டும். மாணவரது ஆக்கம் என்பதனை உரிய பாடசாலை உறுதி செய்தலும் அவசியம்.

எங்கே?

வர்ணமய உலகில் சஞ்சரித்து உங்கள் ஆக்கங்களைத் தொடங்கலாம். பாடசாலை தொடங்கியதும் உறுதிப்படுத்தி அனுப்பி வையுங்கள். தேவைப்படும் இடத்து மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட தேர்வாளர்கள் மீண்டும் ஒரு ஆக்கம் ஆக்கத் தயாராக இருக்கவேண்டும். அதற்கான வளங்களை நாம் வழங்குவோம்.

***வாழ்த்துக்கள்.***

**உதயன் 30ஆவது ஆண்டு ஆக்க இலக்கியத் தேர்வுகள்**

பங்குகொள்ளும் ஆக்கம்: சிறுகதை/ கவிதை/ கட்டுரை/ ஓவியம்
(பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறி வெட்டிவிடவும்)
பங்குகொள்ளும் பிரிவு:
தரம் 10, 11, 12, 13 A-பிரிவு / தரம் 6,7,8,9, B-பிரிவு / தரம் 3, 4, 5 C-பிரிவு (பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறிவிடவும்)

பங்குபற்றும் மாணவர் பெயர்:-
செல்வன்/செல்வி ..........
சிறுகதை/கவிதை/கட்டுரை/ஓவியத் தலைப்பு
..........
கற்கும் பாடசாலை: ..........
தரம்: ..........

பாடசாலை அமைந்துள்ள மாவட்டம்: ..........
வழிப்படுத்திய ஆசிரியர் பெயர்: ..........
ஆசிரியரின் பாடத்துறை: ..........

அதிபர் பரிந்துரை:
மேற்படி ஆக்கம் எமது பாடசாலையில் தரம் .......... இல் கல்வி கற்கும் செல்வன்/செல்வி .......... அவர்களது சுய ஆக்கம் என்பதனை உறுதிப்படுத்துகின்றேன்.

அதிபரின் ஒப்பமும்
பதவி முத்திரையும்

ஆக்கம் தொடர்பான பணிமனைப் பாவனைக்கு

உதயன்
பத்திரிகையுடன் நாளாந்தம் இணைந்திருங்கள்!

# கருத்து

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## கடமையைச் செய்து உரிமையைக் கேட்போம்

ஜனாதிபதித் தேர்தலில் நாடு முழுவதிலுமுள்ள ஏறத்தாழ ஒன்றரைக் கோடி மக்கள் நாளை மறுதினம் தமது மிக உயர்ந்த, உன்னதமான ஜனநாயக விழுமியங்களின் அதிமுக்கியமானதும், அடுத்தவர் எவருக்கும் விட்டுக்கொடுக்க முடியாததுமான கடமையாகிய வாக்களிக்கும் உரிமையை நிறைவேற்ற உள்ளனர்.

ஆட்சி புரிந்தவர்களும், இனி ஆட்சிக்கு வர இருப்பவர்களும் அன்றைய தினம் ஏனைய மக்களைப் போன்று சாதாரணர்கள் ஆகிவிடுவார்கள். வாக்குரிமை உள்ள ஒவ்வொரு ஆணும் பெண்ணும் அன்று இந்த நாட்டு ஆட்சியாளரைத் தேர்ந்தெடுக்கும் போது சக்திமிக்க நபராக உயர்வு பெற்று விடுகிறார்.

அன்றைய தினம் தனிமனிதர் கையிலிருக்கும் ஒவ்வொரு வாக்குச் சீட்டும் விலை மதிக்க முடியாத அளவுக்கு பெறுமதிமிக்கதாகிவிடும். அந்த ஒரு மனிதரின் ஒருவாக்கே ஒருகோடிக்கு மேற்பட்ட மக்களை ஆட்சி செய்ய உள்ளவர் யார் என்பதை நிர்ணயிப்பதாகவும் அமைந்துவிட முடியும்.

எனவேதான் அந்த ஒரு வாக்கைக்கூட தத்தமது எதிர்த்தரப்புக்குப் போய்விடாமல் இருக்கச் செய்வதற்கு தேர்தலில் போட்டியிடுகிறவர்கள் பெரு முயற்சியில் இறங்கியுள்ளார்கள்.

ஒரு தரப்பினர் தாம் இதுவரை நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் செய்துள்ள சேவைகளையும் அதனால் நாடும் மக்களும் அடைந்துள்ள நன்மைகளையும் எடுத்துக்கூறியுள்ளதுடன், எதிர்த் தரப்பினரின் குற்றம் குறைகளையும் தாம் எதிர்காலத்தில் செய்யப் போகின்றவற்றையும் எடுத்துக் கூறி வாக்காளப் பெருமக்களின் ஆதரவைக் கேட்கின்றார்கள்.

அதே வேளை ஏனைய தரப்பினரும், மிகக் குறிப்பாக எதிரணி பொது வேட்பாளர் இதுவரை ஆட்சியிலிருந்தவர்களின் செயற்பாடுகளை விமர்சித்து வந்ததுடன் எதிர்காலத்துக்கென தாம் வகுத்துள்ள திட்டங்களை வாக்காளர்களுக்கு எடுத்துக் கூறி ஆதரவை நாடியுள்ளார்கள்.

இது பொதுவான நிலைமைதான். ஆனால் வாக்காளர்களைக் கவர்வதற்கென போட்டியிடுபவர்கள் பல்வேறு சட்டத்துக்கு மாறான முறைகளைக் கையாண்டிருப்பதும், பரப்புரைகளின் போது எதிர்த்தரப்பினரை கீழ்த்தரமாக விமர்சித்ததும், தாக்குதல்கள் நடத்துவது போன்றவற்றில் ஈடுபட்டமையும் வெளியாகியுள்ளன.

குறிப்பாக, நாட்டில் இழுபறி நிலையில் இருந்து வரும் தேசியப் பிரச்சினைக்கு எந்தவித தீர்க்கமான யோசனையும் முன்வைக்கப்படாமல், அந்தப் பிரச்சினையின் காரணமாக முளைவிட்டவையும் தேசிய மட்டத்தில் இனக் குரோதத்துக்குத் தூபம் போடுபவையுமான விடயங்களை முன் வைத்தே பெரும்பாலும் பரப்புரைகள் நடைபெற்றுள்ளன.

போரும் அதன் பின் விளைவுகளும் தேர்தல் பரப்புரைக்கு உதவிய அளவில் தேசிய பிரச்சினையை அணுகுவது தொடர்பில் சிறுபான்மை மக்கள் திருப்தி கொள்ளும் வகையில் எதுவும் முன்வைக்கப்படவில்லை.

இந்த நிலையிலேயே நாளை மறுதினம் நாட்டின் ஏனைய மக்களைப் போலவே வடக்கு, கிழக்கு தமிழ்பேசும் மக்களும் வாக்களிப்பில் கலந்து கொள்கிறார்கள். வாக்களிப்பைப் புறக்கணித்து ஒதுங்கி நிற்பது புத்திசாலித்தனமாக கருத இடமில்லை. வாக்களிப்பது எமது உத்தமமான கடமை - கடமையை நிறைவேற்றுவோம். அதன் மீது எமது உரிமைகளை முன்வைத்து பேசுவோம் என்பதே நம்மவர்களின் அணுகுமுறையாக இருக்க வேண்டும்.



# ஆப்கானிஸ்தான் தயாரா?

ஆப்கானிஸ்தானிலிருந்த அமெரிக்கா தலைமையிலான நேட்டோவின் சர்வதேசப் பாதுகாப்பு உதவிப் படை தனது 13 ஆண்டு காலப் பணியை முறைப்படி நிறைவு செய்துள்ளதன் மூலம், ஆப்கானிஸ்தான் இனி சுயமாகவே தலிபான்களை எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால், உள்நாட்டுப் பாதுகாப்பைத் தனியாக உறுதி செய்யும் அளவுக்கு ஆப்கன் இராணுவம் தயாராகியுள்ளதா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

2001, செப்ரெம்பர் 11 அமெரிக்காவின் இரட்டைக் கோபுர தாக்குதலைத் தொடர்ந்து, அல்குவைதா தலைவர் ஒசாமா பின்லேடனையும், தலிபான் பயங்கரவாதிகளையும் ஒழிப்பதற்காக ஆப்கனுக்குள் நுழைந்தது நேட்டோ படை. போன வேகத்தில் தலிபான் ஆதரவு அரசை ஆட்சியிலிருந்து அகற்றிவிட்டாலும், இந்த 13 ஆண்டுகாலப் போரில் நேட்டோ படைக்கு ஏற்பட்டிருக்கும் இழப்பு அதிகம்.



இதுவரை 2,200 அமெரிக்க வீரர்கள் உட்பட நேட்டோ படையைச் சேர்ந்த 3,500 வீரர்கள் ஆப்கனில்– தலிபான்களுக்கு எதிரான போரில் உயிரிழந்துள்ளனர்.

இதுவரையிலான காலகட்டத்தில் ஆப்கானிஸ்தான் அதிக உயிரிழப்பைச் சந்தித்தது கடந்த ஆண்டுதான்.

கடந்த ஆண்டில் மட்டும் 3,200 குடிமக்கள், 4,600 உள்நாட்டு இராணுவத்தினர் மற்றும் அரசு அதிகாரிகள் தலிபான் தொடர்பான தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்தச் சூழ்நிலையில் நேட்டோ படை வெளியேறுவதுதான் ஆப்கன் ஆட்சியாளர்களுக்கு கவலையை ஏற்படுத்தியுள்ளது.

தலிபான்களை எதிர்கொள்ளும் அளவுக்கு ஆப்கானிஸ்தான் இராணுவம் முழு அளவில் தயாராகவில்லை; தலிபான்களின் ஆதிக்கம் முழுமையாகக் கட்டுப்படுத்தப்படவில்லை; அதலபாதாளத்துக்குச் சென்றுவிட்ட நாட்டின் பொருளாதாரம் என இதற்குப் பல காரணங்களைக் கூறமுடியும்.

நேட்டோ படை வெளியேற வேண்டுமா? வேண்டாமா? என்பதிலும் அங்கு இருவேறு கருத்துகள் நிலவுகின்றன.

3,42,000 இராணுவ வீரர்கள், காவல்துறையினர் கொண்ட ஆப்கானிஸ்தானின் பாதுகாப்புப் படைக்கு நேட்டோபடைபல்வேறுபயிற்சிகளை அளித்துள்ளது. பெண்களையும் ராணுவத்தில் சேர்த்தது, சுயமாகவே விமானத் தாக்குதல் நடத்தும் அளவுக்கு ஆப்கன் இராணுவத்தினருக்குப் பயிற்சி அளித்தது என நேட்டோ படை செய்து முடித்துள்ள பணிகள் பல.

மேலும், ஆப்கனிலிருந்து நேட்டோ படை முற்றிலுமாக வெளியேறிவிடவில்லை. ஆப்கன் இராணுவத்துக்கான தொடர் பயிற்சி உள்ளிட்ட உதவிகளுக்காக 10,800 அமெரிக்க வீரர்களும், இவர்களுடன் 2,000 நேட்டோ வீரர்களும் இன்னும் இரு ஆண்டுகளுக்கு ஆப்கானிஸ்தானிலேயே தங்கியிருப்பார்கள். உறுதியான ஆதரவு என இந்த இரண்டு ஆண்டுத் திட்டத்துக்குப் பெயரிடப்பட்டுள்ளது.

இந்தப் படையினர் தலிபான்களுக்கு எதிராக நேரடித் தாக்குதலில் ஈடுபடமாட்டார்கள் என்றாலும், இவர்களின் இருப்பு ஆப்கன் இராணுவத்துக்கு மனதளவில் பெரிய பலமாக இருக்கும்.

பின்னணியில் இருந்து தேவையான உதவிகளை அளித்து, ஆப்கன் ராணுவத்தைச் சுயமாகச் செயல்படவைப்பதே 2016ஆம் ஆண்டு வரையிலான கால கட்டத்தில் நேட்டோ படைக்கு காத்திருக்கும் முக்கியப் பணி. இதற்கான பயிற்சிக்கு ஆண்டுக்கு 500 கோடி டொலர் தேவைப்படும்.

இதுவரையிலான நிதி உதவி வேறு; இனியும் அதே அளவு நிதி உதவி அளிக்க ஒபாமா அரசை அமெரிக்க நாடாளுமன்றம் அனுமதிக்குமா என்பது கேள்விக்குறியே.

மேலும், ஈராக்கைப் போன்ற சூழ்நிலை ஆப்கனிலும் ஏற்படுவதற்கான அபாயம் இருப்பதையும் மறுப்பதற்கில்லை. ஈராக்கில் சதாம் ஹுசேன் வீழ்ச்சிக்குப் பின்னர், அங்கு புதிய ஆட்சியை ஏற்படுத்திவிட்டு, மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் அமெரிக்கப் படை வெளியேறியது.

ஆனால், இந்த மூன்று ஆண்டுகளில் ஈராக் இராணுவம் முற்றிலும் சீர்குலைந்து, இஸ்லாமிய தேச இயக்கம் எழுச்சி பெற்று, ஈராக்கின் முக்கிய பகுதிகளைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளது.

சிரியாவிலும் இஸ்லாமிய தேசம் வலுப்பெற்று, அல்குவைதா, தலிபான்களுக்கு அடுத்தபடியாக அமெரிக்கா மட்டுமன்றி, உலகநாடுகள் அனைத்துக்குமே புதிய அபாயமாக உருவெடுத்துள்ளது.

ஈராக்கில் போரை முடித்துக் கொண்டதாக அதிகாரபூர்வமாக அறிவித்த அமெரிக்கா, ஐ.எஸ்.பயங்கரவாதிகளின் வளர்ச்சியைப் பார்த்து, மத்திய கிழக்கு முழுவதும் அந்த இயக்கம் வலுவடையாமல் தவிர்க்கும் பொருட்டு, ஈராக்கில் மீண்டும் விமானத் தாக்குதலில் ஈடுபட்டு வருகிறது.

அதேவேளையில், ஈராக்கைப் போன்று இனக் குழுக்களுக்கிடையிலான மோதல் ஆப்கானிஸ்தானில் இல்லை என்பதால், பொதுமக்கள் அனைவரும் அரசுக்கும், அரசுப் படைகளுக்குமே ஆதரவாக இருக்கிறார்கள்.

ஆதலால், ஐ.எஸ். போன்று தலிபான்கள் வலிமை பெறுவது கடினம் என அமெரிக்கா நம்புகிறது. ஆப்கானிஸ்தான் ஈராக்கைப் போல வீழுமா? சொந்தக்காலில் நிற்குமா? என்ற கேள்விக்கு விரைவிலேயே விடை கிடைத்துவிடும்.

*(நன்றி: தினமணி)*

# தமிழர்கள் ஏன் வாக்களிக்க வேண்டும்?

திருமுருகன்

2009 ஆம் ஆண்டு மே மாதம், இராணுவ நடவடிக்கை மூலம் தமிழ் மக்களுக்காக போராடிய விடுதலைப் புலிகளின் போராட்டம் முடக்கப்பட்டது. சிங்கள மக்களால், தமிழ் மக்கள் தோற்கடிக்கப்பட்ட வரலாறாகவே அது பதிவு செய்யப்பட்டது. ஆயுத ரீதியாக தமிழ் மக்கள் தோற்கடிக்கப்பட்டிருந்தார்கள். தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசே, தமிழ் மக்களை மீளவும் எழ முடியாதவாறு தோற்கடித்தது.

அதன் பின்னர் வடபகுதியில் ஜனநாயகப் போர் நடந்தது. 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாவது ஜனநாயகப் போர் நடந்தது. அதை, ஆயுதப் போரில் தோற்கடிக்கப்பட்ட தமிழர்கள், எதுவித ஆயத்தமும் இன்றி எதிர்கொள்ள வேண்டியிருந்தது. கட்டம் கட்டமாக மினி முகாம்களை தகர்க்காமல், நேரடியாக தலைமை முகாமுடனானதாக அந்தத் தாக்குதல் அமைந்தது.

தமிழ் மக்களின் தாக்குதல் சரியாக அமைந்திருந்தாலும், ஏனைய களச் சூழல்கள் சரியாக அமையாததால் முடிவு தமிழ் மக்களுக்கு தோல்வியானதாகவே அமைந்தது. தமிழர்களை ஆயுதப் போரில் தோற்கடித்த, மஹிந்த ராஜபக்ஷவே மீண்டும் ஜனாதிபதியாக அந்தப் போரின் முடிவில் தெரிவு செய்யப்பட்டார். சிறிது கால இடைவெளியில் நடந்த, அடுத்த போரிலும் தமிழ் மக்களின் தாக்குதல்கள் சரியானதாக அமைந்தது. ஆனாலும் மாற்றத்தை ஏற்படுத்த முடியவில்லை.

இதன் பின்னரே தமிழ் மக்களின், போர்களுக்கான தயார்படுத்தல்களுக்கு சரியான காலம் அமைந்தது. நின்று – நிதானித்து, பயிற்சி எடுத்து களச்சூழல்களை புரிந்து கொண்டு தாக்குதல் தொடுத்தனர். இதன் போது, சரியான தந்திரோபாயம் வகுக்கப்பட்டு போர் நடத்தப்பட்டது.

முதலில் மினி முகாம்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. 2011 ஆம் ஆண்டு நடந்த அந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ் மக்களின், வாக்கு ஆயுதம் எதிரிகளை தவிடுபொடியாக்கி விட்டது. இதனால் அந்தப் போரில் மினி முகாம்கள் எல்லாம் தமிழ் மக்கள் வசம் வீழ்ந்தன.


இதற்கு அடுத்து, முகாம்கள். இவை மினிமுகாம்களை விடப் பெரியவை. இந்த முகாமை அழிப்பதற்கு தமிழ் மக்கள் மீளவும் ஓரணியில் திரண்டு, வாக்கு ஆயுதத்தைக் கொண்டு தாக்குதல் நடத்தினர். மினி முகாம் அழித்ததில் கிடைத்த வெற்றியை விட, மிகப் பெரிய வெற்றி இந்த முகாமை அழிப்பதில் கிடைத்தது. அந்த வெற்றிதான் வடக்கு மாகாணசபைத் தேர்தல்.

படிப்படியாக ஒவ்வொரு முகாமாக தாக்கியழிக்கப்பட்டுள்ளது. இதனால் பிரதான படை முகாம் இப்போது தனித்து விடப்பட்டுள்ளது. இந்த முகாமை தாக்குவதற்கு, கடந்த காலப் போர்களைப் போன்று தமிழ் மக்கள் ஒன்று திரள வேண்டியிருக்கின்றது. பிரதான படைமுகாமை தாக்குவது அவ்வளவு எளிதானது அல்ல. தமிழ் மக்களின், வாக்கு என்கின்ற ஆயுதப் பலம் மாத்திரம், பிரதான படைமுகாமை அப்புறப்படுத்துவதற்கு போதாது.

எனவே இங்கு எதிரிக்கு எதிரி நண்பன் என்கின்ற வகையில், அந்தப் பிரதான படைமுகாமை அகற்ற நினைக்கின்ற சிங்கள வாக்கு ஆயுதத்தையும், தமிழ் மக்கள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டியுள்ளது.

இது இறுதிப் போர். தமிழரை தோற்கடித்தவர்களை, தோற்கடிப்பதற்கான இறுதிச் சந்தர்ப்பம். இந்தப் போரில் தமிழ் மக்கள் பிரதான படைமுகாமை அழிக்கா விட்டால், ஏற்கனவே மினிமுகாம்களை அழித்ததற்கு எந்தப் பயனும் இல்லை. இந்தப் போரில் தமிழ் மக்கள் தங்களின் ஒட்டுமொத்தப் பலத்துடன் பிரதான முகாமை தாக்க வேண்டியுள்ளது.

எனவே பிரதான படைமுகாம் ஆகிய, ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் தங்கள் வாக்கு என்னும் ஆயுதத்தை கட்டாயம் பயன்படுத்த வேண்டும். இல்லாவிடின், எங்களை தோற்கடித்த அவர்களைப் பழிவாங்குவதற்கு வேறு சந்தர்ப்பங்கள் அமையாது. அமையவும் போவதில்லை.



திருமணமான இரண்டு தினங்களில், இளைஞர்கள் இனந்தெரியாதோர் என்ற போர்வையில் வீதி வீதியாக சுட்டுக் கொல்லப்பட்டார்கள். அதனால் ஏதிலிகளான விதவைகள் இன்னமும் எங்கள் ஊரில் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றார்கள். எங்கள் உறவுகள் இரவோடு இரவாக வெள்ளை வான்களில் துணைப் படைகளாலும், ஆயுதப் படைகளாலும் 2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரையில் கடத்திச் செல்லப்பட்டார்கள். அவர்களைக் கடத்திய கைக்கூலிகள் யார் என்று தெரிந்தும் அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப் படவில்லை. அதற்குக் காரணம் என்ன ? ஆட்சி அதிகாரத்தில் பலமாக அவர்கள் இருக்கும் வரையில் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படப் போவதில்லை.

எனவே எங்கள் உறவுகளை வெள்ளைவானில் கடத்தி விட்டு இன்று வெள்ளை வேட்டியுடனும், தாடியுடனும் உலாவரும் அவர்களை, சட்டத்தின் முன் கேள்விக்கு உட்படுத்த வேண்டுமானால், அவர்களை ஆட்சி அதிகாரத்தில் இருந்து தூக்கி எறிய வேண்டும். அதற்காகவும் இந்த ஜனாதிபதித் தேர்தல் என்கின்ற பிரதான முகாம் தாக்கியழிப்பு நட்வடிக்கையில் ஒவ்வொரு தமிழனும் பங்கெடுக்க வேண்டும்.

மாவிலாறு தொடங்கி முள்ளிவாய்க்கால் வரையில் குண்டுகள் போட்டு எங்கள் குழந்தைகளை துடிதுடிக்க கொலை செய்தவர்களை, பிறந்த பிஞ்சுகள் இறந்து போன தாயின் மார்பில் பால் குடித்த சோகங்களைத் தந்தவர்களை, இன்றும் எங்கள் உறவுகள் ஊனமாக உலாவும் வாழ்வை பரிசாகக் கொடுத்தவர்களை, இறுதிக் கட்டத்தில் கண்முன்னே இராணுவத்திடம் கையளித்த உறவுகள் இன்று வரை வீடு திரும்பாமல் இருக்கச் செய்தவர்களை, கொத்துக் குண்டுகளும் – பொஸ்பரஸ் குண்டுகளும் வீசி புல்லும் பூண்டும் முளைக்காமல் எங்கள் வாழ்க்கையை தரிசாக்கியவர்களை,

இலைகஞ்சிக்குக்கூடவரிசையில் நிற்க வைத்தவர்களை, அவ்வாறு வரிசையில் நிற்கையில் விமானத்தில் வந்து எங்கள் மீது குண்டு போட்டவர்களை, கை கால்களை வெட்டி சத்திர சிகிச்சை செய்வதற்கு மயக்க மருந்தின்றி வேதனையின் உச்சத்தை அனுபவிக்க தந்தவர்களை, வெள்ளைக் கொடி ஏந்தி வந்தவர்களை வெட்டிக் கொலை செய்தவர்களை, நிராயுதபாணிகளான எங்கள் பெண்களை தங்கள் பாலியல் விளையாட்டுப் பொருளாக்கியவர்களை, தண்டிப்பதற்கு ஒவ்வொரு தமிழனும் வாக்களிக்கத்தான் வேண்டும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை, சர்வதேச விசாரணையிலிருந்து பாதுகாப்பேன் என்று பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன சிங்கள வாக்குகளுக்காகச் சொல்லலாம். ஆனால் அது உண்மையில் நடக்கப் போவது கிடையாது.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தோற்றதும் அவரை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சிறைக்குள் அடைத்துப் பழிவாங்கினார். முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவிடமிருந்து அவரது கட்சியைப் பிடுங்கி அவரைப் பழிவாங்கினார். இவர்கள் ஜனாதிபதி மஹிந்தவை பழிவாங்காமல் விடுவார்களா ?

யார் குற்றினாலும் எங்களுக்கு அரிசியானால் சரி. நாங்கள் பழிவாங்க வேண்டியவர்களை, அவர்கள் பழிவாங்கினாலும் விளைவு ஒன்றுதான். தமிழர்களைத் தோற்கடித்ததாக கொக்கரிக்கும் ராஜபக்ஷக்களை, நாங்கள் தோற்கடிக்க வேண்டுமாக இருந்தால் கிடைத்திருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தை இழக்க முடியாது.

தமிழினத்தின் துரோகிகளாக இருந்து இன்றும் தமிழ் மக்களைச் சீரழித்துக் காட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கும் புல்லுருவிகளைப் பழிவாங்குவதற்கும் இதுதான் தருணம். எனவே தமிழ் மக்கள் மாற்றத்துக்காக மட்டுமல்ல, பழி தீர்ப்பதற் காகவும் இந்தத் தேர்தலில் வாக்களிக்க வேண்டியவர்களே.

> “ முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தோற்றதும் அவரை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சிறைக்குள் அடைத்துப் பழிவாங்கினார். முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவிடமிருந்து அவரது கட்சியைப் பிடுங்கி அவரைப் பழிவாங்கி னார். இவர்கள் ஜனாதிபதி மஹிந்தவை பழிவாங்காமல் விடுவார்களா ?

# வாசகர் திருமுகம்

## அம்பாளின் கடாட்சம் கிடைக்கட்டும்

மார்கழி மாதத்தில் வரும் திருவாதிரை நட்சத்திரத்துக்கு முதல் ஒன்பது நாள்களையும் கொண்டமைவது திருவெம்பாவை நோன்புக் காலமாகும். திருவெம்பாவை உற்சவகாலத்தை தமது மஹோற்சவ காலமாகவும் கொண்ட திருத்தலங்களில் குரும்பசிட்டி அருள்மிகு முத்துமாரிஅம்பாள் ஆலயமும் ஒன்று. மார்கழி நோன்புக் காலத்தில் அதிகாலை துயிலெழுந்து நீராடி திருவெம்பாவைப் பாடல்களை வீதி தோறும் அவற்றுக்கே உரிய பண்ணில் பஜனை பாடி உளம் உருகி மாரியின் மஹோற்சவத்துடனும் இரண்டறக் கலந்து நிற்கும் பெருமைபெற்றது குரும்பசிட்டி.

தவிர்க்க முடியாததொரு இடப்பெயர்வு நிலைமையாலும் கிராமம் முற்றாக உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் அகப்பட்டிருந்தமையாலும் ஏறத்தாழ இருபது வருடங்களுக்கு மேலாக இப்பெரும் பேற்றை மக்களால் அனுபவிக்க முடியவில்லை.

2010ஆம் ஆண்டளவில் கிராமத்தின் ஒருபகுதி மீள் குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்டிருந்த வேளையில் தரைமட்டமாக்கப்பட்டிருந்த தமது இல்லங்களுக்கு முன்னதாக அம்பாள் ஆலயத்தை சீரமைப்பதையே தமது பணியாகக் கொண்டுமக்கள் செயற்பட்டனர். பாடிப்பணிந்துன்னைப்பலகாலம் தொழுவதற்கு நீடித்திருந்திடம்மா நிலையாக எம்பதியில் என்று மனமுருகி வேண்டிநின்ற மக்களுக்கு அருள்மிகு முத்துமாரி அம்பாள் துரிதகதியில் பணிகளை நிறைவேறச்செய்து கும்பாபிஷேகத்தைக் காணும் பாக்கியத்தையும் மீளக் குடியமரும் பாக்கியத்தையும் கொடுத்தாள்.

கிராமத்தின் மத்தியில் அமைந்து அருளாட்சி புரிந்த ஆலயம் இன்று கிராமத்தின் ஒரு பகுதியே மீள்குடியமர விடப்பட்ட நிலையில் உயர் பாதுகாப்பு வலய எல்லையில் அமைந்து எல்லையில்லா அருளை நல்கி வருகிறது. மார்கழி நோன்புடன் கூடி வரும் தனது மஹோற்சவத்தை இந்த ஆண்டு இரண்டாவது தடவையாக இந்த ஆலயம் கொண்டாடுகின்றது.

அயல் கிராமங்களைக்கூட தமது அருளாட்சி வீச்சுக்குள் உட்படுத்தியிருந்த அருள்மிகு முத்துமாரி அம்பாள் ஆலயம் எதிர்காலத்தில் மீண்டும் கிராமத்தின் மத்தியில் தோற்றமளிக்கக்கூடிய வகையில் கிராமத்தின் ஏனைய பகுதிகளும் விடுவிக்கப்பட வேண்டும். கிராம மக்கள் சுபீட்சமாக வாழக்கூடிய இயல்நிலைகள் ஏற்படவேண்டும். அம்பாளின் இவ்வாண்டு மஹோற்சவமானது தேர்த்திருவிழாவுடனும், தீர்த்தோற்சவத்துடனும் நிறைவுறுகிறது.

இந்த மஹோற்சவத்தைக் காணக் கிடைக்காத வெளிமாவட்டங்களிலும் வெளிநாடுகளிலும் வதியும் அம்பாள் அடியவர்களுக்கு அருள்மிகு முத்துமாரி அம்பாளின் திருவருள் கடாச்சம் கிட்டவேண்டும் எனப் பிரார்த்திப்போமாக.

அருண். சக்திவேல்
குரும்பசிட்டி.

## போக்குவரத்தில் சிரமங்கள்

ரயில் பாதையில் அதிக உயரத்தில் பொருத்தப்பட்டுள்ள தண்டவாளங்களைக் கடந்து செல்வதில் மக்கள் கடுமையான சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

முன்னரெல்லாம் சிறிய ஒழுங்கைகள் ஊடாகச் சென்று தண்டவாளத்தைக் கடந்து செல்வதில் சிரமம் இருக்கவில்லை. ஏனென்றால் ரயில்பாதை மக்கள் கடந்து செல்லும் வகையில் அமைக்கப்பட்டிருந்தது. ஆனால், தற்போது அதிக உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளதால் வேறு வீதிகளை நாடவேண்டியுள்ளது. அதிலும் வீதிகளுக்கு மேலாக அதிகளவு உயரத்தில் ரயில் பாதை அமைக்கப்பட்டுள்ளதால் அவற்றினூடாக மோட்டார் சைக்கிள், சைக்கிள் ஆகியவற்றில் பயணிப்பவர்கள்சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

சுன்னாகம் –புத்தூர் பிரதான வீதியிலும் இந்த நிலை காணப்படுகின்றது. இதனால் பெரிய வாகனங்களில் செல்பவர்களும்சிரமப்படுவதைக்காண முடிகின்றது.

யாழ்ப்பாணத்தில் ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டது நல்லதுதான். இங்குள்ள மக்கள் வெளியிடங்களுக்குச் செல்வதில் இருந்த சிரமங்கள் குறையும். ஆனால் உள்ளூரில் மக்கள் எதிர்கொள்ளப் போகும் இடையூறுகளை நினைத்துப் பார்க்காதது தான் வேதனையைத் தருகின்றது.

*ம.சுப்பிரமணியம், சுன்னாகம்.*

கேலிச் சித்திரம்




நன்றி: லங்காதீப

# ஆடாத ஆட்டம் எல்லாம் போட்டவர்கள் மண்ணுக்குள்ளே !

விஜயின் நடிப்பில் 2004ஆம் ஆண்டு வெளிவந்த கில்லி திரைப்படம் பார்த்திருப்பீர்கள். மிகப் பெரும் வெற்றி பெற்ற அந்தப் படத்தில், ஒரு காட்சி இடம் பெற்றிருக்கும்.

விஜய் விளையாடும் கபடி அணி இன்னொரு அணியுடன் போட்டியில் பங்கேற்கும். அந்தப் போட்டியின் முதல் பாதியில் விஜய் வரமாட்டார். விஜயின் அணியிலுள்ள வீரர்கள், எதிரணியுடன் மோதி தோற்கும் நிலைக்குச் செல்வார்கள். எதிரணியில் விளையாடும் அந்த அணியின் தலைவர், தனது விரல்களுக்கு இடையில், பிளேட்டை வைத்து, விஜயின் அணி வீரர்களுக்கு காயத்தை ஏற்படுத்தித் தோற்க வைப்பார்.

இடைவேளையின் பின்னர் விஜய் குறித்த போட்டியில் களமிறங்குவார். அப்போது விஜய்க்கும் பிளேட்டால் வெட்டி தோற்கடிக்க முயல்வார். இதன் போது விஜய், அவரை மடக்கி விட்டு ஒரு பஞ்ச் வசனம் சொல்வார். "நீ இம்மாந்துண்டு பிளேட் மேல எப்ப நம்பிக்கை வைச்சியோ அப்பவே நீ தோத்திட்டாய். அந்த பிளேட் மேல வைச்ச நம்பிக்கையை உன் மேல வைச்சிருந்தீன்னா, ஜெயிச்சிருப்பே!" என்பார்.

தற்போதைய ஜனாதிபதித் தேர்தலுக்கும் இந்த வசனத்துக்கும் நிறையவே தொடர்பு இருக்கின்றது. இந்தத் தடவை மீண்டும் மீண்டும் மீண்டும் போட்டியிடும் அரசியல் தலைவர் ஒருவருக்கு இந்த வசனங்கள் சாலப் பொருந்தும். ஏனெனில் அவருக்குத் தன் மீதான நம்பிக்கை அறவே இல்லாமற் போய் விட்டது. அதனால்தான், பொது எதிரணி வேட்பாளரை வீழ்த்துவதற்கு குறுக்கு வழிகளைக் கையாளத் தொடங்கியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில், ஆர்.ஏ.சிறிசேன என்ற நாடகக் கலைஞரை களமிறக்கினார். பொது எதிரணி வேட்பாளரின் தோற்றத்தை ஒத்த அவரைக் களமிறக்கியது மாத்திரம் அல்லாமல், மைத்திரிபால சிறிசேனவின் உடை அலங்காரத்தைப் போன்றே ஆர்.ஏ.சிறிசேனவுக்கும் உடை அலங்காரத்தைச் செய்து, மக்களைக் குழப்பும் நூதன திட்டமும் முன்னெடுக்கப்படுகிறது.

அது மாத்திரம் அல்லாமல், பொது எதிரணி வேட்பாளரது பரப்புரைக் கூட்டங்கள் மீது கல் வீச்சுத் தாக்குதலும், துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களுக்கும் குறைவில்லை. எப்பாடுபட்டாவது வெற்றி பெற்றுக் கொள்ளவேண்டும்என்பதில் குறியாகஇருக் கிறார்கள் என்பதையே இது எடுத்துக் காட்டுகிறது.


கில்லி படத்தில் விஜய் சொல்வதைப் போல, முக்கிய வேட்பாளர் பிளேட்டின் மீதுதான் நம்பிக்கை வைத்திருக்கின்றார். தன் மீதான நம்பிக்கை இழந்து விட்டார்.

ஆடாத ஆட்டம் எல்லாம் போட்டவர்கள் மண்ணுக்குள்ளே போன கதை உனக்குத் தெரியுமா ? என்ற பாடல் வரிகளைத் தான் இப்போதைக்கு நேயர் விருப்பமாகக் கேட்க முடியும்.

பத்தி எழுத்து

## என்னோட பசு


ஒரு கிராமத்தில் ஒருவன் இருபது பசுக்கள் கொண்ட மந்தையை வைத்திருந்தான். மற்றொருவன் பத்துப் பசுக்களை கொண்ட மந்தையை வைத்திருந்தான். அவர்கள் இருவரையும் பெரிய மந்தைக்காரன், சின்ன மந்தைக்காரன் என்று ஊரார் சொல்வது வழக்கம். பெரிய மந்தைக்காரன் ஒரு சமயம் குடும்பத்தோடு வெளியூர் போக நேரிட்டது. அப்போது தன்னுடைய மந்தையைக் கவனித்துக் கொள்ளும்படி, சின்ன மந்தைக்காரனிடம் சொல்லிவிட்டுச் சென்றான். சின்ன மந்தைக் காரனோ போனவன் திரும்பி வருவதற்குள் தன்னிடமிருந்த ஆரோக்கியம் குறைந்த மூன்று கன்றுகளையும் அவனுடைய மந்தைக்குள் புகவிட்டு, அதற்குப் பதிலாக மூன்று திட உடல்வாகு கொண்ட கன்றுகளைத் திருட்டுத்தனமாகக் கொண்டு வந்து தன்னுடைய மந்தையில் சேர்த்துக் கொண்டான். வெளியூர் சென்றிருந்த பெரிய மந்தைக்காரன் திரும்பி வந்தான். கன்றுகள் மாறியிருப்பதை அவன் கவனிக்கவில்லை. சில நாள்களில் நோய் வந்து அவனுடைய மந்தையில் இருந்த பசுக்களும், கன்றுகளும் மாண்டு போயின. தனது குடும்பத் தேவைக்கே பால், நெய், மோர் இல்லாமல் கஷ்டப்பட்டான் பெரிய மந்தைக்காரன். சின்ன மந்தைக்காரன் திருட்டுத்தனமாக



மாற்றிக் கொண்ட மூன்று கன்றுகளும் பெரியதாகி வளர்ந்து, கன்று போட்டுப் பால் கொடுக்க ஆரம்பித்தன. ஒருநாள் பெரிய மந்தைக்காரன், சின்ன மந்தைக்காரனிடம் பால் வாங்கிக் காய்ச்சிக் குடிக்க நேர்ந்தது. அந்தப் பாலின் ருசியைக் கண்டதும், இந்தப் பாலைக்கறந்தபசு தன்னுடையது என்பதைஉணர்ந்துகொண்டான். தான் வெளியூர் சென்றிருந்தபோது சின்ன மந்தைக்காரன் தன்னுடைய கன்றுகளைத் திருடி வளர்த்திருக்கிறான். ஆகையால் அது என்னைச் சேர்ந்தது என்று நீதிமன்றத்தில் முறையிட்டான் பெரிய மந்தைக்காரன். சின்ன மந்தைக்காரனைக் கூட்டி வரச் சொல்லி விசாரித்தார் மரியாதை ராமன். "தகுந்த சாட்சியத்தோடு அதை நிரூபித்தால், நான் நீதிமன்றம் விதிக்கும் தண்டனையை ஏற்றுக் கொள்கிறேன். இல்லையானால், என் மீது திருட்டுக் குற்றம் சுமத்தியுள்ள அவன் தண்டனைக்கு உள்ளாகட்டும்," என்று எதிர்வாதம் செய்தான் சின்ன மந்தைக்காரன். மரியாதை ராமன், அவர்கள் இருவரையும், பதினைந்து நாள்கள் சென்ற பிறகு மறுபடியும் வருமாறு உத்தரவிட்டார். அதன்பின், ஆட்டு எரு, மாட்டு எரு, குப்பை எரு ஆகிய மூன்றையும் தனித்தனியாகக் கீரைப் பாத்தியில் போட்டு விதைத்துப் பயிராக்கி, அம்மூன்று வகைக் கீரைகளையும் பறித்து ஒன்றாகக் கலந்து சமையல் செய்யுமாறு சொல்லி, அவற்றோடு பசுவின் தயிர், எருமைத் தயிர், ஆட்டுத் தயிர் மூன்றையும் ஒன்றாகக் கலந்து, பெரிய மந்தைக் காரனுக்கும், சின்ன மந்தைக்காரனுக்கும் விருந்து அளிக்கிற பாவனையில் இருவரையும் சாப்பிடும் படியாக ஏற்பாடு செய்தார் மரியாதை ராமன். இருவரும் சுவைத்து நன்றாகச் சாப்பிட்டனர். 'விருந்தின் ருசி எப்படி இருந்தது?" என்று கேட்டார் நீதிபதி. சின்ன மந்தைக்காரன் எதுவும் கூறவில்லை. "மூவெருவின் கீரையோடு முப்பாலின் நற்றயிரும் நாவார நான் ருசி கண்டேன்," என்றான் பெரிய மந்தைக்காரன். அதிலிருந்து உண்மையை உணர்ந்து கொண்ட நீதிபதி, அவன் யோக்கியன் என்பதைப் புரிந்து கொண்டார். பிரதிவாதியான சின்ன மந்தைக்காரனைப் பயமுறுத்தி அவன் வாய் மூலமாகவே, அவனுடைய திருட்டுச் செயலை வெளிப்படுத்தி, பசுவைப் பெரிய மந்தைக்காரனிடம் ஒப்படைக்கச் செய்யும்படி உத்தரவிட்டு, திருட்டுக் குற்றத்துக்கு சின்ன மந்தைக்காரனுக்குத் தண்டனையும் விதித்தார் மரியாதைராமன்.

## கவனமா இருக்கணும்!

*அதிர வெடிக்கும் அணுகுண்டு*
*பொறியாய் பறக்கும் புஸ்வானம்*
*பெரிதாய் வெடிக்கும் லட்சுமிவெடி*
*பூவாய்ப் பொரியும் மத்தாப்பு*
*தொடர்ந்து வெடிக்கும் சரவெடி*
*விட்டுவிட்டு வெடிக்கும் பொட்டுவெடி*
*இத்தனை வெடியும் வெடிக்கத்தான்*
*இனிதே வருது புத்தாண்டு!*
*வெடியை வெடிக்கும் தம்பியே*
*விரும்பி வெடிக்கும் தங்கையே*
*கவனமா நீயும் வெடிக்கணும்*
*கையில் வைத்துக் கொளுத்தாம*
*எட்ட நின்றே கொளுத்தணும்*
*வெடிக்கும் வெடியின் ஓசைதான்*
*நாள் முழுதும் கேட்க ஆசைதான்!*





### ஆசிரியர் தேவை

தனியார் கல்வி நிலையத்தில் தரம் 9, 10, 11க்கு தமிழ், விஞ்ஞானம் கற்பிக்க ஆசிரியர்கள் தேவை.
(55572)(12.7) தொடர்பு: 077 589 0073

### தேவை

நெல்லியடியிலுள்ள தையல் நிலையத்துக்கு அனுபவமுள்ள (Tailor) தையல் வேலை தெரிந்த ஆண்/பெண் தேவை. தையல் வேலை பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.
தொடர்பு: (54164)(10.7)
077 670 5370, 077 930 2947

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



இல.131, பாண்டியன் குளம்,
வவுனிக் குளத்தைச் சேர்ந்த
செல்வி **இராசையா நளினி** (ஆசிரியை)
அவர்கள் வவுனியா
நீதி நிர்வாக வலயத்திற்கான
சமாதான நீதிவானாக 21.11.2014
அன்று வவுனியா
மேல் நீதிமன்ற நீதவான் **வி.இராமகமலன்** அவர்கள்
முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.
இதனைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
Best Wishes
**வாழ்த்துவோர்:**
**தெய்வேந்திரம் சரஸ்வதி, உறுப்பினர்.**
**மாந்தை கிழக்கு பிரதேசசபை, பாண்டியன் தாழ்வு.**
(51322)(4.7)

### சேவை நலன் பாராட்டு



செல்வி **பரமேஸ்வரி வல்லிபுரம்**
யாழ். போதனா வைத்தியசாலையில் கடந்த
22 வருட காலமாகத் தாதிய உத்தி
யோகஸ்தராகப் பணி புரிந்து கடந்த
23.12.2014 இல் ஓய்வில் சென்ற
செல்வி. பரமேஸ்வரி வல்லிபுரம் அவர்களை
நோய் நொடியின்றி நீடூழி வாழ எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
**தாதிய உத்தியோகத்தர்.**
**நலன்புரிக்கூட்டுறவுச்சங்கம், யாழ்ப்பாணம்.**
(55570)(4.3.7)

### சேவை நலன் பாராட்டு

Congratulations!
செல்வி **ராஜினி தவராஜலிங்கம்**



யாழ். போதனா வைத்தியசாலையில்
கடந்த 32 வருடங்களாகத் தாதியாகவும்,
பொறுப்புத்தாதிய உத்தியோகத்தராகவும்
கடமையாற்றி 25.11.2014 அன்று ஓய்வில்
சென்ற திருமதி **ராஜினி தவராஜலிங்கம்**
அவர்களை நீண்ட காலம் நோய்நொடி
இன்றி நீடூழி வாழ எல்லாம்
வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
**தாதிய உத்தியோகத்தர்,**
**நலன்புரிக்கூட்டுறவுச்சங்கம், யாழ்ப்பாணம்.**
(55571)(4.3.7)

### வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், அரியாலையில் கனகரட்ணம் வீதி, வேலப்பர் ஒழுங்கையில் அமைதியான சூழலில் 3 பரப்புக் காணி, நல்ல தண்ணீர் கிணறு, 6அடி பாதையுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
(55559)(12.7) தொடர்பு: 077 627 2629/077 500 4869

### தேங்காய் விற்பனைக்கு

உரிக்காத முழுத் தேங்காய்
மொத்தமாக
விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 645 8511
கிளிநொச்சி. (51321)(4.3)

### வேலையாள்கள் தேவை

கொழும்பு - யாழ்ப்பாணம் அனுபவம் முள்ள கனரக வாகன சாரதி தேவை.
* லொறி உதவியாளர் (கிளீனர்) தேவை.
(55569)(12.7) தொடர்பு: 077 573 6003

### தவறிவிட்டது

தண்ணீரூற்று, முள்ளியவளையைச் சேர்ந்த யோகலிங்கம் கோகிலன் என்பவருடைய தேசிய அடையாளஅட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம், என்பன பேர்ஸ்சுடன் பரந்தனுக்கும் - முல்லைத்தீவுக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.
(55573)(12.7) தொடர்பு: 077 033 8738

### மணமகள் தேவை

*80 இல்பிறந்த 8இல் சூரியன் செவ்வாய் 62 1/2 பாவமுடைய சுவிஸ் பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.

*81 இல் பிறந்த 10இல் சூரியனும் செவ்வாயும் 29 பாவமுடைய பட்டதாரி ஆசிரியருக்கு மணமகள் தேவை.

*83இல் பிறந்த 4இல் சூரியனும் செவ்வாயும் 34 பாவமுடைய BSc இஞ்சினியர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.

*82,இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 40 பாவமுடைய சைவ போசன டாக்டர் மண மகனுக்கு சைவ போசனமுள்ள பட்டதாரி மணமகள் தேவை.

*85இல் பிறந்த 11இல் சூரியனும் செவ்வாயும் 45 1/2 பாவமுடைய சிங்கப்பூரில் இஞ்சினியராக பணி புரியும் மணமகனுக்கு பட்டதாரி அல்லது படித்த மணமகள் தேவை.

*85 இல் பிறந்த 9இல் சூரியனும் செவ்வாயும் 11 பாவமுடைய பட்டதாரி மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.

**கமலக்கண்ணன் திருமணசேவை**
இல. 62 இராமலிங்கம் வீதி,
பூங்கனிச்சோலையடி, முடமாவடி.
தொ.பே - 077 607 0862

### செல்லா சினிமா யாழ்ப்பாணம்

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது
ஆர்யா, ஹன்சிகா நடிப்பில்
**மீகாமன்**
(தினசரி 4 காட்சிகள்)
10.30, 2.30, 6.30, 9.30
AC / DTS
தைப்பொங்கல் வெளியீடு
விக்ரம் நடிப்பில் ஐ



## ஆக்கம்

# இந்த ஆண்டின் முக்கிய நாவல்கள்

**2014** ஆம் ஆண்டின் முதலிடத்தில் இருக்கும் 10 கிராபிக்ஸ் நாவல்கள் இவைதான். உலகளவில் பிரபலமான, நமக்கு மாயாவி கதைகளாகப் பரிச்சயமான நாவல்கள் இன்னமும் பிரபலமானவையாகவே வாசிப்புத் தளத்தில் இருக்கின்றன. கடந்த வருடம் தமிழிலும், பிற உலக மொழிகளிலும் அவ்வாறு வெளிவந்த வரைகலை நாவல்களின் பட்டியலும், அவை சொல்லும் பிரதான கதைகளும் இங்கே தரப்படுகின்றன. முயற்சித்தால் நீங்களும் படிக்கலாம்.

தமிழ் காமிக்ஸ் நில் கவனி சுடு (ஏப்ரல் 2014) கதை: பொசெல்லி, ஓவியம்: மஸ்டாண்டு வோனோ, வெளியீடு: லயன் காமிக்ஸ்

இந்த அமெரிக்க சாகசக் கதையில் தொட்ர்க்கொள்ளைகளையும், கொலைகளையும் செய்யும் ஒரு நகரத்தின் காவல்துறை அதிகாரிகளின் மீது சந்தேகப்பட்டு, துப்பறிந்து வேரறுக்கிறார்கள் சாகச ஹீரோக்கள். அமெரிக்காவின் மேற்குக் காட்டுப் பகுதியில் நடந்த ஒரு உண்மைச் சம்பவத்தை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட கதை. 6 அடி இடைவெளியில் இரண்டு தரப்பினருக்கிடையே வெறும் முப்பது வினாடிகளே நீடித்த இந்த சண்டையில் 30 தோட்டாக்கள் சுடப்பட்டனவாம். அமெரிக்காவின் பிரபல காமிக் ஹீரோவை வில்லனாக்கி உலகுக்கு உண்மையைக்காண்பிக்க ஆசைப்பட்ட ஒரு இத்தாலிய நிறுவனத்தின் புனைவே இந்த நில், கவனி, சுடு. வரலாற்றில் ஹீரோக்களாக இருந்த சட்டப் பரிபாலன அதிகாரிகள் வில்லன்களாகவும், நமது காமிக்ஸ் நாயகர்களான டெக்ஸ் வில்லர் குழு உண்மை ஹீரோக் களாகவும் இந்தக் கதையில் வடிவமைக்கப்பட்டுள்ளனர்.

தமிழ் காமிக்ஸ்: விரியனின் விரோதி (ஜூலை 2014)

கதை: டோரிசன் சேவியர், ஓவியம்: ரால்ஃப் மேயர், வெளியீடு: ஷன்ஷைன் லைப்ரரி (லயன் காமிக்ஸ்)

ஐரோப்பிய காமிக்ஸ் வரலாற்றில் கடந்த 30 ஆண்டுகளில் வெளியான கதைகளில் மிக முக்கியமான எதிர்நாயகனாகக் கருதப்படும் மங்கூஸ் என்ற கதாபாத்திரம் உருவான கதைதான் இந்த க்ரைம் திரில்லர் கிராபிஃக் நாவல்.

1984-ம் ஆண்டு வெளியான முதல் பாகம் முதல் 2007-ம் ஆண்டு வெளியான 19-வது பாகம்வரை உலகின் 13 மொழிகளில் வெளியான XIII (13 தமிழில் ரத்தப் படலம்) கதையை வாசித்த அனைவருமே வெறுக்கும் கதாபாத்திரம் மங்கூஸ். இவன் ஒரு தொழில்முறை கொலையாளி. நினைவு தவறி தோளில் XIII (13) என்ற பச்சை குத்தப்பட்ட அடையாளத்தை தவிர வேறெதுவும் நினைவில் இல்லாமல் இருக்கும் ஒரு இளைஞனை மங்கூஸ் தேடிவருவதில் முதல் பாகம் தொடங்குகிறது.

தன்னைத்தானே தேடியலையும் இந்த விந்தை மனிதன் ரசிகர்களுக்குப் பிடித்துப்போக, ஒருமாபெரும்காமிக்ஸ் தொடர் ஆரம்பித்தது.

ஆனால், ஒரே ஒரு புத்தகத்தின் மூலம் அந்த ரசிகர்களை தன் பக்கம் இழுத்துக்கொண்டான் மங்கூஸ். விதிவசத்தால் தொழில் முறை கொலையாளியாக மங்கூஸ் எப்படி மாறுகிறர்ன் என்பதைஇதில்படித்தவுடன்,உணர்ச்சி வசப்படாமல் இருக்க முடியாது.

இந்திய காமிக்ஸ்: The Skull Rosary (டிசம்பர் 2013) கதை: ஸ்வேதா தனேஜா, ஓவியம்: விவேக் கோயல், வெளியீடு: ஹோலி கௌ என்டெர்டைன்மண்ட். சிவபுராணக் கதைகளுக்கு முன்னோடியான லிங்க புராணத்தின்படி சிவபெருமானுக்கு ஐந்து தலைகளும், பஞ்சமுகி என்ற பெயரும் உண்டு. இந்த ஐந்துக்கும் ஒவ்வொரு கதையின் மூலம் விளக்கம் அளிக்கிறது இப்புத்தகம்.

> **“ பாதாள உலகின் அரசன் ஹிரண் யாட்சனின் மகனான அந்த காசுரன் பிறப்பி லிருந்தே பார்வை யற்றவனாக இருந்து, கடும் தவத்தின் மூலம் பார்வையைப் பெற்று ஆணவம் கொண்டு உல கையே தன்வச மாக்கிக் கொள் கிறான். ஒரு கட்டத் தில் பார்வதிக்காக, சிவபெருமானையே எதிர்க்கத் துணிகிறான். ”**

பாதாள உலகின் அரசன் ஹிரண் யாட்சனின்மகனானஅந்தகாசுரன் பிறப்பிலிருந்தே பார்வை யற்றவனாக இருந்து, கடும் தவத்தின் மூலம் பார்வையைப் பெற்று ஆணவம் கொண்டு உலகையே தன்வச மாக்கிக் கொள்கிறான். ஒருகட்டத்தில் பார்வதிக்காக, சிவபெருமானையே எதிர்க்கத் துணிகிறான்.

இதைப் போலவே ஹிரண்ய கசிபுவை வதம் செய்த பிறகு நரசிம்ம அவதாரமெடுத்த விஷ்ணுவின் தணியாதகோபத்தைஅடக்க சிவன் ஷரபமாக மாறுவது போன்றவைஅற்புதமானஓவியங்களால் காட்டப்பட்டுள்ளது.

உலகத்தரமானகிராபிஃக்நாவலை இந்தியர்களால் வழங்க முடியும் என்பதற்குச் சிறந்த உதாரணமாக இந்த நாவல் திகழ்கிறது.




நம்முடைய இதிகாசங்கள், புராணங்களில் இருக்கும் கிளைக் கதைகளையும் சுவையாக, விறுவிறுப்பாகச் சொல்லமுடியும் என்பதையும் உணர்த்திய புத்தகம் இது.

World War One (மே 2014)

கதை: ஆலன் கௌசில், ஓவியம்: லலித் குமார் ஷர்மா, வெளியீடு: கேம்ப் பையர்

முப்பதுக்கும் மேற்பட்ட நாடுகள் பங்கேற்போர் முதல் உலகப் போர். பல லட்சக் கணக்கான வர்களின் உயிர்களைப் பலி கொண்ட இந்தப் போரை, நூறு பக்கங்களில் அழுத்தமாகச் சொல்லி இருப்பதே இந்தப் புத்தகத்தின் சிறப்பு. சரயீவோவில் பிரான்ஸ் பெர்டினாண்ட் கொல்லப்பட்டமைமுதல் வெர்சைல்ஸ் ஒப்பந்தம் வரையான காலகட்டத்தை முறையாக, அழுத்தமாக 134 பக்கங்களில் சொல்ல முயன்று, அதில் வெற்றியும் கண்டிருக்கிறார் கதாசிரியர் ஆலன். காமிக்ஸ் டீலராக வாழ்க்கையைத் தொடங்கி, பின்னர் எடிட்டராக, கதாசிரியராக உருவெடுத்துள்ள இவர், தன்னால் குழந்தைகளுக்காக ஜாக்கி சானின் கதையையும் எழுத முடியும், இதுபோல ஒரு வரலாறையும் எழுத முடியும் என நிரூபித்துள்ளார்.

ஒரு வீரனின் பார்வையில் தொடங்கி, முதன்முதலாகப் போரில் கொல்லப்பட்ட பிரிட்டிஷ் வீரனான ஜான் பார் முதல் யுத்தத்தின் கடைசி நாள் வரை அருமையாக, கோவையாகச் சொல்லப்பட்டிருக்கும் இந்தக் கதைக்கு டெல்லியைச் சேர்ந்த ஓவியர் லலித்குமார் ஷர்மா தமது அற்புதமான ஓவியங்கள் மூலம் மெருகேற்றி உள்ளார்.

மாங்கா – ஜப்பானிய காமிக்ஸ் All you need is Kill (1 & 2) (நவம்பர் 2014)

கதை: ஹிரோஷி சகுரசகா / ரீயோசுக்கி டகௌச்சி, ஓவியம்: டகேஷி ஒபாடா, வெளியீடு: விஸ் மீடியா, அமெரிக்கா

வேற்றுக்கிரகவாசிகளை எதிர்த்துப் போரிடும் கதாநாயகன், காலச் சுழற்சியில் (Time Loop) சிக்கி ஒவ்வொரு நாளும் மரணமடைய நேரிடுகிறது. இதிலிருந்து தப்பித்து, எதிரிகளை அழிக்க வழி தேடும் அறிவியல் புனைவு. 2004-ஆம் ஆண்டு எழுதப்பட்ட இந்தநாவலைமையமாகவைத்து மாங்கா காமிக்ஸ் ஓவிய மேதையான டகேஷி ஒபாட்டா வரைந்த இந்த ஓவிய விருந்தில், பூமியின் பெரும்பான்மையான பகுதியை மிமிக்ஸ் என்ற வேற்றுலக உயிரினங்கள் ஆக்கிரமித்துக்கொள்ள, எஞ்சி இருக்கும் பூமிவாசிகள் ஒருங்கிணைந்த பாதுகாப்புக்குழுவை உருவாக்கி மிமிக்சுடன் மோதுகின்றனர்.

*(தொடரும்)*

## வணிகம்

# எச்.ஐ.வி விழிப்புணர்வுக்காக வர்த்தக ஒன்றிணைவு அமைப்பு

எச்.ஐ.வி. மற்றும் எயிட்ஸ் தொடர்பான இலங்கை வர்த்தக ஒன்றிணைவு அமைப்பு, உறுப்பினர்கள் மத்தியில் எச்.ஐ.வி. மற்றும்எயிட்ஸ்விழிப்புணர்வை ஏற்படுத்தும் குறிக்கோளுடன் அண்மையில் இலங்கை ஹோட்டல்கள் சங்கத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளது.

இலங்கை ஹோட்டல்கள் சங்கம் சார்பாக அதன் தலைவர் ஹிரான் குரே புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார். இதற்கமைய, தமது ஒவ்வொரு உறுப்பினர்களும் எச்.ஐ.வி. மற்றும் எயிட்ஸ் தொடர்பான இலங்கை வர்த்தக ஒன்றிணைவு அமைப்புடன் சேவையை பெறுவதை உறுதி செய்யும் வகையில் அதன் பிராந்திய அமைப்புக்களுடன் இணைந்து இலங்கை ஹோட்டல்கள் சங்கம் செயற்படவுள்ளது.

எச்.ஐ.வி.மற்றும்எயிட்ஸ்தொடர்பான இலங்கை வர்த்தக ஒன்றிணைவு அமைப்பானது நாட்டில் எச்.ஐ.வி. மற்றும் எயிட்ஸ் நோய் பரவுவதைத் தடுக்கும் நோக்குடன் அதன் அங்கத்துவ நிறுவனங்கள் மத்தியில் இலவச கல்வி மற்றும் விழிப்புணர்வுத் திட்டங்களை முன்னெடுத்து வருகிறது.


எச்.ஐ.வி.மற்றும்எயிட்ஸ்தொடர்பான இலங்கை வர்த்தக ஒன்றிணைவு அமைப்பு, 2015ஆம் ஆண்டில் சுற்றுலாத்துறை மீது கவனம் செலுத்தத் திட்டமிட்டுள்ளது. சுற்றுலாத்துறையில் எச்.ஐ.வி. மற்றும் எயிட்ஸ் நோய்த்தாக்கத்திற்கான அதிக அபாயம் நிலவுகிறது.

இலங்கை ஹோட்டல்கள் சங்கம் ஆனது, தொழிற்துறையில் உள்ளவர்களின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை ஊக்குவித்து வரும் எச்.ஐ.வி. மற்றும் எயிட்ஸ் தொடர்பான இலங்கை வர்த்தக ஒன்றிணைவு அமைப்புடன் இணைந்து செயற்படுவதில் முன்னோடியாக உள்ளது.

எச்.ஐ.வி.மற்றும்எயிட்ஸ்தொடர்பான இலங்கை வர்த்தக ஒன்றிணைவு அமைப்பானது அண்மையில்உலகஎயிட்ஸ்தினத்தை முன்னிட்டு, இந்த நோய் பரவுவதைத் தடுப்பதற்கு ஒன்றிணையுமாறு அனைத்து கூட்டாண்மை நிறுவனங்களுக்கும் அழைப்பு விடுத்து குறிப்பாணையை அனுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

உலகின் பிற இடங்களில் இந்த நோய் குறைவடைந்து வரும் நிலையில்இலங்கையில்அதற்கு நேர் மாறாக எச்.ஐ.வி. மற்றும் எயிட்ஸ் நோய் பரவுதல் அதிகரித்துச் செல்கின்றது என, எச்.ஐ.வி. மற்றும் எயிட்ஸ் தொடர்பான இலங்கை வர்த்தக ஒன்றிணைவு அமைப்பு தனது குறிப்பாணையில் சுட்டிக்காட்டியுள்ளது. (த)

# விரைவான உரிமைகோரல் தீர்வுகளை சம்பத் வங்கியுடன் வழங்கும் ஜனசக்தி




ஜனசக்தி காப்புறுதி நிறுவனமானது அதன் ஃபுல் ஒப்ஷன் மோட்டார் கோரல் வாடிக்கையாளர்களுக்கு சம்பத் பேங்க் கோர்ப்பரேட் பேமன்ட் மூலம் இயக்கப்படும் புரட்சிகரமான இலகுவான மொபைல் கேஷ் ஒப்ஷன் வழங்கி அதன் கோரல் கொடுப்பனவு சௌகரியத்தை மேம்படுத்தி அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் சென்றுள்ளது.

இதற்கமைய, நாடு முழுவதும் உள்ள 300இற்கும் அதிகமான ஏ.ரி.எம் வலையமைப்பை கொண்ட எந்தவொரு சம்பத் வங்கி ஏ.ரி.எம்முக்கும் சென்று வாடிக்கையாளர்கள் தமது உரிமைக்கோரல் கொடுப்பனவுகளைஉடனடியாகபெற்றுக்கொள்ளலாம்.


இதற்கு வரிசைகளில் காத்திருக்கவோ அல்லது காசோலைகளோ தேவையில்லை. உங்கள் இருப்பிடத்திற்கு அருகாமையில் இருக்கும் சம்பத் வங்கி ஏ.ரி.எம் இற்கு விஜயம் செய்து மொபைல் கேஷ் ஒப்ஷனை கிளிக் செய்வதனூடாக புல் ஒப்ஷன் வாடிக்கையாளர்கள்தமக்குரிய கோரல் கொடுப்பனவுகளை பெற முடியும் என ஜனசக்தி நிறுவனத்தின் புல் ஒப்ஷன் பிரிவின் சிரேஷ்ட உதவி பொது முகாமையாளர் எஸ்.தனஞ்செயன் தெரிவித்தார்.

இது விரைவான சேவையை அனுமதிப்பது மாத்திரமன்றி, உரிமைக்கோரல் கொடுப்பனவை பெறுவதற்கு சொந்தமாக வங்கி கணக்கொன்றை கொண்டிருப்பதற்கான தேவையையும் தவிர்க்கின்றது.

பெரும்பாலான வாடிக்கையாளருக்கு நடைமுறை கணக்குகள் இல்லை. இந்த முறையானது கணக்கொன்று இல்லாமல் பணத்தை பெறுவதற்கான வசதியை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

நவீன வர்த்தகங்கள் காலத்துடன் இணைந்து செல்ல வேண்டும் என மேலும் தனஞ்செயன் தெரிவித்தார். (த)

# தொழில்நுட்பம்




## மென் பொருள்களை கணினியில் சுயமாகவே நிறுவுவதற்கு

கணினியில் இயங்குதளம் ஒன்றை நிறுவிய பின்னர் அது முறையாகச் செயற்படுவதற்கு கிராபிக்ஸ், ஓடியோ, நெட்வேர்க் போன்ற ட்ரைவர் மென் பொருள்களை நிறுவவேண்டியது அவசியமாகும்.

இந்த மென் பொருள்களை நிறுவுவதற்கு கணினியின் மொடல் தெரிந்திருக்க வேண்டும். இவ்வாறு கணினியின் மொடல் தெரியாத சந்தர்ப்பங்களில் புனிம் வகை ட்ரைவர்களை நிறுவுவதற்கு புனிம் Driver Autodetect என்ற மென்பொருள் பயனுள்ளதாகக் காணப்படுகின்றது.

இந்த மென் பொருள் கணினியின் மொடல், இயங்குதளத்தின் வகை என்பவற்றை அறிந்து அதற்கேற்ப நிறுவப்பட வேண்டிய ட்ரைவர் மென் பொருள்களைத் தானாகவே தரவிறக்கம் செய்து கணினியில் நிறுவும்.

எனினும் இந்த மென்பொருள் விண்டோஸ் இயங்குதளங்களுக்கு மட்டுமே பொருந்தும்.


## டேப்லட் அறிமுகம்



LG நிறுவனம் தனது புதிய Tab Book Duo என்ற விண்டோஸ் 8.1 இயங்குதளத்தை அடிப்படையாகக் கொண்ட டேப்லட்டை கொரியாவில் அறிமுகம் செய்துள்ளது.

10.1 அங்குல அளவுடைய IPS தொழில் நுட்பத்தைக் கொண்ட தொடுதிரையைக் கொண்டுள்ள இந்த டேப்லட், 520 கிராம் எடை கொண்டதாகக் காணப்படுகின்றது. இந்தச் சாதனத்தில் 11 மணித்தியாலங்கள் தொடர்ச்சியாக மின்னை வழங்கக்கூடிய மின்கலம், USB 3.0, MicroHDMI என்பனவும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதன் விலை 640 டொலர்கள் ஆகும்.

## குறைந்த விலையில் அறிமுகமாகும் டேப்லட்






Vido என்ற நிறுவனம் விண்டோஸ் 8.1 இயங்குதளத்தை அடிப்படையாகக் கொண்ட W8C Freedom Light என்ற டேப்லட்டை அறிமுகம் செய்துள்ளது. 97 டொலர்கள் மட்டுமே பெறுமதியான இந்த டேப்லட்டில் 8 அங்குல அளவு, 1280 மு 800 Pixel Resolution உடைய IPS தொடுதிரை, Intel Atom Z3735F QuaddCore Bay Trail Processor, பிரதான நினைவகமாக 2GB RAM, 32GB சேமிப்பு நினைவகம் என்பவற்றைக்கொண்டுள்ளன. இவை தவிர 4200mAh மின்கலம் தலா 2 மெகாபிக்சல்களை உடைய பிரதான மற்றும் வீடியோ அழைப்பை மேற்கொள்வதற்கான கமராக்கள் என்பனவும் தரப்பட்டுள்ளன.




31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அன்னை மடியில் 16 . 05 . 1934

இறைவன் அடியில் 07 . 12 . 2014

அமரர் நடராஜா பாக்கியம்

திங்களொன்று ஓடிச்சென்றதுவே - எம்அன்புத் தெய்வம் எமைவிட்டகன்று
இணையில்லா நல்வாழ்வை எமக்களித்து நீங்கள் இறையடி சேர்ந்தீரே!
கண்களில் கண்ணீர் வழிந்தோட - சென்ற திசைதனைப் பார்த்து ஏங்கி நிற்கின்றோம்.
மீண்டும் எப்போது எமைநாடி வருவீர் என்று......

அன்னாரின் 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளும் இன்று (06.01.2015) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற உள்ளதால் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வேம்பிராய் வீதி,
மந்துவில், கொடிகாமம். (C18901)(12.7)
குடும்பத்தினர்.

31 ஆம் நாள் நினைவஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை திருமதி சியாமளா உதயசங்கர் அவர்களின் மாமனார் **வீரசிங்கம் உத்தமசிங்கம்** அவர்கள் 07.12.2014 அன்று இறைபதம் அடைந்ததையிட்டு, எமது துயர் பகிர்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், ஊழியர்கள், நலன்புரிசங்கம்,
புனித திரேசா பெண்கள் கல்லூரி - கிளிநொச்சி.
(51323)(4.7)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 21 . 03 . 1932

விண்ணில் 19 . 12 . 2013

அமரர் கந்தையா அருளம்பலம்
ஓய்வுநிலை உப அதிபர் யா/அருணோதயக் கல்லூரி

திதி: துதியை (06.01.2015)

கும்பழாவளையானின் அருள்வேண்டி
இவ்வுலகில் வாழ்ந்திருந்து விநாயகன் தாழ் சேர்ந்து
ஆண்டு ஒன்று மறைந்தாலும் ஆறவில்லை எங்கள் மனம்
அகலுமா பிரிவின் சோகம் மறையுமா உங்கள் நினைவு
காலங்கள் ஆயிரம் சென்றாலும் ஆறாது ஆறாது எம்துயர்
எமது உயிர் உள்ளவரை
தொடரும் உங்கள் நினைவுகள் எம்மிடம்.

கேணிக்கரை,
அளவெட்டி (C18652)(12.7)
குடும்பத்தினர்.

31 ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில் 27 . 06 . 1938

இறைவன் அடியில் 07 . 12 . 2014

சின்னத்தம்பி கணேசு

அந்த பசுமையான நாள்கள்
வெள்ளையுடையில், முறுக்கிய மீசையுடன்
கடமையில் கண்ணியத்துடன்
நடந்து நம்பிக்கைக்கு பாத்திரமாகி
ராஜ வீதியிலே றோஜா வனத்திலே
கம்பீரமாக வலம் வந்து
நோயென்று ஓய்வெடுக்காது
நாளும் நண்பர்களை காணவிரைவீர்களே!
அனைவரையும் அரவணைக்கும் மனம்!
இன்று உங்கள் நினைவு நாளிலே,
வந்திருக்கும் உங்கள் அன்பு உறவுகளுடன்
கதைப்பதற்கு நீங்கள் இல்லையே அப்பா!
ஒவ்வொரு இடத்திலும் உங்களைத் தேடுகிறோம்
உங்கள் இனிய குரல் கேட்காதா?
உங்களின் இடத்தை நிரப்ப யாராலும்
முடியாது அப்பா!

உங்கள் நினைவுகளுடன் வாழும்,
குடும்பத்தினர்.

21 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் சங்கரப்பிள்ளை நமசிவாயம்
(முன்னாள் உரிமையாளர் அம்பிகா டிஸ்பென்சரி)



பிறப்பு 22 . 08 . 1937

இறப்பு 06 . 01 . 1994

எங்கள் குடும்பத் தலைவரே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
எங்கள் குல தெய்வமாகிய
நுணாவில் சிதம்பர விநாயகரைப்
பிரார்த்திக்கின்றோம்.

சரசாலை வடக்கு.
சாவகச்சேரி. (55558(4.6.3)
குடும்பத்தினர்.

# உலகச் செய்திகள்



## விமானத்தைக் கடத்த பயங்கரவாதிகள் திட்டம்

### விமான நிலையங்களில் பாதுகாப்பு அதிகரிப்பு

பயங்கரவாதிகள் விமானத்தைக் கடத்தத் திட்டமிட்டுள்ளதாகத் தகவல் கசிந்துள்ளதால் நாடு முழுவதும் உள்ள விமான நிலையங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. கடந்த 1999ஆம் ஆண்டு இந்தியன் ஏயர்லைன்ஸ் விமானத்தை ஆப்கானிஸ்தான் நாட்டின் காந்தஹார் நகருக்குக் கடத்தியது போல, இந்திய விமானத்தை மீண்டும் கடத்தும் முயற்சியில் பயங்கரவாதிகள் ஈடுபடலாம் என உளவுத்துறை எச்சரிக்கை விடுத்திருப்பதால், பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ–ரி)

# ஜம்மு-காஷ்மீர் எல்லையில் மோதல்

காஷ்மீர், ஜன. 6

ஜம்மு–காஷ்மீர் எல்லையில் இந்திய நிலைகள் மீது பாகிஸ்தான் இராணுவத்தினர் மீண்டும் தாக்குதல் நடத்தியுள்ளனர். அந்தத் தாக்குதல் சம்பவம் காஷ்மீரில் பதற்றத்தை அதிகரித்துள்ளது. ஜம்மு–காஷ்மீரின் ஹிரான் நகர் எல்லைப்பகுதியில் இராணுவ நிலைகள் மீது பாகிஸ்தான் இராணுவத்தினர் நேற்றுமுன்தினம் இரவு அத்துமீறி தாக்குதல் நடத்தியுள்ளனர். இதற்கு பாதுகாப்பு படையினரும் பதில் தாக்குதல் நடத்தியுள்ளனர். இருதரப்புக்குமிடையே இரவு 11 மணிக்கு தொடங்கிய துப்பாக்கிப் பிரயோகம் அதிகாலை மூன்றுமணிவரை நீடித்தது.



பாகிஸ்தான் இராணுவத்தினர் ஓரிரு நாள்களுக்கு முன்பு நடத்திய தாக்குதலொன்றில் இரண்டு இராணுவ வீரர்கள் உட்பட 3 பேர் உயிரிழந்துள்ளனர். 10 பேர் காயமடைந்துள்ளனர். பாகிஸ்தான் வீரர்களின் அத்துமீறல்கள் காரணமாக சம்பா, கத்துவா மாவட்டங்களில் நூற்றுக் கணக்கான கிராமத்தினர் வீடுகளை விட்டு வெளியேறி – இராணுவ முகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர். இந்தநிலையில் தற்போது எல்லையில் மீண்டும் பாகிஸ்தான் இராணுவத்தினர் தாக்குதல் நடத்தி இருப்பது பதற்றத்தை அதிகரித்துள்ளது. (ஒ–ரி)

## சூரியனின் தென் துருவத்தில் துவாரம் கண்டுபிடிப்பு

### நாஸா தகவல்



அமெரிக்காவின் விண்வெளி நிறுவனமான நாஸா சூரியனின் தென் துருவத்தில் தோன்றிய மர்மமான கோரோணல் துவாரம் பற்றிய தகவல்களை வெளியிட்டுள்ளது. நாஸாவின் சோலார் டைனமிக் ஆய்வகத்தில் உள்ள அட்மாஸ்பரிக் இமேஜிங் அசெம்ப்லி என்ற கருவியானது சூரியனை படம் எடுத்து அனுப்பியது. இந்தப் படத்தை ஆராய்ந்ததில் சூரியனின் தென் துருவத்தில் உள்ள ஒரு பகுதி இருண்டு இருப்பது தெரியவந்தது. இந்த இருண்ட பகுதியின் பெயர் தான் கோரோணல் துவாரம் ஆகும். இந்த கோரோணல் துவாரம் இன்னும் 5 ஆண்டுகளுக்குத் தென்படும் என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## சல்மான்கானுக்கு எதிராக மும்பையில் ஆர்ப்பாட்டம்



இலங்கை அதிபர் ராஜபக்ஷவுக்கு ஆதரவாக தேர்தல் பரப்புரை மேற்கொண்ட ஹிந்தி நடிகர் சல்மான்கானுக்கு எதிராக மும்பையில் தமிழ் அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மும்பையின் புறநகர்ப் பகுதியில் உள்ள சல்மான்கானின் குடியிருப்புக்கு எதிரே, இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றுள்ளது. ஆர்ப்பாட்டத்தில் சல்மான்கானைக் கண்டித்து ஆக்ரோசமாகக் கோசங்கள் எழுப்பப்பட்டன.

அது குறித்து ஆர்ப்பாட்டக்காரர்கள் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்; இலங்கைப் போரில் அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்று குவித்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக சல்மான்கான் தேர்தல் பரப்புரை செய்வதைக் கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோம் என்று தெரிவித்தனர்.

## லிபியாவில் 13 கிறிஸ்தவர்கள் கடத்தல்

கெய்ரோ, ஜன.6

லிபியாவில் உள்ள சிர்டே நகரின் முக்கிய இடமொன்றுக்குள் துப்பாக்கிகளுடன் நுழைந்த குழுவொன்று அங்கிருந்த எகிப்து நாட்டைச் சேர்ந்த 13 கிறிஸ்தவர்களை வலுக்கட்டாயமாகக் கடத்திச்சென்றுள்ளது. இந்தச் சம்பவம் அங்கு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

லிபியாவில் 34 ஆண்டுகளாக ஆட்சி நடத்தி வந்த கடாபியின் ஆட்சி கடந்த 2011ஆம் ஆண்டு முடிவுக்கு வந்ததிலிருந்து உள்நாட்டுப் போராட்டக் குழுக்கள் அதிகாரத்தை கையில் எடுத்துக்கொண்டு தொடர்ந்து தாக்குதல் சம்பவங்களில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அது தொடர்பாக லிபியாவின் வெளியுறவுத்துறை அமைச்சர் சமே சவுக்கிரி தெரிவிக்கையில்; கடத்தப்பட்டவர்களை மீட்க துரித நடவடிக்கையெடுக்கப்படும் – என்று உறுதியளித்துள்ளார். (ஒ–ரி)

## சத்தீஸ்கர் உள்ளாட்சித் தேர்தலில் காங்கிரஸ் வெற்றி

ராஞ்சி, ஜன. 6

சத்தீஸ்கர் மாநிலத்தில் நடைபெற்று முடிந்த உள்ளாட்சித் தேர்தலில் பல இடங்களை காங்கிரஸ் கட்சி கைப்பற்றியுள்ளது. சத்தீஸ்கரில் 10 நகராட்சி மன்றத் தொகுதிகளுக்கான தேர்தல் அண்மையில் நடைபெற்றது. இதில் 4 இடங்களில் காங்கிரஸ் வெற்றி பெற்றுள்ளது. கடந்த தேர்தலில் 6 இடங்களைக் கைப்பற்றிய பா.ஜ.க, இந்த முறை 4இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது. மேலும் இரு இடங்களை சுயேச்சை வேட்பாளர்கள் கைப்பற்றியுள்ளனர்.

## சீனாவில் இடம்பெற்ற விபத்துக்களில் 10 பேர் சாவு

பிஜீங்,ஜன.6

சீனாவில் ஏற்பட்டுள்ள விபத்துக்களில் 10பேர் சாவடைந்துள்ளனர்.

அந்த நாட்டின் ஹீய்லாங்ஜியாங் மாகாணத்திலுள்ள ஹார்பின் நகரில், தொழிற்சாலைக் கிடங்கு ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்திலும் – தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட விபத்திலுமே அவர்கள் உயிரிழந்துள்ளனர்.

மேலும் காயமடைந்த 14 தீயணைப்புப் படை வீரர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் 3 பேரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக மருத்துவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஒ–ரி)

## மதுபானப் போத்தலில் காந்தியின் படம் மன்னிப்புக் கோரியது அமெரிக்க நிறுவனம்

அமெரிக்காவின், நியூ இங்கிலாந்து புரூவிங் நிறுவனம் அமெரிக்கா, இந்தியா ஆகிய நாடுகளில் பியர் விற்பனையில் ஈடுபட்டு வருகிறது. குறிப்பிட்ட பியர் போத்தல்களின் லேபில்களில், காந்தியின் படத்துடன் 'சைவ பியர்' என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது.

இவ்விதம் காந்தியின் படத்துடன் பியர் விற்பனை செய்வதை எதிர்த்து, ஆந்திராவைச் சேர்ந்த சுங்கரி ஜனார்த்தன் என்ற வழக்கறிஞர், ஐதராபாத் பெருநகர நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளார்.




அவர் அளித்துள்ள மனுவில் இது தேசபிதா மகாத்மா காந்தியை அவமதிப்பதாக உள்ளது எனவே, தேசிய கௌரவ அவமரியாதைத் தடுப்புச் சட்டம் மற்றும் இந்தியத் தண்டனை சட்டம் 124ஏ பிரிவின் கீழ், இது கடுமையான தண்டனைக்கு உரிய செயலாகும். அதனால், இவ்வகை பியர் விற்பனையில் ஈடுபட்டுள்ள புரூவிங் நிறுவனம் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மனு, விசாரணைக்கு வரவுள்ள நிலையில், குறிப்பிட்ட அமெரிக்க பியர் நிறுவனத்தின் தலைவரும், பங்குதாரருமான மேட் வெஸ்ட்பால், அந்த செயலுக்கு வருத்தம் தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்;

மிகப் பெரிய தலைவருக்கு மரியாதை செய்யும் விதமாகவே அந்த வாசகத்தை சேர்த்தோம். அதைப் பருகுவோர், காந்தியின் அகிம்சை, ஒத்துழையாமை இயக்கம் குறித்த தகவல்களையும் அறிய ஆர்வம் காட்டுவர் என்ற நம்பிக்கையில் அதைச் செய்தோம். எனினும், அது, இந்திய மக்களின் உணர்வுகளை புண்படுத்தியிருந்தால், அதற்காக எமது நிறுவனம் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறது என்று தெரிவித்துள்ளார். (ஒ–ரி)

## பாகிஸ்தானில் அமெரிக்கா ஏவுகணை தாக்குதல்

### 10 தீவிரவாதிகள் சாவு

இஸ்லாமாபாத், ஜன. 6

பாகிஸ்தானின் ஷாவல் மலைப் பகுதியில் பதுங்கியிருந்த தீவிரவாதிகள் மீது ஆளில்லா விமானங்கள் ஏவுகணைகளை வீசித் தாக்குதல் நடத்தின. அதில் தலிபான் தீவிரவாதிகள் 10 பேர் சாவடைந்துள்ளனர். மேலும், பல தீவிரவாதிகள் படுகாயம் அடைந்துள்ளனர். பாகிஸ்தானில் ஆப்கானிஸ்தான் எல்லையில் உள்ள வடக்கு வசிரிஸ்தான் மலைப் பகுதியில் தலிபான் மற்றும் அல்குவைதா தீவிரவாதிகள் முகாம்களை அமைத்துப் போர் பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

எனவே, அவர்களை அழிக்கும் பணியில் அமெரிக்காவின் ஆளில்லா விமானங்கள் தாக்குதல் நடத்தியுள்ளன. (ஒ–ரி)



அமெரிக்காவில் உள்ள மெக்சிகன் மாகாணத்தில் குவாரீனோ என்பவர் 13 அடி நீளமுள்ள மலைப் பாம்பு மற்றும் 30 வகையான ஊர்வனவற்றை தன் வீட்டில் செல்லப்பிராணியாக வளர்த்து வந்தார். மேலும், பொதுமக்கள் தங்களது வீட்டில் பாம்பு களை செல்லப்பிராணியாக வளர்க்க வேண்டும் என்பதை உணர்த்தும் வகையில் ஒரு விழிப்புணர்வு படத்தை உருவாக்கியுள்ளார். அந்தப் படத்தில்அவர் வளர்த்து வந்த 13 அடி மலைப்பாம்பு ஒன்றுடன் அவரின் மகள் விளையாடுவதைக் காட்சியாக்கியுள் ளார்.

## பாகிஸ்தானில் வான்வழித் தாக்குதல் 31 தீவிரவாதிகள் சாவு

பாகிஸ்தான் இராணுவம் தீவிர வாதிகளை ஒடுக்கும் நடவடிக் கையை தீவிரப்படுத்தியுள்ள நிலையில் ஆப்கன் எல்லையில் அமைந்துள்ள கைபர் பழங் குடிப் பகுதியில் நேற்று முன் தினம் பாகிஸ்தான் இராணுவம் போர் விமானங்கள் மூலமாக வான்வழித் தாக்குதல்களை நடத்தியுள்ளது. திர்ராக் மற்றும் கைபர் பகுதியில் நடத்தப்பட்ட இந்த அதிரடித் தாக்குதலில் தீவிரவாதிகள் பதுங்கியிருந்த 4 இடங்களும், மனித வெடி குண்டுத் தாக்குதலுக்கு பயிற்சி அளிக்கும் முகாமொன்றும் அழிக்கப்பட்டுள்ளன. மேலும், அந்தத் தாக்குதலில் மனித வெடி குண்டுப்படைத் தீவிரவாதிகள் உட்பட 31 பேர் கொல்லப்பட் டுள்ளனர் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ஒ–ரி)

# ஈராக்கில் 170 பேர் கடத்தப்பட்டனர் தீவிரவாதிகளால்

### ஐ.எஸ்.கொடிகளை எரித்ததை அடுத்து



பக்[illegible]

ஈராக்கில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிர வாதிகளின் கொடியை எரித் தமைக்காக 170 ஆண்களை ஐ.எஸ். தீவிரவாதிகள் கடத்திச் சென்றதாக அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் தெரிவித்துள்ள னர்.

வடக்கு ஈராக், கிர்குக் மாகா ணத்தில் உள்ல அல்–ஷஜாரா, காரீப் ஆகிய 2 கிராமங்களில் ஐ.எஸ்.தீவிரவாதிகளின் கொடி கள்எரிக்கப்பட்டதைத்தொடர்ந்து, 170 ஆண்களை ஐ.எஸ். தீவிர வாதிகள் கடத்திச் சென்றதாக உளவுத் துறை அதிகாரியொரு வர் தெரிவித்துள்ளார்.

அதுகுறித்து அவர் தெரிவிக் கையில்; 30 வாகனங்களில்வந்த தீவிரவாதிகள் அவர்களை அரு கில் உள்ள ஹவிஜா நகருக்கு கடத்திச் சென்றுள்ளனர். அங்கு ஐ.எஸ். அமைப்பின் நீதிமன் றமும் சிறையும் இயங்கி வரு வதாகவும் அவர் மேலும் தெரி வித்துள்ளார். (ஒ–ரி)

# 2,500 ஊசிகளை முதுகில் குத்திக்கொண்ட பெண்மணி

### எருதுச் சண்டைக்கு எதிரான போராட்டம்



எருதுச் சண்டைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் கொலம் பியாவைச் சேர்ந்த பெண்ணொ ருவர் தனது முதுகில் 2,500 ஊசிகளை குத்திக் கொண்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத் தியுள்ளது.

கொலம்பியாவில் கார்டுஜீனா மாகாணத்தில் எருதுச் சண்டை நடத்தப்படுவதைத் தடுக்கும் விதமாக பல்வேறு போராட்டங் கள் நடைபெற்று வருகின்றன.

அதன் ஒரு பகுதியாக விலங்கு கள் ஆர்வலர் அமைப்பைச் சேர்ந்த பேணிபாக்சன் என்ற பெண் தனது முதுகில் 2,500 குண்டூசிகளைக் குத்திக் கொண்டு எருதுச் சண்டைக் கான தனது கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில்; எருதுச் சண்டையின்போது அதன் முதுகில் ஈட்டி போன்ற ஒரு ஆயுதம் குத்தப்படுகிறது.

அப்போது குறிப்பிட்ட அந்த எருது அனுபவிக்கும் வலியை நீங்களும் அனுபவித்து பாருங் கள் என்பதை எருது விளை யாட்டு ரசிகர்களுக்கு வலி யுறுத்தும் நோக்கிலேயே அவ் வாறு செய்தேன் எனக்கூறியுள் ளார்.

அவரது இந்த முயற்சியின் மூலம் கடந்த 2009ஆம் ஆண் டில், குண்டூசிகளை தலையில் குத்திக் கொண்ட சீனாவைச் சேர்ந்த வீசெஞ்சு என்பவரின் கின்னஸ் சாதனையை இவர் முறியடித்துள்ளார். (ஒ–ரி)

# இந்தோனேஷியாவில் தாக்குதல் எச்சரிக்கை

ஜகர்த்தா, ஜன. 6

இந்தோனேஷியாவின் சுரபாயா நகரில் அமெரிக்காவுடன் தொடர் புடைய இடங்களில் பயங்கர வாதத் தாக்குதல் நடைபெறும் என அச்சுறுத்தல் விடுக்கப்பட் டுள்ளது.

இந்தோனேஷியத் தலைநகர் ஜகார்த்தாவிலுள்ள அமெரிக்க தூதரகம் இந்த எச்சரிக்கை அறி விப்பை விடுத்துள்ளது.

இந்தோனேஷியாவின் இரண்டா வது பெரிய நகரமான சுரபா யாவில்,அமெரிக்காவுடன்தொடர் புடைய வங்கிகள், ஹோட் டல்கள் ஆகிய இடங்களில் பயங் கரவாதத் தாக்குதல் மேற்கொள் ளப்படக்கூடிய அச்சுறுத்தல் எழுந் துள்ளது எனவும் – இந்தோனே ஷியாவுக்கு பயணம் மேற்கொள் ளும் அமெரிக்க சுற்றுலாப் பய ணிகளை முன்னெச்சரிக்கை யுடன் இருக்குமாறும் அமெ ரிக்கத் தூதரகம் வெளியிட்டி ருக்கும் எச்சரிக்கை அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ–ரி)

## பாகிஸ்தானில் சுரங்க விபத்து 12 பேர் சாவு

பாகிஸ்தானில் பளிங்குக் கல் சுரங்கம் இடிந்து விழுந்ததில், 12 தொழிலாளர்கள் உயிரிழந் துள்ளனர்.

பாகிஸ்தானில் பழங்குடியினர் வசிக்கும் ஜியாரத் பகுதியில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது. அங்குள்ள பளிங்குக் கல் சுரங் கத்தில் கற்களைத் தொழிலாளர் கள் வெட்டி எடுத்துக் கொண் டிருந்தபோது, அவை இடிந்து விழுந்ததில், பணியில் ஈடுபட் டிருந்த தொழிலாளர்களுடன், இரண்டு வாகனங்களும் இடிபாடு களில் புதைந்துள்ளன. இது வரை, 12 பேரின் உடல்கள் மீட் கப்பட்டுள்ளன. மேலும், சிலர் இடிபாடுகளில் சிக்கியுள்ளதால், மீட்புப் பணிகளில் மீட்புப் படை வீரர்கள் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ–ரி)

# மீண்டும் அமெரிக்காவை எச்சரித்தது வடகொரியா

அமெரிக்கா விதித்திருக்கும் புதிய பொருளாதார தடைகள் வடகொரியா தேசத்துக்கு எதி ரானநடவடிக்கை என்று குற்றஞ் சுமத்தியிருக்கும் வடகொரியா அரசு அது எந்த நோக்கத்துக் காக இந்தத் தடைகள் அமெ ரிக்காவால் விதிக்கப்பட்ட னவோ அதற்கு நேர் எதிர்மறை யான இறுதிப்பயன்களைத் தரு வதாக அமையும் என்று எச் சரித்திருக்கிறது. வடகொரியா வுக்கு எதிரான இந்தத் தடைகள் வடகொரியாவின் இராணுவ நிலைப்பாட்டை உறுதி செய் யவேவழிசெய்திருக்கிறது என்று வடகொரியாவின் வெளியுறவு அமைச்சகம் சார்பில் பேசவல்ல உயர் அதிகாரியொருவர் தெரி வித்துள்ளார்.



வடகொரியாத் தலைவரை கொலை செய்வதாக சொனி திரைப்பட நிறுவனம் தயாரித் திருந்த நகைச்சுவைத் திரைப் படத்தை எதிர்த்து சொனி திரைப் பட நிறுவனம் மீது வடகொரியா இணைய வழித்தாக்குதல் ஒன்றை நிகழ்த்தியதாக அமெரிக்கா குற் றம் சுமத்தியிருந்தது. அதற்கான தனது பதிலடியாக வடகொரியா மீது அமெரிக்க அரசு புதிய பொருளாதாரத் தடைகளை அறிவித்தது.

ஆனால் சொனி நிறுவனம் மீது நிகழ்த்தப்பட்ட இணைய வழித் தாக்குதலுக்கும் தனக்கும் தொடர்பு இல்லை என்று வடகொரியா அரசு மறுத்திருந்தது.

அமெரிக்காவின் புதிய பொரு ளாதாரத் தடைகள், வடகொரி யாவின் அணு ஆயுத தொழில் நுட்பத் திட்டங்கள், இராணுவ புலனாய்வுப் பிரிவுடன் தொடர் புடைய நபர்கள் மற்றும் அது தொடர்பான நிறுவனங்களை குறி வைத்து விதிக்கப்பட்டிருக் கின்றன என்பது குறிப்பிடத்தக் கது. (ஒ–ரி)

# பல்சுவை

## மரக்கறிகளின் நேற்றைய நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 120 | – | 100 | 120 | 100 | 60 | 100 |
| கத்தரி | 200 | 180 | 190 | 240 | 160 | 240 | 120 |
| கரட் | 180 | 200 | 240 | 200 | 180 | 260 | 250 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 50 | 50 | 50 | 20 |
| பயிற்றை | 250 | 240 | 240 | 300 | 240 | 260 | 250 |
| பாகல் | 400 | 350 | 350 | 320 | 320 | 240 | 250 |
| கருணைக்கிழங்கு | 50 | 60 | 50 | 60 | 60 | 80 | 50 |
| பெ.வெங்காயம் | 140 | 100 | 100 | 100 | 120 | 110 | 70 |
| சி.வெங்காயம் | 50 | 120 | 50 | 100 | 70 | 120 | 60 |
| பூசணி | 40 | 50 | 50 | 50 | 40 | 50 | 40 |
| தக்காளி | 250 | 150 | 160 | 200 | 180 | 160 | 100 |
| வாழைக்காய் | 70 | 80 | 60 | 100 | 80 | 100 | 70 |
| கீரை | 20 | 60 | 50 | 20 | 40 | 20 | – |
| பொன்னாங்காணி | 30 | 50 | – | – | 30 | 50 | 15 |
| மிளகாய் | 500 | 400 | 500 | 450 | 400 | 600 | 400 |
| புடோல் | 160 | – | 140 | 140 | 140 | 140 | 120 |
| கோவா | 120 | 120 | – | 140 | 120 | 140 | 120 |
| வெண்டி | 250 | 140 | 180 | 160 | 180 | 120 | 120 |
| போஞ்சி | 300 | 240 | 320 | 240 | 360 | 360 | 250 |
| லீக்ஸ் | 350 | 240 | 300 | 280 | 360 | 290 | 350 |
| தேங்காய் | 50 | 40 | 60 | 50 | 40 | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 80 | 70 | 60 | 80 | 80 | 80 | 60 |
| தேசிக்காய் | 50 | 80 | 40 | 80 | 60 | 80 | 30 |
| வல்லாரை | 15 | 20 | 20 | – | 30 | 20 | 15 |
| கறிமிளகாய் | 300 | 300 | 350 | – | 400 | 360 | 500 |
| இராசவள்ளி | 120 | 100 | 100 | 160 | 160 | 120 | 120 |



## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....

### நம்மை நாமே சீர்திருத்திக் கொள்ள வேண்டும்

மிருக குணம் மேலோங்கினால் நீ இழிந்த நிலையை அடைவாய். பரிணாமம் மேலோங்கினால் முன்னேறுவாய். எனவே மிருக குணத்தைத் தலைதூக்கவிடக் கூடாது. இது பற்றிய ஆராய்ச்சி எமது உடலிலேயே நடைபெறவேண்டும். நம்மைச் சுற்றியுள்ளவர்களை சீர்திருத்துவதில் தான் நாம் சுறுசுறுப்புக் கொள்கிறோம். சிக்கல், சீர்திருத்தம் என்பவை எமது உடலிலேயே தொடங்கப் பெறவேண்டும். எனவே, உங்கள் மனத்தைக் கட்டுப்படுத்தக் கற்றுக்கொள்ளுங்கள். நீண்ட பயிற்சியின் மூலம் இந்த ஆற்றலைப் பெற்றுக்கொள்ளமுடியும். அதன் பிறகு நீங்கள் சீர்திருத்தவாதியாக முடியும்.

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 7 | | | | 2 | 8 | | |
| 5 | 2 | | | | | 3 | | |
| | | 4 | | 1 | | | 6 | |
| 1 | 6 | | 3 | | 9 | | | 8 |
| 4 | 5 | | | 7 | | | 3 | 9 |
| 9 | | | 8 | | 4 | | 5 | 7 |
| | 8 | | | 3 | | 7 | | |
| | | 6 | | | | | 4 | 5 |
| | | 5 | 1 | | | | 8 | 3 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 8 | 3 | 1 | 2 | 6 | 9 | 4 | 5 |
| 5 | 1 | 2 | 9 | 4 | 7 | 6 | 8 | 3 |
| 6 | 9 | 4 | 5 | 3 | 8 | 2 | 1 | 7 |
| 4 | 2 | 6 | 8 | 1 | 3 | 5 | 7 | 9 |
| 8 | 7 | 9 | 4 | 6 | 5 | 3 | 2 | 1 |
| 1 | 3 | 5 | 7 | 9 | 2 | 4 | 6 | 8 |
| 3 | 4 | 1 | 2 | 8 | 9 | 7 | 5 | 6 |
| 9 | 5 | 8 | 6 | 7 | 4 | 1 | 3 | 2 |
| 2 | 6 | 7 | 3 | 5 | 1 | 8 | 9 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங் குபடுத்தி ஒரே கோலத்தை ஏற் படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களை யும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரை யிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப் பப்பட வேண்டும். அவ்வாறு நிரப் பப்படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றி கரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## நாளை 2015

மார்கழி-23 புதன்கிழமை

07.01.2015

திதி: துதியை பி.ப.01.44 மணி வரை

நட்சத்திரம்: பூசம் பி.ப.01.59 மணிவரை

சுபநேரம்: 05.02-06.32 மணி வரை

இராகுகாலம்: 12.32-02.02 மணி வரை

## இனிமேல் இல்லை மனச்சோர்வு

(கடந்த வாரத் தொடர்ச்சி)

கோபத்தை, வேண்டிய சதவிகிதத்தில் மட்டும் பயன் படுத்துங்கள். கோபத்தின் கைகளில் ஆட்பட்டு விடாதீர்கள். கோபம் எப்படி வேலை செய்கிறது என்பதைச் சில ஆராய்ச்சிகள் சொல்லக் கேட்கையில் ஆச்சரியமாய் இருக்கிறது. நீங்கள் ஒருவர்மேல் கோபம் கொண்டு, அவரைத் திட்டவேண்டும் என்று கூட இல்லை. எங்கோ தொலைதூரத்தில் இருக்கிறார், அவரைப்பற்றி நினைக்கிறபோது உங்கள் மனதில் கோபம் உருவாகிறது என்றாலே, உங்கள் சக்தி அங்கே விரயமாகத் தொடங்குகிறது. அந்தக் கசப்பான நினைவுகளைக் கசக்கிப் பிழிவதில் சொட்டுச் சொட்டாக உங்கள் சக்தி வற்றுகிறது. உங்கள் கோபத்துக்குரியவர் அங்கே தன்னுடைய வேலையை அமைதியாகப் பார்த்துக் கொண்டிருப்பார். இந்தக் கோபம் அவசியம்தானா என்று கோபப்படாமல் சொல்லுங்கள்.





மனச்சோர்வின் மற்றொரு மூலம், இழப்பில் ஏற்படும் அதிர்ச்சியும், வருத்தமும் ஆகும். இழக்கக்கூடாத ஒரு தனிமனிதரையோ பொருளையோ வணிக வாய்ப்பையோ இழந்து விடும் நிலை உருவாவதாக வைத்துக் கொள்வோம். அதனால் வருகிற வலியை, வருத்தத்தை, வேதனையை உள் வாங்குங்கள். அதை அனுபவியுங்கள். அந்த வலி வளரும்போதே 'அடுத்தது என்ன' என்பதை நோக்கி உங்கள் கவனத்தைத் திருப்புங்கள். அந்த இழப்பை எப்படி ஈடுகட்டுவது என்று யோசியுங்கள். யோசிப்பதோடு நிறுத்தாமல் உடனே அதை நோக்கி ஓரடியாவது முன்னால் எடுத்து வையுங்கள். எமது கட்டுப்பாட்டைக் கடந்து ஒன்று நிகழ்ந்துவிட்டதே என்ற அதிர்ச்சியிலேயே அமர்ந்துவிட்டால் அது பெரும் சோர்வை ஏற்படுத்தும். அந்த அதிர்ச்சியின் எதிர் விளைவாக சூழ்நிலையை இனியாவது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவோம் என்கிற முயற்சியே எம்மை இழப்பிலிருந்து மீட்டெடுக்கும். சகல மனிதனுக்குள்ளேயும் வாழ்வின் ஏதாவதொரு வலிமிகுந்த நேரத்தில் அடுத்தவர்களின் அனுதாபம் அவசியம் என்கிற தேடல் இருக்கிறது. மனச்சோர்வில் மற்றவர்களின் ஆறுதலை எதிர்பார்த்து, அந்த ஆறுதல் கிடைக்கா விட்டால் அதுவே மனச்சோர்வை அதிகரிக்கும் விடய மாகிவிடும். 'தாயும் பிள்ளையும் ஆனாலும் கூட வாயும் வயிறும், வேறு வேறுதான்' என்றொரு பழமொழி உண்டு. தனது கையை ஊன்றி எழுவது தான் பலம். நாங்கள் வளர்த்துக் கொள்ளும் கவலை கள், மனச்சோர்வு ஆகியவற் றுக்கு இரண்டு முகங் கள் உள்ளன. ஒருமுகம் உண்மையான காரணம். மற்றையது ஆறுதல் தேடுகிற இயல்பு. இந்த இரண் டாவது முகம் எப்படி உருவானது என்பதே நுட்ப மான ஓர் உண்மை.

மனச்சோர்வு என்பது உணர்வுரீதியாய் ஏற்படுகிற பின்னடைவு, அதனை நேர்மறை உணர்வுகளால் சீரமைத்து, அறிவுரீதியாய் அடுத்த கட்டத்துக்கு நகர்ந்து போகவேண்டும். எம்மீது எமக்கே வருத்தமோ நம்பிக்கையின்மையோ ஏற்படுகிறதா? அப்போதுதான் எமக்கு நாமே இன்னும் ஆதரவாய், எமக்கு நாமே இன்னும் நெருக்கமாய் இருக்க வேண்டும்.


மனச்சோர்வுக்கு ஆட்படும் நேரங்களில் பலர் நிறைய சாப்பிடுவார்கள். ஏற்பட்ட வெற்றிடத்தை இட்டு நிரப்ப வேண்டும் என்கிற உந்துதலில் அப்படித் தோன்றும். நிறையச் சாப்பிடுவது என்று தோன்றுகிற மனநிலையை விட சற்றுக் கூர்ந்து கவனித்து சரியாகக் கையாண்டால் வியப்பளிக்கும் விதமாய் மாற்றங்களைக் காணலாம். மனச்சோர்வுக்கு உடனடிக் காரணமாய் நாம் சில சம்பவங்களைச் சொல்கிறோம். அந்தச் சம்பவங்களுக்காக சங்கடப்பட்டுக் கொண்டிருக்காமல், மனதில் தடுமாற்றமடையாமல் மாற்றம் செய்து, சக்தியைச் சேமித்துக் கொள்ளுங்கள். இந்தப் பழக்கம் ஒரு பயிற்சியாக வளர வளர மனச்சோர்விலிருந்து விடுதலை பெறலாம் நிரந்தரமாக!

## கடலுணவுகளின் நேற்றைய நிலவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 700 | 700 | 800 | 1000 | 700 | 380 |
| நண்டு | 200 | 550 | 350 | 400 | 200 | 250 |
| கணவாய் | 400 | 600 | 400 | 400 | 500 | – |
| பாரை | 450 | 450 | 500 | 350 | 400 | 350 |
| சுறா | 500 | 500 | 600 | 600 | 600 | – |
| சீலா | 300 | 450 | 300 | 400 | 300 | – |
| விளை | 450 | 400 | 300 | 350 | 500 | 360 |
| முரல் | 230 | 350 | 350 | 400 | 400 | – |
| கும்பிளா | 310 | 250 | 250 | 500 | 300 | – |
| கிழாக்கன் | 200 | 500 | 400 | 400 | 350 | – |
| ஓரா | 350 | 300 | 300 | 350 | – | – |
| திரளி | 150 | 250 | 240 | 200 | 200 | – |
| நகரை | 150 | 250 | 200 | 400 | 200 | – |
| சூடை | 100 | 100 | 150 | 200 | 100 | 40 |
| ஒட்டி | 200 | 200 | 250 | 300 | 300 | 200 |
| திருக்கை | 100 | 300 | 240 | 200 | 200 | 110 |
| பாலை | 350 | 300 | 300 | 400 | 300 | – |
| வாளை | – | 200 | 200 | 300 | – | 150 |
| கொய் | 120 | 200 | 140 | 100 | 50 | – |
| மதனம் | 150 | 250 | 150 | 250 | 200 | 120 |




# உங்களுக்கு எப்படி?



## கடகம்

இந்த ஆண்டு கூடுதலான வெற்றிகளைக் காண்பீர்கள். சேமிப்புகளை ஆதாயம் தரும் விடயங்களில் முதலீடு செய்வீர்கள். திட்டமிட்டுச் சரியாகச் செயலாற்றுவீர்கள். கடினமாக உழைத்து லாபமடைவீர்கள். மனதை ஒருமுகப்படுத்தும் ஆற்றல் உண்டாகும். தொழிலில் புதிய வாய்ப்புகளைப் பெறுவதற்காக அடிக்கடி பயணங்களை மேற்கொள்வீர்கள். சொத்து விவகாரங்களில் நிலவிய சிக்கல்கள் விலகும். சமுதாயத்தில் உயர்ந்த பதவிகளையும் பெறுவீர்கள்.

சிறிய முதலீட்டின் மூலமும் பெரிய வெற்றிகளைக் காண்பீர்கள். ஆதாயம் தரும் தொழில்களைத் தொடங்குவீர்கள். தொலைவிலுள்ள புண்ணிய தலங்களுக்கு ஆன்மிகப் பயணங்களை மேற்கொள்ளும் வாய்ப்பு பலருக்குக் கிடைக்கும்.

உங்களது தன்னம்பிக்கை அதிகரிக்கும். திறமைகள் பளிச்சிடும். குழந்தைகளைக் கண்டிப்புடன் வளர்ப்பீர்கள். அதேநேரம் அவர்களின் மகிழ்ச்சிக்காக சுற்றுலாவும் சென்று வருவீர்கள். பதற்றப்படாமல் உங்கள் செயல்களைச் செய்து முடிப்பீர்கள். ஒரு விடயத்தில் கவனம் தேவை. உங்களது நெருங்கிய நண்பர்களே உங்களை ஏமாற்ற முயற்சிக்கலாம். இதனால் மனதில் குழப்பங்கள் சூழும். இதை முன்னெச்சரிக்கையாக எடுத்துக்கொண்டு உங்கள் ரகசியங்களை எவரிடமும் பகிர்ந்து கொள்ள வேண்டாம். உங்களது கருத்துக்களை அனைவரும் ஏற்றுக்கொள்வார்கள். ஆனால் அவற்றை எச்சரிக்கை உணர்வுடன் வெளிப்படுத்துங்கள். கடினமான வேலைகளையும் சுலபமாகச் செய்து முடிப்பீர்கள். கடன்கள் ஏற்படாது. செய்தொழிலில் ஏற்படும் போட்டிகளை சாதுரியத்துடன் எதிர்கொள்வீர்கள். தெய்வ வழிபாட்டில் நம்பிக்கையுடன் ஈடுபடுவீர்கள். பணப் புழக்கம் நன்றாக இருக்கும். என்றாலும் அத்தற்கேற்ற செலவுகளும் உண்டாகும். அதனால் அநாவசிய செலவுகளைத் தவிர்த்து, முக்கியமான செலவுகளை மட்டுமே செய்யவும். உங்களின் நடை, உடை, பாவனைகளில் அழகு உண்டாகும். சிலருக்கு வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். எதிர்பாராத பயணங்களால் அதிர்ஷ்ட வாய்ப்புகளைப் பெறுவீர்கள்.

### உத்தியோகத்தர்கள்

உத்தியோகத்தர்கள் கடுமையாக உழைத்தாலும் அதில் மேலதிகாரிகள் குற்றம் காண வாய்ப்புண்டு. அதேசமயம் சக ஊழியர்கள் உங்களுக்கு உறுதுணையாக நிற்பார்கள். இதனால் சமாளித்துவிடுவீர்கள். சிலருக்கு அலுவலக ரீதியாக வெளியூரில் சில காலம் தங்கிப் பணியாற்ற வேண்டிய சூழ்நிலை உருவாகும். அலுவலகத்திலிருந்து கடன் கிடைத்து வாகனம் வாங்கும் யோகமும் பலருக்கு அமையும்.

### வியாபாரிகள்

வியாபாரிகளுக்குக் கொடுக்கல், வாங்கல் விஷயங்களில் எந்தக் குறையும் ஏற்படாது. ஆனாலும் எதிலும் கவனமாக இருக்கவும். புதிய முதலீடுகளைக் கூட்டாளிகளைக் கலந்தாலோசித்த பிறகே செய்யவும். தேவைக்கேற்ற பொருள்களை மட்டுமே வாங்கி விற்கவும். அதேசமயம் சந்தைகளில் போட்டிக்குத் தகுந்தவாறு விலையை நிர்ணயித்து லாபமடைய நிறையவே வாய்ப்புகள் உள்ளன.

### கலைஞர்கள்

கலைத்துறையினருக்கு அனுகூலமான திருப்பங்கள் உண்டாகும். பாராட்டும், பணமும் உங்கள் உள்ளத்தை உற்சாகப்படுத்தும். சக கலைஞர்கள் நட்புடன் பழகுவார்கள். அவர்களால் உங்களுக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும். ரசிகர் மன்றங்களுக்குச் செலவு செய்து மகிழ்வீர்கள். அதேசமயம் சோம்பலுக்கு இடம் கொடுக்காமல் உங்கள் காரியங்களைச் செய்யவும்.

### பெண்கள்

பெண்கள் இல்லத்தில் மகிழ்ச்சியைக் காண்பீர்கள். கணவரிடம் பாசத்தோடு பழகுவீர்கள். புதிய ஆடை, ஆபரணங்களை வாங்கி மகிழ்வீர்கள். தேவையற்ற கவலைகள் சிலருக்குத் தோன்றலாம். மனதைக் கட்டுப்படுத்த யோகா, ப்ராணாயாமம் போன்றவற்றைச் செய்தால், கவலைகள் தேவையற்றவை என்பது தானாகப் புரியும்.




உங்களுக்கு எப்படி?

### கூட்டெண் பலன்கள் 3-9

இந்த எண் கொண்டவர் குருவுடன் செவ்வாய் சேரும் ஆதிக்கப்பலன் உடையவர் உயரம் சற்று அதிகமாகவும் உடல் பலத்துடன் இருக்கும். கை,கால் பருமனாக இருக்கும். அடர்ந்த புருவம், இமைகள் தடித்தும் இருக்கும்.

தந்திரமும், அறிவும் மிக்க இவர்களிடம் ஆத்திரமும், கோபமும் சற்று அதிகமாகவே இருக்கும்.

இவர்கள் கடவுள் நம்பிக்கை அதிகம் கொண்டவர்கள். ஆன்மிகம் தெரிந்த பெரியவர்களிடம் வந்து தெய்வ சங்கதிகளைத் தெரிந்து கொண்டு பூஜைகளில் இறங்குவார்கள். பிறர் மனதை எடைபோட்டு ஆளை அறியக் கூடிய இவர்கள் வந்த சண்டை சச்சரவை விட மாட்டார்கள்.

கல்வி, கலைகளில் ஈடுபாடுள்ளவர்கள். மிகத் தைரியமாக ஆபத்தான வேலைகளிலும் தலை கொடுப்பார்கள். பிறருக்கு அடங்கி வாழமாட்டார்கள். நன்கு சிந்தித்துத்தான் எதிலும் ஈடுபடுவார்கள்.

குடும்பப் பொறுப்பும், பாசமும் உள்ள இவர்கள் குடும்பத்தை விரும்பி நடத்துவார்கள்.

தமது பாசத்தை நேரிடையாகக் காட்டிக் கொள்ளமாட்டார்கள். இவர்களுக்கு வாழ்க்கை துணை நன்றாக அமையும். பிறந்த இடம் விட்டு வேறு இடத் திற்கு சென்று வாழ்வார்கள்.

தொழில்கள் அனைத்தும் இவர்களுக்குப் பொருத்தமானவை. இராணுவத்தில் ஆசிரியர், பொலிஸ் பயிற்சியாளர், உளவாளி, விளையாட்டு வீரர், சாகசத்கதை, புரட்சிக் கவிதை எழுதுபவர்.

கட்டட வேலை போன்ற கடும் உழைப்பு தேவைப் படக் கூடிய தொழில் புரிவார்கள்.

இவர்களை காய்ச்சல், வயிற்று வலி, அம்மை, தோல்நோய்கள் போன்றவை தாக்கக்கூடும். இரத்தச் சோகை ஏற்படும்.

விபத்து, காயங்கள், மின்சார விபத்துக்கள் நேராமலும் கவனமாக இருக்க வேண்டும். பல், கண், காது கோளாறுகள் ஏற்படும்.

### கூட்டெண் பலன்கள் 4-1

இவர்கள் ராகுவுடன் சூரியன் இணைந்து தரும் பலன்களுக்கு உரியவர்கள். இவர்கள் உயரமாகவும், சுருட்டை முடியுடன் இருப்பர். அழகாகவும் உடல் எடை சற்று பருத்தும் காணப்படுவர். வசீகரிக்கும் கண்கள் கொண்டவராக இருப்பர்.

இந்த எண் கொண்டவர்கள் அனைவரிடமும் கலகலவென பேசி எல்லோருக்கும் பிடித்தவராக நடந்து கொள்வர். சமயத்திற்கு ஏற்ப ஆளுக்குத் தக்கபடி நடந்து கொள்வர். எளிதில் அனைத்திலும் நம்பிக்கை கொண்டிடுவர். நிறையப் பேசுவர். இவர்களை நம்பி உதவியை எதிர்பார்க்கலாம்.

கல்வித்தடை வரும், விட்டை விட்டு வெளியேறுவார்கள் இது போன்ற திடீர் திருப்பங்கள் ஏற்படும். எதையும் சகித்துக் கொள்ளும் தன்மை இவர்களிடம் இருக்கும். நடுவயதில் குணம் மாறும். உருப்படியான வேலைகளில் இறங்குவர். தொழிற் திறமையால் முன்னேறுவர்.

செலவு அதிகம் செய்வர். பிறர் பாராட்ட வேண்டும் என்று சக்திக்கு மேல் அதிகமாக செலவு செய்பவராக இருப்பர். இவர்களுக்கு அமையும் துணை தான் குடும்ப நிர்வாகம் செய்தாக வேண்டும். குடும்பத்தில் அனைவரையும் அடக்கி ஆள்ப்வராக இருப்பர். திடீர் அதிஷ்டம் ஏற்படும் வாய்ப்பு உள்ளது. பூர்வீக சொத்து கொஞ்சமாவது இருக்கும். ஆனால் அது இவர்களுக்குப் பயன்படாது. அச்சுத்தொழில், போக்குவரத்துத்துறை, சினிமா, நாடகம், வானொலி, தொலைக்காட்சி சம் பந்தப்பட்ட தொழில்கள், நூலெழுதுதல், புத்தக வியாபாரம், தனியாரில் வேலை பார்த்தல், வாகனம் தயாரித்தலும், ஒட்டுத லும் என்பன இவர்களுக்குப் பொருத்தமான தொழில்கள் ஆகும்.

நடுவயது வரை காய்ச்சலைத் தவிர வேறொரு நோயும் வராது. ஆனால் பிறகு வெப்பத்தால் உண்டாகும் நோய்கள் வரலாம். உடல் உறுப்பு, கை, கால்களில் பலத்த காயம் ஏற்பட வாய்ப்புக்கள் உண்டு. மஞ்சட்காமாலை, மலேரியா ஜுரம், கண் கோளாறுகள், வாயுவால் உண்டாகும் தொல்லை, முதுகுவலி போன்ற நோய்களால் அவதிப் படலாம்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
12
.
01
.
1927

மறைவு
07
.
12
.
2014

## அமரர் செல்லமுத்து பொன்னம்பலம்

இமைகள் மூடி திறப்பதற்குள்
முப்பத்தொரு நாள்களாகிவிட்டன
நாம் வாழும் நாள்களில்
உங்கள் நினைவுகள்
எங்கள் நினைவில் என்றும்
அழியா...............

**இன்று (06.01.2015) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் ஆவரங்கால் சிவசக்தி மணி மண்டபத்தில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார் உறவினர், நண்பர்கள், அனைவரையும் அழைக்கின்றோம்**

நிரந்தர முகவரி: பலாலி கிழக்கு, வசாவிளான். தற்காலிக முகவரி: அச்சுவேலி, பத்தமேனி. குடும்பத்தினர்

# மரத்திலிருந்து தவறி வீழ்ந்து காயம்

தென்மராட்சி, ஜன.6
குழைவெட்ட மரத்தில் ஏறியவர் தவறி வீழ்ந்து காயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மட்டுவில் தெற்கில் இடம் பெற்றது.
குறித்த சம்பவத்தில் காயமடைந்த அருமையன் செல்வம் (வயது–56) என்பவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (வ–9)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு
03.05.1930

உதிர்வு
07.12.2014

## சின்னத்தம்பி செல்வரத்தினம்

(ஓய்வு பெற்ற ஆசிரியரும்,
சமாதான நீதிவானும்)

கடந்த 07.12.2014 சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (06.01.2015) செவ்வாய்க்கிழமை பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும்.

தாங்கள் அனைவரும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள் ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.)

குடும்பத்தினர்.

"சிவகிரி" சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி.

(55568)(4.7)

# 21 ஆம் ஆண்டு நினைவு நாள்



வருடங்கள் பல சென்றாலும் உங்கள் நினைவுகளுடன்
என்றும் வணிகர்கள்

## அமரர் சங்கரப்பிள்ளை நமசிவாயம்

(முன்னாள் தலைவர்– சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்
முன்னாள் உரிமையாளர்– அம்பிகா பார்மசி சாவகச்சேரி)

மண்ணில்
22.08.1937

விண்ணில்
06.01.1994

மன்றச் சேவைக்கென வந்து அகால அமரத்துவமடைந்த அமரரின் நினைவுநாளும் நினைவுக்கூட்டமும் இன்று (06.01.2015) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணிக்கு மன்ற அலுவலகத்தில் உள்ள அமரரின் நினைவு மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் இந்நிகழ்வில் அங்கத்தவர்கள் அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு அன்பாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

(C/18651)(4.7)

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் செல்லப்பா பாலசிங்கம்

அன்னை மடியில்
03.04.1936

ஆண்டவன் அடியில்
18.12.2013

திதி: துதியை(06.01.2015)

ஆண்டொன்று சென்றது ஆறவில்லை எம் மனம் அப்பா!
உங்கள் நினைவுகள் தினமும் எம் மனதில் ஊசல் ஆடுதப்பா!
நெஞ்சம் மறக்கவில்லை நினைவுகள் அழியவில்லையப்பா!
நம் கண்ணீரும் காயவில்லை கனவுகளும் ஓயவில்லையப்பா!
பாசமாய் பெற்றெடுத்து பாரினில் வாழவைத்தீர் அப்பா!
இன்று எம்முடன் நீங்கள் இல்லை அப்பா!
மறு பிறவியிலாவது எங்களுடன் வரமாட்டீர்களா அப்பா!
உயிர் இருக்கும் வரை மறக்கமாட்டோம் அப்பா!

குடும்பத்தினர்.

ஆவரங்கால் மேற்கு,
புத்தூர்.

(c 18654)(8.3)

# ஆண், பெண் வேறுபடுத்தவே 'மிஸ்டர்' எனக் குறிப்பிட்டேன்

## சந்திரிகா குமாரதுங்க விளக்கம்

கொழும்பு, ஜன.6

ஆணா அல்லது பெண்ணா என்பதை வேறுபடுத்தி குறிப்பிடவே தான் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவரை ஆங்கிலத்தில் மிஸ்டர் பிரபாகரன் எனக் கூறினேன் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

மிஸ்டர் மற்றும் மிஸ் ஆகிய இரண்டு வார்த்தைகள் ஆணா அல்லது பெண்ணா என்பதை அறிய ஆங்கிலத்தில் பயன்படுத்தப்படும் வார்த்தைகள் எனவும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் எனது ஆட்சிக்காலம் முழுவதும் விடுதலைப் புலிகள் அமைப்புக்கு எதிராகப் போரிட்டேன். எனது ஆட்சியின் போதே யாழ்ப்பாணம் மீட்கப்பட்டது."– என்று தெரிவித்தார்.

அதேவேளை இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன,

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடையும் மஹிந்த ராஜபக்ஷ உட்பட அவரது குடும்பத்தினருக்கு முழுமையான பாதுகாப்பு வழங்கப்படும். தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் நாட்டில் புதிய அரசியல் கலாசாரம் உருவாக்கப்படும். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது தோல்வியை ஏற்கனவே ஒப்புக்கொண்டுள்ளார்.

விடுதலைப் புலிகளின் தலைவர்கள் குமரன் பத்மநாதன், கருணா அம்மான் போன்றவர்கள் அரசுடனேயே தற்போது இருக்கின்றனர்"– என்று கூறியுள்ளார்.

கடந்த வாரம் தேர்தல் பரப்புரைக்காக வடக்குக்கு வந்திருந்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே. பிரபாகரனை 'மிஸ்டர் பிரபாகரன்' என்று விளித்து உரையாற்றியிருந்தார். அதற்கு ஆளும்தரப்பினர் பலர் கண்டனம் தெரிவித்ததுடன், பரப்புரைக் கூட்டங்களிலும் அதைக் குறிப்பிட்டு வந்தனர். இந்த நிலையிலேயே சந்திரிகா மேற்கண்டவாறு விளக்கமளித்துள்ளார். (ற)

# அரசின் விடுதலைப் புலி பரப்புரை போலியானது

## சரத் பொன்சேகா கூறுகின்றார்

கொழும்பு, ஜன.6

அரசின் புலிப் பரப்புரை போலியானது என்று ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகளுடன் தமிழீழ விடுதலைப் புலிகளை இணைத்து அரசு செய்து வரும் பரப்புரைகள் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் தலைவர்களுக்கு அடைக்கலம் வழங்கிவரும் ஆளும் கட்சி, எதிர்க்கட்சியினர் மீது குற்றச் சாட்டுக்களை சுமத்தி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

விநாயகமூர்த்தி முரளீதரன், பிள்ளையான், தயா மாஸ்டர், ஜோர்ஜ் மாஸ்டர் மற்றும் குமரன் பத்மநாதன் போன்றவர்கள் அரசுடன் இணைந்து கொண்டு செயற்பட்டு வருகின்றனர் என்றும் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடையக் கூடும் என்ற அச்சம் காரணமாக அரசு இவ்வாறு போலிப் பரப்புரையில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார். (ற)

# போதைப்பொருள் கடத்தல்காரர் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவர்

## ஹிருணிகா பிரேமசந்திர தெரிவிப்பு

கொழும்பு, ஜன.6

போதைப் பொருள் கடத்தல்காரர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவர் என மேல் மாகாணசபை உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர தெரிவித்துள்ளார்.

மாத்தறை தெவிநுவரவில் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு திரட்டி நடத்தப்பட்ட தேர்தல் பரப்புரைக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி தேர்தலில் வெற்றியீட்டியதன் பின்னர், போதைப் பொருள் கடத்தல்காரர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

மஹிந்த ராஜபக்ஷ அரசில் அங்கம் வகிக்கும் போதைப் பொருள் கடத்தல் காரர்கள், கொலையாளிகள், பாலியல் வன்கொடுமையாளர்கள்



உள்ளிட்ட அனைத்து குற்றவாளிகளுக்கும் தண்டனை விதிக்கப்படும். எதிர்வரும் 11ஆம் திகதி இந்தக் குற்றவாளிகள் சட்டத்தின் முன்நிறுத்தப்படுவர். புதிய அரசின் கீழ் தூய்மையான அரசொன்று அமைக்கப்படும். – என்று தெரிவித்துள்ளார். (ற)

## தொடர்ச்சிகள்

### வாக்களிப்பதற்கு

முதன் முறையாக தேர்தல்கள் திணைக்களத்தினால் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் நாளை மறுதினம் வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது. தேர்தலில் மக்களை வாக்களிக்க விடாமல் செய்வதற்குரிய சதி முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக கண்காணிப்பாளர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

வாக்களிப்பதற்கு மக்கள் செல்லாமல் தடுப்பதற்காக அவர்களை அச்சுறுத்தும் வகையில் வதந்திகள் பரப்பப்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது.

இந்த நிலையில் வதந்திகளை மக்கள் நம்ப வேண்டாம் என்று தேர்தல்கள் திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது. வாக்களிப்பது மக்கள் உரிமை என்று வலியுறுத்தியுள்ளது.

மாகாண சபைத் தேர்தலில் மக்கள் பாதுகாப்பாக அச்சுறுத்தல் இன்றி அச்சம் இன்றி வாக்களிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளிலும் பார்க்கப் பல மடங்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் தேர்தல் திணைக்கம் அறிவித்துள்ளது (உ–5)

### தேர்தல்

நடத்தி முடிப்பதற்கு தேர்தல்கள் திணைக்களம் சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது.

நாளையும், நாளை மறுதினம் வியாழக்கிழமையும் விசேட கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக, தென்பகுதியிலிருந்து அதிகாரிகள் குழுவினர் வருகை தந்துள்ளனர்.

இவர்கள், வடக்கின் சகல பகுதிகளிலும் தொடர்ச்சியாக உலாவி கண்காணிப்பில் ஈடுபடுவார்கள். எனவே மக்கள் எந்த அச்சமும் இன்றி வாக்களிக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் தொடர்பான எந்தெவாரு அசம்பாவிதம் குறித்தும் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுக்கு அறிவிக்க முடியும் என்றும் தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது. தகவல் கிடைக்கப் பெற்ற உடனேயே அந்தப் பிரதேசத்துக்கு அதிகாரிகள் வருவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 0777464912, 0717345542, 0717345534, 0212222655 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு எந்தச் சந்தர்ப்பத்திலும் தொடர்பு கொண்டு முறைப்பாடுகளைத் தெரிவிக்க முடியும். (உ–5)

**வீடு வாடகைக்கு**

ஸ்ரான்லி வீதியில் புகையிரத நிலையம் முன்பாக சகல வசதிகளுடனும் கூடிய மாடி வீட்டுடன் இரண்டு கடைகளும் வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:- (கணேஸ்)
077 9120422, 0779186203

**வேலையாள்கள் தேவை**

யாழ் வீதி மானிப்பாயில் இயங்கும்
மதுபான்ஸி ஹவுஸ் & பிள்ளையார் பூட்சிற்றி
என்பவற்றுக்கு
01) முகாமையாளர்.
02) கணக்குப் பதியுனர்.
03 பூட்சிற்றி உதவியாளர்கள் (பெண்கள்)
(அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது).

உடன் தொடர்பு கொள்ளவும்:
மது பான்ஸி ஹவுஸ் & பிள்ளையார் பூட்சிற்றி
யாழ். வீதி, மானிப்பாய்

**பெயர் மாற்றம்**

யாழ்ப்பாணம் முஸ்லிம் கல்லூரி வீதியை சேர்ந்த **ரமீஸ் சாந்தி** ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை **ரமீஸ் சாஹிரா** என பெயர் மாற்றம் செய்வதோடு இனி வரும் சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என அறியத் தருகின்றேன்.

ரமீஸ் சாஹிரா

**Soft View Computer Center**

கணினி, ஆங்கிலம், சிங்களம் ஆகிய அனைத்து பாட நெறிகளுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம் ஜனவரி 10 ஆம் திகதிக்கு முன் சேரும் அனைத்து மாணவர்களுக்கும் அனுமதிக்கட்டணம் இலவசம்.

102, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (சி/18903) (4.7)

E.C. Colin
077 905 3545,
021 222 4885

**வீடு, அறை வாடகைக்குண்டு**

யாழ். இந்துக்கல்லூரி அருகில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குண்டு. பெண்களுக்கு அறைகளும் வாடகைக்குண்டு.

தொடர்: 077 833 6848 (55579) (4.3)

**பூநகரி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், பூநகரி (வ.து)**

**பாரவூர்திகள் பகிரங்க ஏல விற்பனை**

வரையறுக்கப்பட்ட பூநகரி பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்துக்கு சொந்தமான NPLA-5114, 47-3141 ஆம் இலக்க பாரவூர்திகளை 30.01.2015 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு சங்க தலைமைக் காரியாலயத்தில் வைத்து பகிரங்க ஏல விற்பனை செய்யப்படும்.

மேற்படி பாரவூர்திகளை காலை 8.30 மணி தொடக்கம், மாலை 5.00 மணிவரை சங்க தலைமைக் காரியாலயத்தில் பார்வையிடலாம்.

| வாகன இலக்கம் | வாகன வகை | ஆரம்ப விலை |
|---|---|---|
| 47-3141 | Ashok Leyland | 400,000.00 |
| NP LA5114 | Ashok Leyland | 350,000.00 |

வாகனத்துக்கான கேள்வி கோரும் மீளளிக்கப்படாத தொகை ரூபா. 500.00 ம், கேள்வி வைப்புப் பணமாக ரூபா. 5000.00 (மீளளிக்கக்கூடியது) செலுத்தி பற்றுச் சீட்டைப் பெற்று, கேள்விக்கு சமுகமளிக்கவும்.

திரு. ந.சுந்தரமூர்த்தி
தலைவர்
பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

(C18905) (10)

# செய்திகள்

## புத்தூர்ச் சந்தியில் பயணிகள் வாகனத் தரிப்பிடம் திறப்பு

தென்மராட்சி, ஜன.6

ஓய்வுநிலை அதிபர் அ.பொ. செல்லையாவின் நினைவாக மீசாலை, புத்தூர்ச் சந்தியில் நிர்மாணிக்கப்பட்ட பயணிகள் வாகனத் தரிப்பிடம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

யாழ்.பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் கொன்ஸ்ரன்ரைன் ஜக்ஷீல் குறித்த வாகனத் தரிப்பிடக் கட்டடத்தைத் திறந்து வைத்தரர். அத்துடன் மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியில் ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் 3 ஏ தர சித்திபெற்ற மாணவர்களுக்கு அ.பொ.செல்லையா நினைவு புலமைப் பரிசில்நிதிவழங்கப்பட்டது. (வ–9)

## திஸ்ஸ வெளியிட்ட ஆவணம் போலியாக தயாரிக்கப்பட்டதே

### உறுதிப்படுத்தினார் அரச பகுப்பாய்வாளர்; திஸ்ஸவுக்கு எதிராக வழக்குத் தொடரப்படவுள்ளது

கொழும்பு, ஜன.6

மைத்திரி–ரணில் ஒப்பந்தம் குறித்து திஸ்ஸ அத்தநாயக்க முன்வைத்த ஆவணம் போலியானது என்று அரச இரசாயனப் பகுப்பாய்வாளர் அதிரடியாக நிராகரித்துள்ளார்.


தனி ஈழம் வழங்குவது உட்பட சில விடயங்கள் தொடர்பாக பொது வேட்பாளர் மைத்திரி மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கிடையில் இரகசிய ஒப்பந்தம் ஒன்று இருப்பதாக அரசு குற்றம் சாட்டியது. அந்த நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்து அரசுக்குத் தாவி, அமைச்சுப் பதவியைப் பெற்றுக் கொண்டுள்ள திஸ்ஸ அத்தநாயக்க அது தொடர்பில் ஆவணம் ஒன்றைப் பகிரங்கப் படுத்தியிருந்தார்.

எனினும் மைத்திரி தரப்பினர் அது போலியானது என்று தெரிவித்து, நீதிமன்றத்தில் முறையிட்டதன் பேரில் குறித்த ஆவணம் இரசாயனப் பகுப்பாய்வுக்குஉட்படுத்தப்பட்டது. பகுப்பாய்வின் முடிவுகளின்படி, திஸ்ஸ முன்வைத்த ஆவணம் போலியானது என்று இரசாயனப்பகுப் பாய்வாளர் உறுதிப்படுத்தியுள் ளார்.

குறித்த ஆவணத்தில் இருக்கும் கையொப்பங்கள் 'ஸ்கான்' செய்து எடுக்கப்பட்டு, போலியானமுறையில் பயன்படுத்தப்பட்டிருப்பதாகவும் இரசாயனப் பகுப்பாய்வாளர் தெரிவித்துள்ளார்.

அதன் காரணமாக மைத்திரியின் நற்பெயருக்கு களங்கம் விளைவித்தமை, போலியான கையெழுத்து முயற்சி, போலியான ஆவணம் தயாரிப்பு ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் திஸ்ஸ அத்தநாயக்க மீது வழக்குத் தொடரப்படவுள்ளது. இந்த வழக்கு முடிவில் திஸ்ஸ அத்தநாயக்க பெருந்தொகைப் பணத்தை நஷ்டஈடாக கொடுக்க வேண்டி ஏற்படும் என்று சட்டத்துறை வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர். (ந)

## மரண அறிவித்தல்கள்



### குலசேகரம் இளையதம்பி

முள்ளிவாய்க்கால் மேற்கு, முள்ளிவாய்க்காலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட குலசேகரம் இளையதம்பி 02.01.2015 வெள்ளிக்கிழமை இறைபதம் எய்தியுள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற குலசேகரம் - மீனாட்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தையா - பார்வதி தம்பதியரின் மருமகனும், வியாழம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நாகமுத்து, நாகம்மா (முள்ளிவாய்க்கால்), ஈஸ்வரி (முள்ளிவாய்க்கால்), சுந்தரலிங்கம் (லண்டன்), சிவசிதம்பரம் (லண்டன்), தங்கமலர் (முள்ளிவாய்க்கால்), சிவனேசன், காலஞ்சென்ற செல்வநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், பிரபாகரன் (லண்டன்), சர்வானந்ததேவி (ஜேர்மனி), புஸ்பராணி (முள்ளிவாய்க்கால்), அருணா (லண்டன்), கிருபாகரன் (லண்டன்) ஆகியோரின் அருமைத் தந்தையும், நசிகலா (லண்டன்), பரமானந்தசிவம் (ஜேர்மனி), சிவாகரன் (ஆசிரிய ஆலோசகர் - முல்லைத்தீவு), நிரோஜினி (முள்ளிவாய்க்கால்), நிசாந்தினி (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், நிதிலன் (ஜேர்மனி), அபிஸானா (முள்ளிவாய்க்கால்), நிலக்ஷன் (ஜேர்மனி), கிருட்சிகன் (லண்டன்), அபிவர்ஷி (முள்ளிவாய்க்கால்), நிஸ்மிதன் (லண்டன்), பிரஸ்கா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் முள்ளிவாய்க்காலிலுள்ள அவரின் இல்லத்தில் நாளை (07.01.2015) புதன்கிழமை நடைபெற்று, முற்பகல் 10.00 மணிக்கு முள்ளிவாய்க்கால் இந்துமயானத்துக்கு பூதவுடல் நல்லடக்கத்துக்காக எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முள்ளிவாய்க்கால் மேற்கு,
முள்ளிவாய்க்கால்.
(சி18663)(12.7)

தகவல்:
குடும்பத்தினர்.

### சரவணமுத்து மகேந்திரன்

பிறப்பு 17.05.1943 — இறப்பு 02.01.2015



கச்சாய் வீதி, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து மகேந்திரன் 02.01.2015 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து -சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும், சந்திராதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நடராசா மற்றும் இராசலட்சுமி ஆகியோரின் மருமகனும், சங்கீதா (கனடா), சர்மிளா (லண்டன்), சஜித்தா (லண் டன்), சந்திரிகா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வேளவேந்நன் (கனடா), இராஜதிலகன் (லண்டன்), நகுலன் (லண்டன்), ரகுநாத் (கனடா) ஆகியோரின் மாமனும், தமிழேஷ் (கனடா), தாமரா (கனடா) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.01.2015) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கட்டபறிச்சான் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முத்துவாசா
கச்சாய் வீதி,
கொடிகாமம்.
(55575) (4.7)

தகவல்:
சந்திராதேவி (மனைவி)
0776127315

## தங்கம்மா அப்பாக்குட்டியின் 90 ஆவது பிறந்ததின விழா

யாழ்ப்பாணம்.ஜன.6

சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் 90 ஆவது பிறந்தநாள் அறக் கொடை விழா நாளை புதன் கிழமை காலை 8.30 மணிக்கு தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தின் அன்னபூரணி மண் டபத்தில் நடைபெறவுள்ளது.

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தின் தலைவர் கலாநிதி ஆறு திருமுருகன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ். போதனா வைத்தியசாலையின் இரத்த சுத்திகரிப்புப் பிரிவுக்கும், வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் ஜி.சீ.ஈ சாதாரண தரத்தில் கல்வி கற்கும் வறிய நிலை மாண வர்கள் 100 பேருக்கு கல்விக்கான உதவித்தொகை ஆகியனவுக்கும் அறக் கொடை வழங்கல் இடம்பெறும். இதன்போது சமூக சேவையாளர்களும் கௌரவிக்கப்படவுள்ளனர்.

நிகழ்வில் கல்வித்துறை ஆய்வாளர் பேராசிரியர் மா.சின் னத்தம்பி, தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையின் புற்று நோய் சிகிச்சைப்பிரிவு வைத்திய நிபுணர் கிருஷாந்தி இராஜசூரியர், யாழ்.போதனா வைத்தி யசாலையின் வைத்திய நிபுணர் த.பேரானந்தராஜா, வடமராட்சி கல்விப்பணிப்பாளர் சி.நந்தகுமார் ஆகியோர் விருந் தினர்களாகக் கலந்து கொள் வர். (வ–14)

## குறிகாட்டுவானில் நிறுத்தப்பட்ட நிலையில் வடதாரகை II

யாழ்ப்பாணம், ஜன.6

நெடுந்தீவு மக்களின் போக்குவரத்துக்கென தருவிக்கப்பட்ட வட தாரைகை II மக்க ளுக்கான சேவையைத் தொடராத நிலையில் குறிகாட்டுவானில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த படகு நெடுந்தீவு மக்களுக்கான சேவையில் ஈடுபடவில்லையே தவிர அடிக்கடி உல்லாசப் பயணிகளாக நெடுந்தீவுக்குச் செல்வோரை ஏற்றி இறக்குவதாக நெடுந்தீவு மக்கள் கூறுகிறார்கள். நேற்றுமுன்தினமும் இந்தப் படகு உல்லாசப் பயணிகளுடன் நெடுந்தீவுக்குச் சென்று திரும்பியதாகவும் எனினும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் படகு ஊழியர்கள் குறித்த படகில் தாம் பணியாற்றவில்லை என்றும் குறிப்பிட்ட படகு சேவை யில் ஈடுபடுத்தப்பட்டமை பற்றித் தமக்கு அறிவிக்கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளனர். (வ–7)

## நெற்செய்கையாளர்களுக்கு வறட்சி பாதிப்புக் கொடுப்பனவு

தென்மராட்சி, ஜன.6

தென்மராட்சி பிரதேச நெற் செய்கையாளர்களுக்கு கடந்த வருடம் வறட்சியால் ஏற்பட்ட பாதிப்புக்கான கொடுப்பனவு நாளை தொடக்கம் அந்தந்த வங்கிகளில் பெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள் ளப்பட்டுள்ளன.

பிரதேசத்தைச் சேர்ந்த கைதடி, மீசாலை ஆகிய கமநல சேவைகள் நிலையங்களால் 47 கமக்கார அமைப்புகளைச் சேர்ந்த நெற்செய்கையாளர்க ளுக்கான கொடுப்பனவுத் தொகை பிரதேச செயலகம் ஊடாக அந்தந்த நெற்செய்கையாளர்களின் வங்கிக் கணக்குகளுக்கு இன்று அனுப்பி வைக்கப்படும் என்று தெரிவிக் கப்பட்டது.

47 கமக்கார அமைப்புக்களைச் சேர்ந்த 5 ஆயிரத்துக்கு மேற்பட்ட நெற்செய்கையா ளர்க ளுக்கு பரப்புக்கு 120 ரூபா வீதம் இழப்பீட்டுக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பிரதேச செயலகத்தில் இழப்பீடு பெறுவோரின் பட்டியலும், 5 வங்கிகளுக்கான காசோலைகள் தயாரிக்கும் பணியும் இடம்பெற்று வருகிறது. (வ–9)

### மரண அறிவித்தல்



திருமதி பிரான்சிஸ்கம்மா (கிளி அக்கா) தணிகாசலமூர்த்தி

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பிரான்சிஸ்கம்மா தணிகாசலமூர்த்தி 04.01.2015 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றர்வகளான அந்திரேசு - அருளம்மா (தெய்வானை) தம்பதியரின் அன்பு மகளும், தணிகாசலமூர்த்தியின் அன்பு மனைவியும், மேரிகனிஸ்ரெலா, நீகன், ஜீன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜெயக்காந், ஜான்சி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் றோகித்தியனின் அன்புப் பேர்த்தியும், மதிரத்தினம், பத்திநாதர், காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, பாக்கியம் நேசம்மா, ஜெயசீலி, அருள்சீலி, ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (06.01.2015) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் திருநெல்வேலி புனித சவேரியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொன் ஜேன்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சேச்லேன்,
திருநெல்வேலி.

தகவல்:
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரன்

# தொடர்ச்சிகள்

## அன்னமே

அப்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனநாயக உரிமைகள், மனித உரிமைகள், மனிதாபிமான நடைமுறைகளுக்காகவும் –

ஜனநாயக வழியில் இன விடுதலைக்காகப் போராடவும் –

நிலமீட்புக்காக, மீள்குடியேற்றத்திற்காக, போரினால் பாதிக்கப்பட்டோர் வாழ்வற்றோர் வாழ்வில் விடிவை ஏற்படுத்தவும்–

அதற்கான மாற்றத்தை ஏற்படுத்தவும்–

அதற்கான சூழலை ஏற்படுத்தவும் –

ஒரு வேளையாயினும் மூச்சு விடவும் நாம் வாக்களிப்போம்.

வருகின்ற 08ஆம் திகதி அதிகாலை நாட்டில் ஆட்சி மாற்றம் வேண்டும் என்று சிங்கள மக்களிடம் ஏற்பட்டுள்ள கிளர்ச்சியில் நாங்களும் பங்காளிகளாகி ராஜபக்ஷ அரசை மாற்ற வேண்டும் .

போர்க்காலத்தில் ராஜபக்ஷக்கள் செய்த அநீதிகளுக்கு எதிராக நாம் இன்று ஒரே அணியில் திரண்டு, சிங்கள மக்களுடன் ஒன்றிணைந்து ஆட்சி மாற்றத்திற்கு வாக்களிக்க வேண்டும்.

2010ஆம் ஆண்டில் முட்கம்பி வேலிகளுக்குள் இருந்த போதும் புலனாய்வாளர்களது அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் இராணுவத்தினரதும் ஒடுக்குமுறைகளுக்கு இடையிலும்கூட, மிகத் தெளிவாக ராஜபக்ஷவுக்கு எதிராக வாக்களித்தவர்கள் தமிழர்கள். அப்படிப்பட்ட எமது மக்கள் எதிர்வரும் தேர்தலிலும் அதே போன்ற முடிவையே எடுப்பார்கள்.

இறுதிப் போரின் போது கட்டளையிட்டது யார்? அதை வழி நடத்தியது யார்? என்றெல்லாம் அறிந்து அவர்களில் யாரை ஆதரிக்க வேண்டும் என்று தெரிந்து தீர்க்கமான முடிவு எடுத்து, தண்ணீரிலிருந்து பாலைப் பிரித்தறிந்து அருந்தும் அன்னம் போலக் கடந்த தேர்தலில் வாக்களித்தவர்கள் எமது மக்கள். எனவே இந்தத் தேர்தலிலும் அவர்களின் முடிவு தெளிவானதே.

போரில் தான் பெற்ற வெற்றியை முன்வைத்தே சிங்கள மக்களிடம் வாக்குக் கேட்கிறார் ராஜபக்ஷ என்பதை மறந்துவிடாதீர்கள். மஹிந்த ஏற்கனவே இரு தடவைகள் ஜனாதிபதியாக இருந்து விட்டார். மூன்றாவது தடவையும்தான் வருவதற்காக 18ஆவது திருத்தத்தை தனக்குச் சாதகமாக பயன்படுத்தி நீதிமன்றத்தில் தீர்ப்புப் பெற்று மூன்றாவது தடவையும் போட்டியிடுகிறார். அவர் வெற்றி பெற்றால் இன்னும் 7 ஆண்டுகள் தொடர்ந்து பதவியில் இருப்பார்.

இந்தத் தருணத்தில் தமிழர்களுக்கு எதுவித தீர்வையும் தருவதற்கு முன் வரமாட்டார். 2011 ஜனவரியில் இரண்டாவது தடவையாக ஜனாதிபதியாகிய பின்னர் அவர் செய்தவைகளே அதற்குச் சான்று. தீர்வு குறித்து நாம் அவருடன் பேசினோம், இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அடிப்படை வரைவு ஒன்றை முன்வைத்தோம். இராணுவ ஆதிக்கம் குறைக்கப்பட வேண்டும் என்று கேட்டோம். எங்களுடைய நிலங்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினோம். மக்கள் மீள்குடியேற்றப்பட வேண்டும், தமிழ் மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றெல்லாம் கேட்டிருந்தோம். ஆனால் இன்று வரை எதுவும் நடக்கவில்லை.

இந்த நிலையில் மீண்டும் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக வந்தால் நிலைமை எப்படி இருக்கும் என்பதை நீங்களே எண்ணிப் பாருங்கள். கடந்த 10 ஆண்டுகளில் எதுவும் செய்யாமல் இருந்து விட்டு, இப்போது அது செய்வேன், இது செய்வேன் என்று பொய்யுரைக்கின்றார். சர்வதேச சமூகத்திற்கு நாம் அழுத்தம் கொடுத்துத்தான் போர்க்குற்ற விசாரணையைக் கொண்டு வந்தோம். அந்த விசாரணைகளை ராஜபக்ஷ எதிர்க்கின்றார். தான் மீண்டும் ஜனாதிபதியானால் தான் அதிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியும் என்று பகிரங்கமாகச் சொல்கின்றார். அதனை நாம் ஆதரிக்கலாமா? எனவேதான் மைத்திரிபால சிறிசேனவை ஆதரிக்கத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏகமனதாக முடிவெடுத்தது.

மக்களாகிய நீங்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முடிவை ஏற்று எதிர்வரும் 08ஆம் திகதி அதிகாலை 7.00 மணிக்குச் சென்று அன்னத்திற்கு நேரே புள்ளடியிட்டு ஆட்சி மாற்றத்தில் பங்காளிகளாக மாறுங்கள்.

## குடாநாட்டில்

விநியோகிக்கப்பட்ட போலி வாக்குச் சீட்டுக்களைக் கைப்பற்றுவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

"யாழ். குடாநாட்டில் நேற்று விநியோகிக்கப்பட்ட மாதிரி வாக்குச் சீட்டு சட்ட விரோதமானது. தேர்தலில் போட்டியிடுபவர்களின் உண்மையான பெயர்கள் மற்றும் சின்னங்கள் அதில் அச்சிடப்பட்டுள்ளன. மக்களிடம் குழப்பத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் இந்த வாக்குச் சீட்டு தயாரிக்கப்பட்டுள்ளது. அதனைக் கையில் வைத்திருப்பவர்கள் உடனடியாக கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுவர்."

இவ்வாறு யாழ். மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் பொ.குகநாதன் உதயன் பத்திரிகையிடம் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் 19 வேட்பாளர்களது பெயர்களையும் உள்ளடக்கிய இந்த வாக்குச் சீட்டில், பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபாலவின் கட்சிச் சின்னம் உட்பட இரு வேட்பாளர்களின் சின்னங்கள் மாற்றி அச்சிடப்பட்டுள்ளன. (அந்தப் போலி வாக்குச்சீட்டின் படம் 5ஆம் பக்கத்தில் உள்ளது. வேட்பாளர்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்தாத வகையில் அது செம்மைப்படுத்தப்பட்டுள்ளது) மஹிந்த ராஜபக்ஷவின் பெயரும் அவரது சின்னமும் சரியாகக் குறிக்கப்பட்டு, அதற்கு நேரே புள்ளடியும் இட்டுக் காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறான செயற்பாடு தேர்தல் குற்றம் என்று தெரிவித்த உதவித் தேர்தல்கள் ஆணையாளர், போலி நாணயத் தாள் வைத்திருப்பது எவ்வளவு பெரிய குற்றமோ அதனைவிடப் பெரிய குற்றம் இது எனவும் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் மேலதிக தேர்தல் ஆணையாளர் எம்.எம்.முகமட் உதயனுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

எதிர்வரும் எட்டாம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலின் போது பயன்படுத்தப்பட உள்ளதாக போலியாக தயாரிக்கப்பட்ட வாக்குச் சீட்டு மாதிரி ஒன்று நாடெங்கிலும் பகிரங்கப்படுத்தப்படுவதாக தேர்தல்கள் திணைக்களத்திற்கு முறைப்பாடு ஒன்று கிடைக்கப் பெற்றுள்ளது.

இந்த போலி வாக்குச் சீட்டில் வேட்பாளர்களுக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள சின்னங்கள் மாற்றிப் பதியப்பட்டுள்ளதாகவும் இதன் மூலம் வாக்காளர்களைத் தடுமாற்றத்துக்கு உள்ளாக்க முயற்சிப்பதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன.

இந்த போலி வாக்குச்சீட்டு மாதிரியைக் கண்டு ஏமாறவேண்டாம் என்றும் 1981 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க ஜனாதிபதி தேர்தல்கள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தேர்தல்கள் ஆணையாளரால் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்கு விதிக்கு அமைய தயாரிக்கப்பட்ட வேட்பாளர்களின் பெயர்களும் தேர்தல் சின்னங்களும் உள்ளடக்கப்பட்ட உண்மையான வாக்குச் சீட்டே தேர்தல் தினம் அன்று வாக்கு சாவடிகளில் வாக்காளர்களுக்கு வழங்கப்படும் எனவும் தேர்தல்கள் திணைக்களம் அறிவுறுத்துகின்றது.

அந்த வாக்குச் சீட்டில் வேட்பாளர்கள் பெயர்களும் அவர்களின் பெயருக்கு நேரேயுள்ள உண்மையான தேர்தல் சின்னங்களும் தெளிவாக காட்டப்பட்டிருக்கும். அவற்றை நன்கு அவதானித்து தாம் விரும்புகின்ற வேட்பாளர்களின் சின்னத்துக்கு எதிரே வாக்களிக்குமாறு அனைத்து வாக்காளர்களும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். என்று தெரிவித்தார்.

(மற்றொரு செய்தி 5ஆம் பக்கத்தில்)

(உ–5)

## டக்ளஸின்

என்றும் – தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்தது.

ஈ.பி.டி.பி. அமைப்பின் யாழ்ப்பாண தலைமை அலுவலகமும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அலுவலகமுமான ஸ்ரீதர் தியேட்டருக்கு நேற்று மாலை 3 மணியளவில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி முகாமையாளர்கள் ஆகியோர் அழைக்கப்பட்டிருந்தனர். இதற்கான அழைப்பை யாழ் மாவட்ட வாழ்வின் எழுச்சித் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் விடுத்திருந்தார் என்று யாழ் மாவட்ட தேர்தல்கள் திணைக்களத்திற்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றிருந்தது.

இதனையடுத்து கொழும்பிலிருந்து வருகைதந்துள்ள, மூத்த உதவித் தேர்தல்கள் ஆணையாளர்கள் சிலர் ஸ்ரீதர் தியேட்டருக்கு மாலை 2.45 மணிக்குச் சென்றனர். இதன்போது அங்கு 400 அரச உத்தியோகத்தர்கள் இருந்துள்ளனர். அவர்களிடம் தேர்தல்கள் திணைக்கள அதிகாரிகள் விசாரித்தனர்.

அத்துடன் கூட்டம் இடம்பெறவிருந்த இடத்தின் மேடையில், 20 கதிரைகள் போடப்பட்டிருந்தன என்று தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் படம் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் படம் என்பனவும் அங்கு காணப்பட்டுள்ளன. தேர்தல் பரப்புரைக்கான ஏற்பாடுகளே அங்கு செய்யப்பட்டிருந்தன என்று தேர்தல் அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர். அதற்குக் கடமை நேரத்தில் சமுர்த்தி அலுவலர்கள் சென்றிருந்தது விதி மீறல் என்றும் தெரிவிக்கப்படுகிறது. இது பற்றி தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய மற்றும் யாழ். மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் சுந்தரம் அருமைநாயகம் ஆகியோருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு முறையற்ற வகையில் செயற்பட்ட அரச அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை விரைவில் எடுக்கப்படும் என்று தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்தது.

(உ–5)

## மரண அறிவித்தல்கள்



### திருமதி பரிமளம் தம்பிராசா

இமையாணன் மேற்கு, கொல்லோலை வீதி, உடுப்பிட்டியைச் சேர்ந்த திருமதி பரிமளம் தம்பிராசா 04.01.2015 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மயிலு - தம்பிராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இராமலிங்கம் - சின்னம்மா தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்ற மயிலு - பொன்னம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்றவர்களான யோக்கியம், கந்தசாமி, செல்லமுத்து, பரமசாமி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற (அமரர்) புஸ்பராணி, இராஜேஸ்வரன், இராஜேஸ்வரி (கனடா), பாலேஸ்வரன், இரத்தினேஸ்வரி, கமலேஸ்வரி, விக்கினேஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், தேவராணி, திருச்செல்வம் (கனடா), நாகேஸ்வரி, இராசையா, யூகநாதன், வசந்தி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 08.01.2015 வியாழக்கிழமை உடுப்பிட்டியில் நடைபெற்று, வல்லை இந்துமயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 512 4974 (சி18904)(12.7)

### கந்தன் வேலுப்பிள்ளை

வரணி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தன் வேலுப்பிள்ளை நேற்று (05.01.2015 திங்கட்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தன்-தெய்வானைப் பிள்ளை தம்பதியரின் ஏக புத்திரனும், காலஞ்சென்ற சின்னப்பிள்ளையின் அன்புக் கணவரும், இராசதுரை, இராசேந்திரம், கந்தசாமி, குணராசா, சதீஸ்வரன், சந்திரலேகா, சிவயோகராணி ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவகாமசுந்தரி (காமினி), மனோராணி, தங்கரத்தினம், இன்பரதி, மகாலிங்கம் ஆகியோரின் அன்பு மாமனும், நிருயன், மேருதிகா, தர்மதர்சனன், சமிதா, தனுஷன், சாந்தரூபன், அகிலரூபன், சர்மினி, சர்மிளா, மதன்ராஜ், தபோதனன், கோகுலன், வினோதன், சசிகா, ரகுவரன், ராஜ்குமார், சாரங்கன், டானி, கவிதாயினி ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.01.2015) செவ்வாய்க்கிழமை பி.ப 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முள்ளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

(சிமிழ் கண்ணகைபுரம்) சிமிழ் அம்மன் கோயிலடி, வரணி வடக்கு, வரணி.

தகவல்:
குடும்பத்தினர்.

### செல்லத்துரை கந்தசாமி



மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை கந்தசாமி நேற்று (05.01. 2015) திங்கட்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சுவாமிநாதர்- பொன்னம்மா தம்பதியரின் மருமகனும், கௌரிமலர் (சுவிஸ்) இராஜமனோகரன் (யாழ். மாநகரசபை- நல்லூர்), மதனமோகன் (ஜேர்மனி), மனோகரி, ஜீத்தா (சுவிஸ்), புஸ்பா ஆகியோரின் அன்புத் தந்தையும், நித்தியானந்தன் (சுவிஸ்), கமலாசனி (ஆசிரியை- இராமநாதன் கல்லூரி), பத்மறஞ்சனி (ஜேர்மனி), ஸ்ரீரஞ்சன் (Colombo Blue lines Pvt Limited), லோகேந்திரன் (சுவிஸ்), சதீஸ்குமார் (நவ குமரன்ஸ் மருந்துக் கடை மானிப்பாய்) ஆகியோரின் பாசமிகு மாமனும், காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் முத்துலிங்கம் ஆகியோரின் மைத்துனரும், செந்தூரன் (சுவிஸ்), சிந்துஜன் (சுவிஸ்), பிரணவி, சுகசிந்தவி, ஜனகன் (ஜேர்மனி), மதுவந்தி (ஜேர்மனி), பதஞ்சலி மீனாம்பாள், பவனந்தி மீனாம்பாள், பிரமாத்மன், பிரித்திகா (சுவிஸ்), சாத்விகன் (சுவிஸ்), இலம்போதரன் (சுவிஸ்), திலக்ஷனா, மதுசன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.01.2015) செவ்வாய்க்கிழமை பி.ப 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

தகவல்:
இராஜமனோகரன் (மகன்)
077 596 3382

# செய்திகள்

# வாக்களிக்க விடுமுறை மறுத்தால் நடவடிக்கை

## தேர்தல் திணைக்களம் அறிவிப்பு

கொழும்பு. ஜன. 6
வெளி மாவட்டங்களில் தொழில் புரிபவர்கள் வாக்களிக்க விடுமுறை வழங்க மறுக்கும் தொழில் தருநர்கள் மீது சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வெளிமாவட்டங்களில் தொழில் புரியும் தொழிலாளர்களுக்கு எதிர்வரும் 8 ஆம் திகதி நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில் விடுமுறை வழங்கத் தொழில் தருநர்கள் பலர் மறுத்து வருவதாகத் தெரிய வருகின்றது.

இதன் காரணமாகக் கொழும்பு, கண்டி, தம்புள்ளை மற்றும் வடக்கு – கிழக்கு பகுதிகளில் தொழில் புரியும் தொழிலாளர்களில் சுமார் இரண்டு இலட்சத்துக்கு மேற்பட்ட இளைஞர், யுவதிகள் வாக்களிப்பதற்கான சந்தர்ப்பத்தை இழக்க நேரிட்டுள்ளது.

ஜனவரி 8ஆம் திகதி வியாழக்கிழமை என்பதால் 9ஆம், 10ஆம், 12ஆம் திகதி மற்றும் வார விடுமுறைகளுடன் 15ஆம் திகதி தைப்பொங்கல் வருவதன் காரணமாக விடுமுறையில் வீட்டுக்குச் செல்லும் பலர் வேலைக் குத் திரும்பி வரமாட்டார்கள். இதனால் தமது வியாபாரம் பெரும் பாதிப்புக்குள்ளாகலாம் என்பதால் விடுமுறை வழங்க மறுப்பதாகத் தெரியவருகின்றது.

குறிப்பிட்ட விடயம் சம்பந்தமாக தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய, 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஜனாதிபதி தேர்தல்கள் சட்டத்தின் 110 ஆம் பிரிவின் பிரகாரம் தொழில் தருநர்கள் தங்களது தொழிலாளர்களுக்கு விடுமுறை வழங்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். விடுமுறை வழங்க மறுப்பவர்கள் சட்ட நடவடிக்கைகளுக்கு முகம் கொடுக்க வேண்டி வரும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

(த–14)

## இ.போ.ச.வுக்கு ரூ. 12 கோடி நட்டம்

கொழும்பு, ஜன. 6
ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு, ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு தமது தேர்தல் நடவடிக்கைகளுக்காக இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்களைப் பயன்படுத்தியமை காரணமாக இலங்கை போக்குவரத்துச் சபைக்கு 12 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக டான்பரன்ஸி இன்டர்நஷெனல் அமைப்பு தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது இந்த அமைப்பு இதனை தெரிவித்துள்ளது. (த)

## உதவி வழங்கும் வைபவங்கள் 8ஆம் திகதிக்கு பின்னர்

### தேர்தல்கள் ஆணையாளர் பணிப்புரை

கொழும்பு, ஜன. 6
புடவைகளை வழங்குதல், உலர் உணவுகளை வழங்குதல், பொருள்களை வழங்குதல் போன்ற அரச உதவி வழங்கும் வைபவங்களை ஜனவரி 8ஆம் திகதிக்குப் பின்னர் நடைமுறைப்படுத்துமாறு தேர்தல்கள் ஆணையாளர் அறிக்கை ஒன்றின் மூலம் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை முன்னிறுத்தி, கோயில்கள், விஹாரைகள் மற்றும் பொது இடங்களில் இவ்வாறு புடைவைகளை வழங்குதல், உலர் உணவுகளை வழங்குதல், பொருள்களை வழங்குதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகத் தமக்கு முறைப்பாடு கிடைத்துள்ளதாகவும், இத்தகைய செயல்களை தேர்தல் முடியும் வரை தவிர்த்துக்கொள்ளுமாறும் தேர்தல்கள் ஆணையாளர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை கேட்டுள்ளார். (த)

## சிறுபான்மைச் சமூகங்களை கொச்சைப்படுத்துவோரை தேர்தலில் தோற்கடிப்போம்

### மு.கா செயலாளர் நாயகம் தெரிவிப்பு

அம்பாறை, ஜன.6
நாட்டிலுள்ள சிறுபான்மைச் சமூகங்களைக் கொச்சைப்படுத்தும் இன்றைய அரசை ஜனாதிபதித் தேர்தலில் தோற்கடிக்கவேண்டும். இதன்மூலமே அரசு நம் சமூகங்களுக்கெதிராகக் கட்டவிழ்த்துவரும் அநியாயங்களுக்கு முடிவு காணலாம்

இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ரி.ஹஸனலி கூறினார்.

பொது எதிரணியின் ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை ஆதரித்து முஸ்லிம் காங்கிரஸின் நிந்தவூர் மத்திய குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட மாபெரும் தேர்தல்பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஹஸனலி தொடர்ந்து உரையாற்றுகையில்,

இன்றைய அரசின் அராஜக, பௌத்த பேரினவாத அட்டகாசங்கள் கொண்ட அநியாய நிருவாகத்திலிருந்து மக்களையும் எமது உரிமைகள் நிலங்களையும் மீட்டெடுக்க வேண்டும்.

இதற்கான முக்கிய சந்தர்ப்பமாகவே இன்றைய ஜனாதிபதித் தேர்தல் அமைந்துள்ளது.

குறுகிய இனவாத மனோபாவத்துடன் செயற்பட்டு சிறுபான்மை சமூகங்களைக் கிள்ளுக்கீரையாகப் பயன்படுத்த முயலும் இந்த அரசை இனியும் எந்தக் கட்டத்திலும் நாம் நம்ப முடியாது.

முதல்முறையாக ஒரு தேசிய மட்டத் தேர்தலில் எந்த நிபந்தனையையும் புதிதாக வைக்காமல் முஸ்லிம் காங்கிரஸ் இன்று களம் இறங்கியுள்ளது.

இனவாதத்தில் தோய்ந்து கிடக்கும் அரசுக்கு தக்கபாடத்தைப் புகட்டுவதற்கு இந்தச் சந்தர்ப்பத்தில் உணர்வுபூர்வமாக நாம் எடுத்துள்ள முடிவில் அனைவரும் அணிதிரளவேண்டும்.

இன்று பேசு பொருளாக மாறியுள்ள கரையோர மாவட்டம் குறித்து தலைவர் அஷ்ரப் மறைந்த 14 வருடங்களிலும் முஸ்லிம் காங்கிரஸ் பேசிக் கொண்டுதானிருக்கின்றது. அதற்கு காலம் கனிந்துவர வேண்டுமென்ற எதிர்பார்ப்பையும் கொண்டிருந்தோம்.

போர்முடிவடைந்து ஐந்து வருடங்கள் கடந்த நிலையில் அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம்களது மட்டும் 32ஆயிரம் ஏக்கர் காணிகள் இந்த அரசால் கபளீகரம் செய்யப்பட்டு அநியாயமாகப் பறிக்கப்பட்டுள்ளது.

கிழக்கில் முஸ்லிம்கள் 60ஆயிரம் ஏக்கர் காணிகளை அரசின் கெடுபிடிகளாலும் வஞ்சக கபடத்தனங்களாலும் இழந்துள்ளனர்.

குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் இனப் பரம்பலை ஐதாக்கி சிங்கள மக்களின் பெரும்பான்மையை உருவாக்கும் நோக்குடன் திட்டமிட்ட முறையில் இத்தகைய அநீதிகள் முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் சமூகத்தைக் காட்டிக்கொடுக்கும் இங்குள்ள சில அரசியல்வாதிகள் இதற்கெல்லாம் துணை போய்க் கொண்டிருக்கின்றனர் – என்றார். (த–30)

## கொடுங்கோல் ஆட்சியை ஒழிக்க மைத்திரியே வழி

### தமிழர்கள் அவரையே ஆதரிக்கவேண்டும் என உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் கோரிக்கை

கொழும்பு, ஜன. 6
கொடுங்கோல் ஆட்சியை மாற்றுவதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபாலசிறிசேனவை ஆதரிக்கும் தீர்மானத்தை எடுத்துள்ளது. இந்தத் தீர்மானத்தைப் பாராட்டுவதாகத் தெரிவித்துள்ள உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம், தமிழ் மக்கள் இந்தத் தீர்மானத்துக்கு அமையப் பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபாலவை ஆதரிக்கவேண்டும் என்று தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாபதித் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பின்னர், உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்களாலும், இலங்கை வாழ் மக்களாலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முடிவு ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்டிருந் தது. பல நாள்கள் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் உயர் மட்டக்குழு கூடி ஆராய்ந்து பல தரப்பட்ட மக்களிடமிருந்து பெற்ற கருத்துக்களையும் உள்வாங்கி, முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

நீண்டகால அரசியல் அனுபவமும் இலங்கையின் பெரும்பான்மை இனக்கட்சிகளின் அரசியல் அணுகுமுறை தொடர்பான பார்வையுமே, தமிழ்த் தலைவர்களின் சிந்தனைகளின் அடிப்படையில், இந்த தீர்க்கமான முடிவை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எடுப்பதற்கு காரணமாக அமைந்திருக்கும் என்று நாம் நம்புகின்றோம்.

தமது ஆதரவை எதற்காகப் பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு வழங்கவேண்டும் என்பதற்கு ஆதாரமாக பல காரணங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள், ஊடகங்களுக்கு அறிவித்துள்ளனர்.

அவசியமான ஒரு தருணத்தில் மிகவும் முக்கியமான முடிவை தீர்க்கமாக ஆராய்ந்து எடுத்திருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் அதன் தலைவர்களையும் நாம் பாராட்டுகின்றோம். எனவே உலகெங்கும் பரந்து வாழும் அனைத்து தமிழ் மக்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எதிர்கால நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்க வேண்டும் – என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த–5)

## யார் வெற்றி பெற்றாலும் அரசமைப்பில் திருத்தம்

கொழும்பு, ஜன. 6
எதிர்வரும் 8ஆம் திகதி இடம் பெறும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மஹிந்தவோ அல்லது பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவோ யார் வெற்றி பெற்றாலும் அரசமைப்புத் திருத்தமொன்றை மேற்கொள்வதே அரசின் முக்கியமான கருமமாக இருக்கும் என அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி மஹிந்த மீண்டும் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் நிறைவேற்று ஜனாதிபதிப் பதவிக்கு இருக்கும் ஒரு சில அதிகாரங்களை மீளாய்வுக்கு உட்படுத்தல், விருப்பு வாக்கு முறையை இல்லாமல் செய்து புதிய தேர்தல் முறையொன்றை அறிமுகப்படுத்தல் ஆகியவைகள் உள்ளடங்கும் அரசமைப்புத் திருத்தமொன்று மேற்கொள்ளப்படுமென அவர் ஏற்கனவே தெரிவித்துள்ளார்.

எதிரணியின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்றால் நிறைவேற்று ஜனாதிபதி முறையை மீளாய்வு செய்து நாடாளுமன்றத்துக்கு அதிகாரங்களை வழங்குதல், 18ஆவது அரசமைப்புத் திருத்தத்தை நீக்கி மீண்டும் 17 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை பலப்படுத்தல் உள்ளிட்ட முக்கியமான அரசமைப்புத் திருத்தங்கள் பலவும் மேற்கொள்ளப்படுமென அவர் வாக்குறுதியளித்துள்ளார்.

இதற்கமைய இந்த இருவரில் யார் வெற்றி பெற்றாலும் எதிர்வரும் சில மாத காலத்துக்குள் அரமைப்புத் திருத்தமொன்று இடம்பெறும் எனவும் அந்த அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. (த–22)

## வடக்கு விவசாயிகளுக்கு விதை உருளைக் கிழங்கு

யாழ்ப்பாணம்,ஜன.6
முன்மாதிரிச் செய்கைக்கென மத்திய விவசாய திணைக்களம் மாகாண விவசாய திணைக்களத்துக்கு ரெட்லசோடா அர்னோலா இன விதை உருளைக் கிழங்கு 55.4 மெற்றிக்தொன் வழங்கியுள்ளது.

உருளைக்கிழங்கு முன்மாதிரிச் செய்கைக்கென புதிதாக அடையாளம் காணப்பட்ட பிரதேசங்களான கிளிநொச்சியில் 10 ஏக்கர் விஸ்தீரணத்தில் தெரிவு செய்யப்பட்ட 112 பயனாளிகளுக்கும், யாழ்ப்பாணத்தில் 15.4 ஏக்கர் விஸ்தீரணத்தில் 65 பயனாளிகளுக்கும், வவுனியாவில் 10 ஏக்கர் விஸ்தீரணத்தில் 69 பயனாளிகளுக்கும், முல்லைத்தீவில் 10 ஏக்கர் விஸ்தீரணத்தில் 49 பயனாளிகளுக்கும், மன்னாரில் 10 ஏக்கர் விஸ்தீரணத்தில் 40 பயனாளிகளுக்கும் இவை வழங்கப்பட்டுள்ளன. (த–7)

# எமது வேட்பாளர் மைத்திரிபாலவே; அன்னமே சின்னம்

## ஆர்.ஏ.சிறிசேனவிடம் ஏமாற வேண்டாம் என்கிறார் மனோ கணேசன்


கொழும்பு, ஜன.6
எங்கள் பொது எதிரணியின் சின்னம் அன்னப்பறவை; எங்கள் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன போட்டியிடும் சின்னம். இதை நாடு முழுக்க வாழும் தமிழ் மக்கள் மனதில் கொண்டு வாக்களிக்க வேண்டும் என்று தெரிவித்துள்ள ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன், ஆர். ஏ. சிறிசேன என்ற ஒரு வேட்பாளரைத் தேடிப்பிடித்து, அவரை போட்டியிட வைத்து, அவருக்கு மைத்திரிபாலவை போல் ஆடை உடுத்தி, மூக்கு கண்ணாடி அணிவித்து, அலங்கரித்து,படம்பிடித்து, அந்தப் படத்தை தமிழ் ஊடகங்களில் விளம்பரமாக இட்டு அப்பாவி தமிழ் மக்களை குறிவைத்து ஏமாற்றும் ஒரு தில்லாலங்கடி வேலையை மஹிந்த அரசின் முகவர்கள் சிலர் செய்கிறார்கள் – என்றும் அவர் கூறியுள்ளார்.

ஜனநாயக மக்கள் முன்னணியின் ஊடகச் செயலகம் மூலம் விடுத்துள்ள விசேட செய்திக் குறிப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"இந்த ஆர். ஏ. சிறிசேன என்ற வேட்பாளரின் சின்னம், கொடி சின்னமாகும். எங்கள் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் சின்னம் அன்னப் பறவையாகும். ஊடகங்களில் விளம்பரம் செய்து மக்களை குழப்ப முயலும் அரசாங்கம் இன்னொன்றையும் செய்கிறது. மாதிரி வாக்குசீட்டு ஒன்றை அச்சடித்து தமிழ் மக்கள் மத்தியில் விநியோகம் செய்துள்ளது. இந்த மாதிரி வாக்குச் சீட்டில் எங்கள் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் சின்னமாக கொடி சின்னம் காட்டப்பட்டுள்ளது. இது திட்டமிட்டு மக்களை குழப்பும் ஒரு வெட்கங்கெட்ட மோசடி நடவடிக்கையாகும்."– என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

"உண்மையான வாக்குச் சீட்டில், எமது பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் பெயர் தமிழ், சிங்கள மொழிகளில் குறிப்பிடப்பட்டிருக்கும். அவரது பெயருக்கு இடதுபுறம் அவரது சின்னமான, அன்னப்பறவை அச்சிடப்பட்டிருக்கும். ஒட்டு மொத்த பத்தொன்பது வேட்பாளர்களின் பெயர் வரிசையில், எங்கள் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் பெயர் பத்தாவதாக இடம்பெற்றுள்ளது."– என்றும் அந்த அறிக்கையில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

"இவை பற்றிய இந்த உண்மைத் தகவல்களை விடயம் தெரிந்த ஒவ்வொரு தமிழரும் தங்கள் உறவினர்களுக்கு,நண்பர்களுக்கு, ஊரவர்களுக்கு நேரடியாகவோ, தொலைபேசி மூலமாகவோ எடுத்துக்கூறி தெளிவுபடுத்த வேண்டும் என்று கோருகின்றேன்"– என்றும் அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந)



ஜனாதிபதி மஹிந்தவைத் தோற்கடிக்க வேண்டும். ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவைத் தேர்தலில் வெற்றியடையச் செய்ய வேண்டும் என்று கோரி யாழ்.பல்கலைக் கழகத்துக்குள்ளும், வெளியேயும் துண்டுப் பிரசுரங்கள் நேற்று ஒட்டப்பட்டிருந்தன. வர்ண அறிவித்தலான அவற்றில் தற்போதைய ஜனாதிபதி மஹிந்தவின் படம் அச்சிடப்பட்டு "எமது தேசத்தைச் சுடுகாடாக்கியவர்களுக்கு பதிலடி கொடுப்போம்" என்றும் கீழ்ப்பகுதியில் அன்னம் சின்னம் அச்சிடப்பட்டு அதற்கு நேரே புள்ளடியிட்டும் காட்டப்பட்டுள்ளது. (ந–4,21,109)

## மைத்திரியே வெல்லுவார்

### – சோதிடர்கள் தடாலடி

கொழும்பு, ஜன. 6
ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவே வெற்றி பெறுவார் என்று சுயாதீன சோதிடர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், சங்கத்தின் சோதிடர்களான நாத்தாண்டியே பீ.டி. பெரேரா, காமினி புளத்சிங்கள, கே.ஏ.யூ. சரத்சந்திர ஆகியோரே இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

"2014ஆம் ஆண்டின் இறுதியில் ஜனாதிபதித் தேர்தல் ஒன்று அறிவிக்கப்படும். பெண் ஒரு வர் இதற்கு தலைமையேற்பார். எதிர்பாராதவர் ஒருவர் தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிடுவார்"– என்று தாம் கூறிய சோதிட எதிர்வுகூறல் உண்மையாகியுள்ளது என்று நாத்தாண்டியே பீ.டி. பெரேரா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன கட்டாயம் வெற்றி பெறுவார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ந–5)

## மறைந்து போன மஹிந்த



யாழ்ப்பாணம், ஜன.6
யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்பாக வைக்கப்பட்டிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் 'கட்–அவுட்' திடீரென நேற்று அங்கிருந்து காணாமற் போயுள்ளது. தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பின்னர், அந்தக் 'கட்–அவுட்' அகற்றப்படாது மறைத்து வைக்கப்பட்டிருந்தது. ஆயினும் நேற்றுமுன்தினம் ஜனாதிபதியின் புதல்வரும், நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ கலந்துகொண்ட தேர்தல் பரப்புரை நிகழ்வுக்காக அந்தக் 'கட்–அவுட்' மீண்டும் திறக்கப்பட்டது. ஆயினும் நேற்றே அந்தக் 'கட்–அவுட்' அங்கிருந்து கிழித்து அகற்றப்பட்டுள்ளது. (ந–21)

# எனது வெற்றியால் நாடு பிளவுபடாது

## மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 6
நான் வெற்றியீட்டினால், நாடு பிளவுபடும் என்று கூறப்படுவதில் எதுவித உண்மையும் இல்லை என்று தெரிவித்துள்ள பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால, வடக்கிலிருந்து இராணுவத்தை வெளியேற்றும் நோக்கம் தனக்கு இல்லை என்றும் கூறியுள்ளார்.

ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன கொழும்பில் நேற்றுக் காலை விசேட ஊடகவியலாளர் சந்திப்பை நடத்தினார். அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"நான் வெற்றியீட்டினால் நாடு பிளவுபடும் என்று சுமத்தப்படுகின்ற குற்றச்சாட்டுகளில் எவ்வித உண்மையும் இல்லை. நாட்டின் ஒருமைப்பாடு மற்றும் பாதுகாப்பு தொடர்பில் தனிப்பட்ட ரீதியிலும் பொது எதிரணி என்ற வகையிலும் பொறுப்புடன் செயற்படுகின்றேன். வடக்கிலிருந்து இராணுவத்தை வெளியேற்றும் நோக்கம் எனக்கில்லை. பிரிவினைவாத கோரிக்கை அல்லது தமிழீழ விடுதலைப் புலிகளின் மீள் எழுச்சிக்கு இடமளிக்கப் போவதில்லை. எதிர்வரும் தேர்தலில் எனது வெற்றி உறுதியானது. பௌத்த சமயத்தின் மேம்பாடு தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும். ஏனைய சமயங்களுக்கும் உரிய மதிப்பளிக்கப்படும்"– என்று அவர் தெரிவித்துள்ளார். (ந–5)

# தேர்தல் முடிந்த பின்னர் எதிர்க்கட்சி வரிசைதான்

## விரும்பியோருக்கு வாக்களியுங்கள் மேர்வின் சில்வா தெரிவிப்பு



கொழும்பு, ஜன. 6
ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் எதிர்க்கட்சியில் அமர்ந்திருப்பேன் என்று தெரிவித்துள்ள அமைச்சர் மேர்வின் சில்வா, ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் தமக்கு விரும்பிய யாருக்காவது வாக்களியுங்கள் என்று கோரியுள்ளார்.

அவர் கிரிபத்கொடவில் உள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அலுவலகத்தில் ஊடக சந்திப்பு நடத்தினார். அதன் போதே இவ்வாறு தெரிவித்தார்.

"ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஓர் உயர்வான மனிதர். அவரது குடும்பத்தினர் எல்லாவற்றையும் அழித்து விட்டனர். வாக்களிப்பு நிலையத்துக்குச் சென்று விரும்பிய யாருக்கேனும் வாக்களியுங்கள். 8 ஆம் திகதிக்குப் பின்னர், எதிரணியில் நான் அமர்ந்திருப்பேன்"– என்று அவர் அங்கு மேலும் கூறினார்.

மஹிந்த ராஜபக்ஷவின் அரசில் அடிதடி அமைச்சர் என்று பெயரெடுத்தவர் மேர்வின் சில்வா. அவர் அரசை விட்டு விலகி, எதிரணியின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்துகொள்ள விருப்பம் தெரிவித்திருந்தார். எனினும், எதிரணியில் முக்கிய பங்கு வகிக்கும், ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஜாதிக ஹெல உறுமய என்பன, அவரை எதிரணிக்குள் சேர்த்துக் கொள்ள மறுத்து விட்டன என்று கூறப்படுகின்றது. (ந–5)

# செய்திகள்

## தமிழ் மக்கள் இணைந்து அன்னத்துக்கு வாக்கிடுக

### தமிழ் – முஸ்லிம் வாக்குகளே தீர்மானமிக்கவை என்கிறார் சுமந்திரன் எம்.பி.



கொழும்பு, ஜன. 6

தமிழ் – முஸ்லிம் வாக்குகளே புதிய ஜனாதிபதி யார் என்பதைத் தீர்மானிக்கவுள்ளன. அதனால் தான், தமிழ் – முஸ்லிம் மக்களை குழப்புவதற்கு இந்த அரசு நூதன திட்டங்களை கையாளத் தொடங்கியுள்ளது. பொய்யான ஆவணங்களைத் தயாரித்து மக்களைக் குழப்பும் கீழ்த்தரமான வேலைகளில் இந்த அரசு ஈடுபட்டு வருகின்றது – இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.

பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை ஆதரித்து, நல்லாட்சிக்கான தேசிய முன்னணி ஏற்பாடு செய்த பரப்புரைக் கூட்டம் மூதூரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"தமிழ் – முஸ்லிம் மக்களின் வாக்குகள்தான், ஜனாதிபதி யார் என்பதை தீர்மானிக்கப் போகின்றன. இந்தத் தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த வெற்றி பெற்றுவிட்டால், இதன் பின்னர் நீண்ட காலத்திற்கு இந்த நாட்டில் தேர்தலே இடம்பெறாது. தேர்தலொன்றை நடத்துமாறு பெரும் போராட்டமே செய்ய வேண்டிவரும்.

எனவே, நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கும் இந்தத் தேர்தலில், தமிழ் பேசும் மக்கள் ஒன்றிணைந்து எதிரணிகளின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களிக்க வேண்டும்" – என்று அவர் அங்கு மேலும்தெரிவித்தார். (ற–5,40)

## தப்பி ஓடும் எண்ணம் ஏதுமில்லை எனக்கு

### ஜனாதிபதி மஹிந்த கூறுகின்றார்



கொழும்பு, ஜன. 6

ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் இலங்கையை விட்டுத் தப்பி ஓடமாட்டேன். தொடர்ந்தும் நாட்டிலேயே இருப்பேன் என்று கூறியுள்ளார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

பொலநறுவையில், நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடந்த தேர்தல் பரப்புரைக் கூட்டத்திலேயே இவ்வாறு தெரிவித்தார். தேர்தலில் தோல்வியுற்றால், நாட்டை விட்டுத் தப்பிச் செல்ல விடமாட்டோம் என்றும், சர்வதேச விமான நிலையத்தை மூடுவோம் என்றும் எதிரணியினர் கூறிவருவதற்கு பதிலளிக்கும் முகமாகவே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"விடுதலைப் புலிகளிடம் இருந்து ஓடாத ஒருவனான நான், இலங்கையை விட்டு ஓடமாட்டேன். தேர்தலில் தமக்கு வெற்றி கிடைக்கும் என்று எதிர்க்கட்சிகள் கனவு காண்கின்றன. ஆனால் நானே வெற்றி பெறுவேன். எதிரணியின் தேர்தல் அறிக்கை குப்பைக் கூடைக்குள் வீசப்படும்.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஓய்வு பெற்ற போது, என்னைச் சந்தித்து, பிரியாவிடை வாழ்த்துக் கூறிவிட்டு சென்றார். அப்போது, அவரிடம் அதிபர் தேர்தலில் போட்டியிடப் போகிறீர்களா என்று கேட்டேன். அதற்கு அவர் தான் இன்னமும் முடிவு செய்யவில்லை என்று கூறி மரியாதையான முறையில் சென்றார்.

ஆனால், மைத்திரிபால சிறிசேன எதுவும் கூறாமலேயே அரசில் இருந்து விலகிச் சென்றார். அவர் விலகிச் செல்வதற்கு முதல் நாள் இரவு கூட என்னுடன் இராப் போசனம் உட்கொண்டார்"– என்றும் அவர் அங்கு தெரிவித்துள்ளார்.

(ற–5)



## மைத்திரியின் பரப்புரை மேடை மீது சூடு:

### மூவர் காயம்

கொழும்பு, ஜன. 6

இரத்தினபுரியில் எதிரணியின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன பரப்புரை மேற்கொள்ளவிருந்த மேடை மீது இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். இந்தச் சம்பவத்தில் மேடை அலங்காரப் பணியில் ஈடுபட்டிருந்த மூன்று பேர் படுகாயமடைந்துள்ளனர். நேற்று அதிகாலை 5 மணியளவில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, மைத்திரி பங்கேற்கும் பரப்புரை மேடைகளைக் குறிவைத்துத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில், பாதுகாப்புக் கருதி பல இடங்களில் நேரடியாகப் பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொள்வதை அவர் தவிர்த்து வருகின்றார்.

கண்டியில் நடந்த பல பரப்புரைக் கூட்டங்களில் மைத்திரிபால சிறிசேன பங்கேற்கவில்லை என்றும், தொலைபேசி மூலம் அவரது உரை ஒலிபரப்புச் செய்யப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தேர்தலுக்கு முன்னதாக தனது உயிருக்கு ஆபத்து விளைவிக்கப்படலாம். அவ்வாறு நிலை ஏற்பட்டால், மஹிந்த ராஜபக்ஷ மாறாத களங்கத்துடனேயே ஆட்சி செய்ய நேரிடும் என்றும் மைத்திரிபால சிறிசேன முன்னர் தெரிவித்திருந்தார். (ற–5)

## கொடுமை செய்தவரை நாட்டை விட்டுத் துரத்துக

### அன்னச் சின்னத்துக்கு வாக்களிக்குமாறு அரியநேத்திரன் எம்.பி. கோரிக்கை

மட்டக்களப்பு, ஜன.6

இந்த நாட்டில் கொடுமை செய்த, அட்டூழியங்கள் செய்த இனவெறியரை இந்தநாட்டில் இருந்து துரத்துவதற்காகவேண்டிஅனைத்து தமிழ்மக்களும் அன்னச் சின்னத்துக்கு வாக்களிக்கவேண்டும் என்று கோரியுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிருப்பு தொகுதி மக்களுக்கு தேர்தல் தொடர்பான விழிப்புணர்வு பரப்புரை களுவாஞ்சிக்குடியில் அமைந்துள்ள இராசமாணிக்கம் மண்டபத்தில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மைத்திரிபால சிறிசேனவை ஆதரிக்க வேண்டும் என்ற முடிவை எடுக்க முன்னரே வடகிழக்கு மக்கள் மைத்திரி பாலவை ஆதரிப்பதாகத் தீர்மானித்துவிட்டார்கள். அதன் பிற்பாடுதான் நாங்கள் சொல்லவேண்டிய கருத்தை அறிவித்து இருக்கின்றோம்.

இந்த அரசு அரசியல் கைதிகளை விடுதலைசெய்ய வில்லை, முன்னாள் போராளிகள் வீட்டில் நிம்மதியாக வாழமுடியாத நிலை, வடகிழக்கில் எத்தனையோ கணவன்மார் கொலைசெய்யப்பட்டமையால் பல விதவைகள் இருக்கின்றனர், வடகிழக்கில் அத்துமீறிய குடியேற்றங்கள் இடம்பெறுகின்றன. இவற்றையெல்லாம் செய்துவிட்டு தமிழர்களிடம் வாக்குக் கேட்டு வருகிறார் மஹிந்த ராஜபக்ஷ. இந்த அட்டூழியங்களை செய்த மஹிந்தவுக்கு எதிராக வாக்களிக்க வேண்டும் – என்று அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளார்.

(ற)

## அமெரிக்காவுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

### பொதுபல சேனா அமைப்பு கூறுகின்றது

கொழும்பு, ஜன.6

அமெரிக்கச் சஞ்சிகை ஒன்றில் வெளியான கட்டுரை ஒன்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அமெரிக்கத் தூதரகம் முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொள்ள உள்ளதாக பொது பல சேனா அமைப்பு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பாக பொது பல சேனாவை அவமானத்துக்கு உட்படுத்துவதற்காகவே குறித்த கட்டுரை பிரசுரிக்கப்பட்டுள்ளது என்று அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

தாம் அமெரிக்கத் தூதரகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொள்ளவும், அமெரிக்க அரசுடன் நேரடியாக இது குறித்துப் பேச்சு நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் பொது பல சேனா அமைப்பு தெரிவித்துள்ளது.

குறித்த கட்டுரை, எதிரணியின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற வேண்டும் என்பதற்காக அமெரிக்கா பாடுபடுவதையே காண்பிக்கின்றது என்றும் பொது பல சேனா அமைப்பு தெரிவித்துள்ளது. (ற)

## வாக்களித்தல் மக்களின் உரிமையாகும் எந்த அச்சமுமின்றி வாக்களிக்கலாம்

### கூறுகிறார் தேர்தல் ஆணையாளர்; குடாநாட்டின் அமைதி மகிழ்ச்சிக்குரியது எனவும் கருத்து

கொழும்பு, ஜன.6

வாக்களித்தல் என்பது மக்களின் உரிமையாகும். உங்களது வாக்கை நீங்கள் விரும்பியவாறு இரகசியமாகவும், சுதந்திரமாகவும் பயன்படுத்துவதற்கு எவராலும் இடையூறு விளைவிக்க முடியாது. நீங்கள் எந்த வேட்பாளருக்கு வாக்களித்தீர்கள் என்பதையும் எவராலும் அறிந்து கொள்ள முடியாது.

எனவே, மக்கள் எத்தகைய அச்சமோ அல்லது ஐயமோ இன்றி அதிகாலையிலேயே வாக்களிப்புநிலையங்களுக்குச் சென்று வாக்களிக்க வேண்டும் – இவ்வாறு தெரிவித்துள்ளார் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய.

வடமாகாணத்தின் மன்னார், வவுனியா,முல்லைத்தீவு,கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களின் அரச அதிபர்கள், வடமாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர், கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களின்பிரதிப்பொலிஸ்மா அதிபர்கள், உதவித் தேர்தல் ஆணையாளர்கள் ஆகியோருடன் வவுனியா மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான கலந்துரையாடலின்போதே தேர்தல்கள் ஆணையாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்;

மன்னார் மாவட்டத்தின் குஞ்சுக்குளம் கிராமத்திலிருந்து வாக்குப்பெட்டியை மீளவும் மாவட்டச் செயலகத்துக்கு எடுத்து வருவதற்கு உலங்குவானூர்தியைப் பெற ஆவன செய்யப்படும். யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள தீவுப் பகுதியிலிருந்து வாக்குப் பெட்டிகளை எடுத்து வருவதற்கு கடல் மார்க்கத்தில் சீரற்ற காலநிலை காணப்படுமாயின் கடற்படையினரின் உதவி பெறப்படும்.

இதேவேளை – ஏனைய மாகாணங்களில் ஏற்படுகின்ற அசம்பாவித சம்பவங்களைப் போன்று வடமாகாணத்தில் எதுவுமே இடம்பெறாமை மகிழ்ச்சியைத் தருகின்றது – என்றார்.

(க)

## மனித உரிமை ஆர்வலர்கள் வீடுகளுக்கு முன் நாய் தலை

கொழும்பு, ஜன.6

நீர்கொழும்பில் அமைந்துள்ள மனித உரிமை செயற்பாட்டாளர்கள் இருவரது வீடுகளுக்கு முன்பாக வெட்டப்பட்ட நாய்களின் தலைகள் வைக்கப்பட்டுள்ளன என்று நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பிரபல மனித உரிமை செயற்பாட்டாளரும்காணாமற்போனோர் குடும்ப ஒன்றிய அமைப்பு , 'ரைட்டு லைப்' மனித உரிமைகள் அமைப்பு ஆகியவற்றின் தலைவர் பிரிட்டோ பெர்னாந்துவின் நீர்கொழும்பு பெரிய முல்லையில் அமைந்துள்ள வீட்டின் வாசலிலும், 'ரைட்டு லைப் மனித உரிமைகள் அமைப்பைச் சேர்ந்த பிரசங்க பெர்னாந்துவின் பிட்டிபனையில் அமைந் துள்ள வீட்டின் முன்பாகவும் வெட்டப்பட்ட நாய்களின் தலைகள் வைக் கப்பட்டுள்ளன. நேற்றுமுன் தினம் இரவு 7 மணிக்கும் 10 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் நாய்களின் தலைகள் வைக் கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

இரவு 10.30 மணியளவில் இவர்கள் இருவரும் வீட்டிற்கு வந்த போதே நாய்களின் தலைகள் வைக்கப்பட்டிருப்பதை கண்டுள்ளனர். அரசுடன் தொடர்புடைய குழுவினரின் அச்சுறுத்தும் செயலே இதுவெனவும் பிரிட்டோ பெர்னாந்து ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பாக நீர்கொழும்பு பொலிஸார் மேலதிக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (ற)

## வாக்காளர் அட்டை; பிழைகளை திருத்த முடியும்

வாக்காளர் அட்டைகளில் எழுத்துப் பிழை போன்றவை இருப்பின் அதனை திருத்திக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி தேர்தல் திணைக்களம் வாக்காளர்களை கோரியுள்ளது.

வாக்காளர் அட்டைகளில், வாக்களர்களின் பெயர்கள், அவர்களின் பால் என்பனவற்றில் மாறுபட்ட பிழைகள் காணப்படின், மாவட்ட தேர்தல் காரியாலயங்களுடன் தொடர்புகொண்டு உரிய திருத்தத்தை மேற்கொள்ள முடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

தமது அடையாள அட்டையினை சமர்ப்பித்து இந்த பிழைகளை திருத்த முடியும் எனவும் தேர்தல்கள் திணைக்களம் கோரியுள்ளது. (ற)

# அச்சுறுத்தல்களுக்கு அஞ்சப் போவதில்லை

**தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய**

கொழும்பு, ஜன.6

அச்சுறுத்தல்களுக்கு அஞ்சப் போவதில்லை என தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். தேர்தல் அதிகாரிகள் அச்சுறுத்தப்படுவது ஒன்றும் புதிய விடயமல்ல என அவர் குறிப்பிட்டுள்ளார்.

திருகோணமலையில் இரண்டு தேர்தல் அதிகாரிகள் தாக்கப்பட்ட சம்பவம் குறித்தே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களிலும் இவ்வாறான தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகவும், பதிலுக்கு அவர்கள் மீது தாக்குதல் நடத்த முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

ஒரு அதிகாரி தாக்கப்பட்டால் மேலும் இரண்டு அதிகாரிகளை அந்த இடத்திற்கு அனுப்பி சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அரசியல் சீரழிந்த நிலையில் காணப்படுவதாகவும் இதனால் இவ்வாறான தாக்குதல்கள் இடம்பெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ற)

# அனைத்து சட்டங்களை மீறிய தேர்தலே நடைபெறவுள்ளது

மாதுலுவாவே சோபித தேரர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.6

அனைத்துசட்டங்களையும்மீறிய தேர்தல் ஒன்றே தற்போது இடம்பெறப் போகின்றது என்று ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது. கட்சியின் தலைவர் மாதுலுவாவே சோபித தேரர் நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு கூறியுள்ளார்.

"பொய்ப் பரப்புரைகள் இந்த தேர்தலில் முழுமை பெற்றுள்ளன. நாட்டை பிரிப்பது, புலம்பெயர்ந்தோர் வருவது போன்ற கதைகள் கூறப்படுகின்றன. எனினும், அரசின் பக்கத்திலேயே, விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். அவ்வாறு இருக்கும் போது அரசு எதிரணியைப் பார்த்து, விடுதலைப் புலிகள் தம்முடன் இருப்பதாக கூறுகின்றது."– என்று தெரிவித்தார்.

அதேவேளை, அரச தரப்பு எப்படியாவது தேர்தலில் வெல்ல வேண்டும் என கங்கணத்துடன் செயல்படுவதாக முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன குற்றம் சுமத்தியுள்ளார்.

இதன் காரணமாகவே மிதவாத தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு எதிராக தமிழ் அடிப்படைவாத குழுக்களுடன் சேர்ந்து அரசு செயற் படுகின்றது என்று அவர் தெரிவித்துள்ளார். அரசில் உள்ளோர், தேசப்பற்றாளர்கள் அல்ல. அவர்கள் அதிகார பற்றாளர்கள் – என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ற)

# வெற்றியின்பின் நாடாளுமன்று கலைக்கப்பட மாட்டாது

அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவிப்பு

கொழும்பு, ஜன.6

நாடாமன்றம் கலைக்கப்பட மாட்டாது என சிரேஷ்ட அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார். எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெற்றியீட்டினால் நாடாளுமன்றம் கலைக்கப்படும் என வெளி யாகும் தகவல்களில் உண்மையில்லை என்றும் அவர் குறிப் பிட்டுள்ளார்.

இந்த நாடாளுமன்றின் ஊடாக அரசியல் சாசனத்தில் திருத்தங்கள் செய்யப்படும் என அவர் தெரிவித்துள்ளார். ஜனாதிபதியின் வெற்றி குறித்து சந்தேகப்பட வேண்டியதில்லை எனவும் வெற்றியின் பின்னர் புதிய அரசியல் சாசன்ம் அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

ஒருஆண்டுகாலப்பகுதியில்புதிய அரசியல் சாசனம் அமைக்கப்படும் எனவும், நாடாளுமன்றை கலைக்க வேண்டிய அவசியம் எதுவும் கிடையாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

1977ஆம் ஆண்டு முதல் 1994 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் பெரியளவில் ஊழல் மோசடிகளும் குற்றச் செயல்களும் இடம்பெற்றதாகவும் இவ்வாறான ஒரு நிலையில் ஐக்கிய தேசியக் கட்சி ஏனைய கட்சிகளை குற்றம்சுமத்தக்கூடாதுஎன அவர் தெரிவித்துள்ளார். (ற)

# நாட்டின் கௌரவத்தை காப்பாற்ற வேண்டும்

தேர்தல் ஆணையாளரிடம் மகாநாயக்கர்கள் கோரிக்கை

கொழும்பு, ஜன.6

நாட்டில் ஜனநாயக தேர்தல் நடவடிக்கை சுதந்திரமாகவும், நியாயமாகவும், பக்கச்சார்பற்ற வகையிலும், நடத்தப்படும் என உறுதியளிக்க வேண்டும் என மகாநாயக்கர்கள், தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவிடம் கோரியுள்ளனர்.

இதனூடாக, சர்வதேச சமூகத்தின் மத்தியில் கௌரவத்தை ஏற்படுத்தும் சூழலை தோற்றுவிக்க வேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தேர்தல்கள் ஆணையாளருக்கு அனுப்பியுள்ள மனு ஒன்றின் ஊடாகவே, மகாநாயக்கர்களான, மல்வத்தை மகாநாயக்கர் திப்பட்டுவே ஸ்ரீ சித்தார்த்த தேரர், மற்றும் அஸ்கிரி மகாநாயக்கர் உடுகம ஸ்ரீ புத்தரக்கித்த தேரர் ஆகியோர் இந்த கோரிக்கையை விடுத்துள்ளனர்.

"நாட்டு மக்களின் ஒற்றுமை, ஐக்கியம், மற்றும் நல்லிணக்கத்துடன் வாழ்வதற்கான அறிவுறுத்தல்களை வழங்கவேண்டிய கடப்பாடு மதகுருமார்களுக்கு தொன்று தொட்டு இருந்து வருகின்றது. நாட்டின் சில பாகங்களில் அச்சுறுத்தல், உடைமைகளை சேதமாக்குதல் போன்ற சம்பவங்கள் தொடர்பாக முன்வைக்கப்படும் முறைப்பாடுகளின் போது சட்டத்தையும், நியா யத்தையும் அனைவருக்கும் ஒரே வகையில் செயற்படுத்த வேண்டும். பொதுமக்களுக்கு சுதந்திரமாக தங்களது வாக்குகளை பதிவு செய்வதற்கு ஏதுவான அமைதியானசூழலை ஏற்படுத்த வேண்டும்"– என்று அவர்கள் தேர்தல்கள் ஆணையாளரிடம் கோரியுள்ளனர்.(ற)

## கண்ணீர் அஞ்சலி



எமது கூட்டுத்தாபன சக ஊழியரான மு.ஸ்ரீஸ்கந்தராஜாவின் பாசமிகு மாமனார்

**ஆறுமுகம் சுப்பிரமணியம்**

அவர்கள் 04.01.2015 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**தொகைசாலை அதிகாரியும், ஊழியர்களும்**
**சிலோன் பெற்றோலியம் ஸ்ரோறேஜ் ரேமனல் லிமிட்டெட்,**
**காங்கேசன்துறை.**

## மரண அறிவித்தல்

## பாக்கியலட்சுமி சங்கரதாஸ்

(ஓய்வுபெற்ற ஆசிரியை, தி/ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி, தி/புனித பிரான்சிஸ் சவேரியார் வித்தியாலயம்)



திருகோணமலையைப் பிறப்பிடமாகக்கொண்ட பாக்கியலட்சுமி சங்கரதாஸ் கடந்த (04.01.2015) ஞாயிற்றுக்கிழமை யாழ்நகரில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முருகுப்பிள்ளை கோணாமலை சங்கரதாஸின் (அகில இலங்கை சமாதான நீதிவான்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற பொன்னையா தங்கப்பொன்னார் தம்பதியரின் அன்பு மகளும் தயாளன் (Eng. Australia ), Dr. நிமலன் (Consultant Radiologist, Jaffna), காலஞ்சென்ற நடேசன், கேசன் (MSc. Eng. MBA), அருந்ததி (கால்நடை வைத்தியர்Animal Quarantine Office - Colombo) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சுமதி, ஜெயேந்திராதேவி, தயாளினி, Dr. பொன்னுசாமி, (Nawaloka Pvt. Hospital Ltd.), ஆகியோ ரின் அன்பு மாமியும் கிருஷாந்தி, விசாகன், பிருந்தா, கவிதா, குரு சங்கர், கேஷினி ஆகியோரின் ஐயாம்மாவும் ரகுவரனின் பாசமிகு அம்மம்மாவும் காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, ராஜலக்சுமி, சிவபாலன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(07.01.2015) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் இல. 12, கஸ்கிசன் வீதி, திருகோணமலையில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக இந்து மயானத் துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பிருந்தாவன்,**
**12, கஸ்கிசன் வீதி, திருமலை**
**தொ.பே.: 0262222685**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**


**தொடர்ச்சி**

## அமைதியான

இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் செயன்முறையானது அமைதியாகவும், நம்பகத்தன்மையுடையதாகவும், வெளிப்படையானதாகவும் இருக்க வேண் டியதன் அவசியத்தை கொழும்பிலுள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் அங்கத்துவ நாடுகளின் தலைவர்கள் கவனத்தில் கொண்டுள்ளனர்.

ஓர் அமைதிமிக்க சூழலானது நம்பகத்தன் மையுடைய தேர்தலுக்கு அத்தியாவசியமானது என்ற ஐரோப்பிய ஒன்றியத்தின் நீண்டகால திடநம்பிக்கையை தலைவர்கள் நினைவுகூருகின்றனர். வன்முறையோ அல்லது அச்சமோ இல்லாது தங்களுடைய தலைவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு இலங்கையின் குடிமக்கள் சுதந்திரமாக இருக்க வேண்டும். இலங்கை யினுடைய உறுதியான ஜனநாயக மர பைத் தூக்கிநிறுத்தும் பணியில் அனைத்துத் தரப் பினருக்கும் பங்குள்ளது. – இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற–சி)

# விளையாட்டு



## புதிய மைல் கல்லை எட்டினார் கோஹ்லி

டெஸ்ட் அணியின் தலைவராக நியமிக்கப்பட்ட விராட் கோஹ்லியின் ருவிட்டரை பின் தொடரும் ரசிகர்கள் எண்ணிக்கை 50 லட்சம். சச்சின், டோனி ஆகியோரை பின் தொடரும் ரசிகர்கள் எண்ணிக்கையை கோஹ்லியின் ருவிட்டர் கணக்கு கடந்து சென்றது. இதன் மூலம் இந்தியாவின் புகழ்பெற்ற வீரரானார் விராட் கோஹ்லி.


கோஹ்லியின் ருவிட்டரைப் பின் தொடரும் ரசிகர்கள் எண்ணிக்கை தற்போது, 5,004,544. சச்சின் டெண்டுல்கரை பின் தொடரும் ரசிகர்கள் 4,910,498. டோனியைப் பின் தொடரும் ரசிகர்கள் எண்ணிக்கை 3,374,509. என அமைந்துள்ளது. கடந்த 3 மாதங்களில் மட்டும் சுமார் 10 லட்சத்திற்கும் அதிகமான ரசிகர்கள் சேர்ந்துள்ளனர். அக்டோபர், 2014–இல் 40 லட்சம் ரசிகர்கள் என்ற எண்ணிக்கையை எட்டினார் கோஹ்லி.

இது குறித்து தனது ருவிட்டரில் கோஹ்லி, வாவ்! 5 மில்லியன் வாசகர்கள் வெகு விரைவில்! புத்தாண்டில் ஒரு அருமையான தொடக்கம். இதனைச் சாத்தியமாக்கிய அனைவருக்கும் நன்றி என்று கூறியுள்ளார். சேவாக்குக்கு ருவிட்டரில் 3.2 மில்லியன்களுக்கும் அதிகமான ரசிகர்கள். யுவராஜ் சிங்குக்கு 2.7 மில்லியன். ரெய்னாவுக்கு 2.6 மில்லியன். சகீர் கானுக்கு 1.7 மில்லியன். கௌதம் கம்பீருக்கு 1.65 மில்லியன். ரோஹித் சர்மாவுக்கு 1.62 மில்லியன். (த–ரி)

## உணர்ச்சிகரமான ஆட்டம்

ஜாம்பவான்களின் தொடர் என வர்ணிக்கப்படும் இந்திய மற்றும் ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான 4 ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் நான்காவதும் இறுதியுமான டெஸ்ட் ஆட்டம் இன்றையதினம் ஆஸ்திரேலியாவின் சிட்னி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

உள்ளூர் ஆட்டமொன்றில் பவுன்சர் பந்தில் படுகாயமடைந்து இறந்த ஆஸ்திரேலிய நட்சத்திரமான ஹியூக்ஸ் சிட்னி மைதானத்திலேயே காயமடைந்து சுருண்டு விழுந்து சிகிச்சை பயனின்றி இறந்தார். இதனால் கியூக்ஸ் இறந்த சிட்னி மைதானத்தில் இடம்பெறும் இந்த ஆட்டத்தை வெற்றிபெற்று வெற்றியை ஹியூக்ஸிற்கு அர்ப்பணிக்க வேண்டும் என்ற உணர்ச்சிப்பிடியில் ஆஸ்திரேலிய வீரர்கள் களமிறங்குகின்றனர். இதனால் ஆட்டம் மேலும் விறுவிறுப்படையும். ஹியூக்ஸ் இறுதியாக உயிருடன் இருந்ததும் இறந்ததும் சிட்னி மைதானத்திலேயே. இதனால் இந்த ஆட்டத்தில் அஞ்சலியுடன் கூடிய பல்வேறு அர்ப்பணிப்புக்கள் மற்றும் நிகழ்வுகள் ஹியூக்ஸிற்காக இடம்பெறும் என்பதில் சந்தேகமில்லை. (த–ரி)



## உலகக்கிண்ண இந்திய அணியில் இடம்பெறவுள்ள 15 வீரர்கள் யார்?

உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டிக்கான இந்திய அணியை தெரிவு செய்வது தெரிவு குழுவுக்கு சவாலான விடயமாக இருக்கும்.

இந்த பணியை சந்தீப் பட்டீல் தலைமையிலான 5 பேர் கொண்ட இந்திய கிரிக்கெட் அணியின் தெரிவு குழுவினர் இன்று மேற்கொள்கின்றனர்.

11ஆவது உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டி வருகின்ற பெப்ரவரி 14ஆம் திகதி முதல் மார்ச் 29ஆம் திகதி வரை ஆஸ்திரேலியா மற்றும் நியூ ஸிலாந்து நாடுகளில் நடக்கின்றன.

இதற்கான அணிகள் ஜனவரி 7ஆம் திகதிக்குள் சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஏற்கனவே 30 பேர் கொண்ட உத்தேச அணி அறிவிக்கப்பட்ட நிலையில் அவற்றில் இருந்து 15 பேர் அடங்கிய இறுதி அணி தேர்வாகும்.

இந்திய அணியில் 8 துடுப்பாட்டக்காரர்கள், 3 சுழற்பந்து வீச்சாளர்கள், 4 வேகப்பந்து வீச்சாளர்கள் இடம்பெறுவார்கள் என்று எதிர் பார்க்கப்படுகிறது. எனவே இந்திய அணி கீழ் கண்டவாறு இருக்கவே அதிக வாய்ப்புள்ளது.

துடுப்பாட்டக்காரர்கள்: டோனி (அணித் தலைவர்), விராட் கோஹ்லி, சுரேஷ் ரெய்னா, ரோகித் ஷர்மா, ரஹானே, ஷிகர் தவான், அம்பத்தி ராயுடு அல்லது முரளி விஜய், உத் தப்பா அல்லது விருத்திமான் சஹா.

சுழற்பந்து வீச்சாளர்கள்: அஸ்வின், அக்ஷர் பட்டேல், ரவீந்திர ஜடேஜா

வேகப்பந்து வீச்சாளர்கள்: புவனேஷ்வர் குமார், முகமது ஷமி, இஷாந்த் ஷர்மா, உமேஷ் யாதவ் அல்லது ஸ்டூவர்ட் பின்னி. (த)

## 65 ஆண்டு காலச் சாதனை சமன் செய்வாரா சங்கக்கார?



இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னணி வீரர்களில் ஒருவரான குமார் சங்கக்கார கிரிக்கெட் வாழ்விலிருந்து ஓய்வு பெற திட்டமிட்டிருந்தார்.

37 வயதான சங்கக்காரவின் இந்த அறிவிப்பு வெளியானதுடன், முடிவை மறுபரிசீலனை செய்யும்படி அவரை அணித்தலைவர் மத்தியூஸ் மற்றும் தேர்வாளர்கள் வலியுறுத்தினர்.

இதையடுத்து உலகக் கிண்ணத்துடன் ஒருநாள் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறும் முடிவில் மாற்றமில்லை, டெஸ்டில் தொடர்வது குறித்து மறுபரிசீலனை செய்வதாக உறுதி அளித்தார்.

இன்னும் ஒரு இரட்டை சதம் விளாசினால், 65 ஆண்டு கால பிரட்மனின் சாதனையை அவர் சமன் செய்து விடுவார்.


அதைச் செய்ய விரும்புவதாக நேற்று நிருபர்களிடம் தெரிவித்த சங்கக்கார, இந்த உலகக்கிண்ண கிரிக்கெட் முடிந்த பிறகே அடுத்து என்ன செய்வது என்பதை முடிவு செய்வேன்.

ஆனால் உலகக் கிண்ணம் முடிந்ததும் எதிர்காலம் குறித்த எனது சிந்தனை எப்படி அமையும் என்பதை இப்போதே கணிப்பது கடினம் என்று குறிப்பிட்டுள்ளார். (த)

## உறுப்பினராக மாறிய டோனி

ஒரு நாள் ஆட்டங்களில் அடித்து நொறுக்கும் டோனி, நிலைத்து நின்று பொறுமை காட்ட வேண்டிய டெஸ்ட் ஆட்டத்திற்கு ஏற்றவர் அல்ல என்ற விமர்சனங்கள் அடிக்கடி எழும். சமீப காலமாக இந்த விமர்சனங்கள் அதிகமாகின. டெஸ்ட் தலைமைத்துவத்தினை டோனி, கோஹ்லியிடம் வழங்குவதற்கு இதுவே சரியான நேரம் என்று முன்னாள் வீரர்கள் பலரும் கருத்து தெரிவித்த வண்ணம் இருந்தனர். ஆனாலும் அதை டோனி கண்டுகொள்ளவில்லை.

இந்த நிலையில் டெஸ்ட் ஆட்டத்தில் இருந்து எந்த ஒரு முன்னறிவிப்பும் இன்றி ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 3 ஆவது டெஸ்ட் ஆட்டம் நிறைவடைந்ததும் திடீரென தனது ஓய்வு அறிவிப்பை




வெளியிட்டார். இந்தியாவின் தலை சிறந்த தலைவர்களில் ஒருவராக விளங்கிய டோனி, பிரிவு உபசார விழாவுக்கு பொருத்தமானவராக விளங்கினாலும், அமைதியாக முன்னறிவிப்பின்றி ஓய்வு பெற்றது அனைவரையும் புருவத்தை உயர்த்தச் செய்தது.

ருவிட்டர் கணக்கில் அதிக அளவு ஆள்களைக் கொண்டுள்ள டோனி தனது ருவிட்டர் பக்கத்தில் தலைவர் இந்திய அணி என்று இருந்ததை உறுப்பினர் இந்திய அணி என மாற்றிக் கொண்டார். இதன் மூலம் தான் ஒரு சிறந்த மனிதன் என்பதை மீண்டும் நிரூபித்து உள்ளார். (த–ரி)

# றேஞ்சர்ஸ்- வல்லை ஆதிசக்தி இறுதியாட்டத்தில் பலப்பரீட்சை

கரணவாய்,ஜன. 6

பரபரப்பாக இடம்பெற்ற அரையிறுதி ஆட்டங்களில் வென்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றன. கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகம் மற்றும் வல்லை ஆதிசக்தி விளையாட்டுக்கழகம் என்பவை.

கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரையிறுயாட்டங்கள் நேற்றுமுன்தினம் கழக மைதானத்தில் இடம்பெற்றன.

பலத்த எதிர்பார்ப்புடன் ஆரம்பமான முதலாவது அரையிறுதியாட்டத்தில் வல்லை ஆதிசக்தி விளையாட்டுக் கழகமும், உடுப்பிட்டுநவஜீவன்ஸ்விளையாட்டுக் கழகமும் மோதின. ஆரம்பத்தில் மந்தமாக இருந்த ஆட்டம் நேரம் செல்லச் செல்ல சற்று சூடு பிடிக்கத்தொடங்கியது. இந்தச் சூழ் நிலையில் ஆட்டத்தின் 10 ஆவது நிமிடத்தில் ஆதிசக்தி விளையாட்டுக்கழக வீரர் கௌரிதர்சன் தமது அணி சார்பாக முதலாவது கோலைப் போட்டார். அந்தச் சூடு தணிவதற்குள் அடுத்த 6 ஆவது நிமிடத்தில் அதே அணியைச் சேர்ந்த தாமதாஸ் மேலும் ஒரு கோலைப் போட ஆட்டம் விறுவிறுப்பின் உச்சக் கட்டத்துக்குச் சென்றது.

ஆனாலும் வெற்றியை பெற வேண்டும் என்ற முனைப்பில் நவஜீவன்ஸ் அணியினர் தமது ஆட்டத்தை விரைவுபடுத்தி முன்னேறித் தாக்கும் உத்தியை கையாண்டனர். இதற்கு 25 ஆவது நிமிடத்தில் தக்க பயன் கிடைத்தது. அந்த அணியைச் சேர்ந்த பிரியந்தன் அருமையான கோல் ஒன்றைப் போட 2:1 என்ற கோல்கள் அடிப்படையில் ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.

இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்பமானதும் இரு அணிகளும் சில மாற்றங்களுடன் களமிறங்கி அசத்தலாக விளையாடினர். இரு அணியினரும் கோல் போட முயற்சிகளை மேற்கொண்டனர். இதனால் வீரர்கள் மாறிமாறி இரு பகுதியின் கோல் பிரதேசங்களையும் ஆக்கிரமித்த வண்ணமிருந்தனர். இந்தச் சூழ் நிலையில் 30 ஆவது நிமிடத்தில் வல்லை ஆதிசக்தியின் கௌரி தர்சன் மீண்டும் ஒரு கோலைப்போட அந்த அணியின் வெற்றி கிட்டத்தட்ட உறுதியாயிற்று. தொடர்ந்து இரு அணியினரும் மேலதிக கோல்கள் போடாத நிலையில் 3:1 என்ற கோல்க் கணக்கில் வெற்றி பெற்று ஆதிசக்தி இறுதியாட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்டது.

அடுத்து இடம்பெற்ற ஆட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டு கழகமும், உடுப்பிட்டி யுத் விளையாட்டுக்கழகமும் மோதின. விறுவிறுப்பாக இடம்பெற்ற ஆட்டத்தின் 12 ஆவது நிமிடத்தில் உடுப்பிட்டியுத் அணி வீரர் சஞ்சீவன் அணி சார்பாக முதலாவது கோலைப் போட்டார். அடுத்த நிமிடம் றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக வீரர் மதுசாந்த பதில் கோல் போட ஆட்டம் சூடு பிடிக்கத் தொடங்கியது. இதனைத் தொடர்ந்து அதே அணியைச் சேர்ந்த குபேரலவன் இரண்டாவது கோலைப் போட 2:1 என்ற நிலையில் ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.

இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்பமாகி விறுவிறுப்பாக இடம்பெற்ற போதும் இரு அணியினராலும் இலகுவாக கோல் போட முடியவில்லை. இந்தச் சூழ்நிலையில் ஆட்டம் நிறைவடைய 6 நிமிடங்கள் இருக்கையில் றேஞ்சர்ஸ் அணியின் மதுசாந் தமது 2 ஆவது கோலைப் போட 3:1 என்ற கோல் கணக்கில் றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குதகுதி பெற்றது. (த-108)

# நியூஸிலாந்து போராட்டம்



நியூஸிலாந்து மற்றும் இலங்கை அணிகளுக்கிடையிலான 2 டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட தொடரின் இரண்டாவது ஆட்டம் தற்பொழுது நியூஸிலாந்தின் பசின் றிசேர்வ் மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

ஏற்கனவே நடந்து முடிந்த முதலாவது ஆட்டத்தில் நியூஸிலாந்து அணி 8 இலக்குகளால் வெற்றி பெற்று தொடரில் 1:0 என்ற அடிப்படையில் முன்னிலை வகிக்கின்ற காரணத்தினால் இந்த ஆட்டத்தை வெற்றிபெற்றாலோ அல்லது சமநிலையில் முடித்தாலோ தொடரைக் கைப்பற்றிவிடலாம் என்ற எண்ணத்தில் நியூஸிலாந்தும் குறைந்த பட்சம் தொடரை சமநிலையிலாவது நிறைவடையச் செய்யவேண்டுமாயின் இந்த ஆட்டத்தில் வென்றேயாக வேண்டும் என்ற கட்டாயத்தில் இலங்கையணியும் களமிறங்கின.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கையணி முதலில் நியூஸிலாந்தை துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. இதன்படி நியூஸிலாந்து அணி தனது முதல் இன்னிங்ஸில் சகல இலக்குகளையும் இழந்து 221 ஓட்டங்களைமட்டுமேபெற்றது. பந்துவீச்சில் இலங்கையணி சார்பாக பிரதீப் 4 இலக்குகளையும் லக்மெல் 3 இலக்குகயையும் பிரசாத் 2 இலக்குகளையும் மத்தியூஸ் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குதமதுமுதல்இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கை அணி தனது முதல் இன்னிங்ஸிற்காக சகல இலக்குகளையும் இழந்து 356 ஓட்டங்களை குவித்து. 135 ஓட்டங்களால் முன் னிலை பெற்றது. அதிக பட்சமாக சங்கா 203 ஓட்டங்களை குவித்தார்.பந்து வீச்சில் நியூஸிலாந்து சார்பாக பிறேஸ்வெல் மற்றும்நீஸ்ஹம்தலா 3 இலக்குகளையும் பௌல்ற் 2 இலக்குகளையும் சௌத்தி மற்றும் கிறைக் தலா ஓர்இலக்கையும்கைப்பற்றினர்.

இன்னிங்ஸ் தோல்வியைத் தடுக்க வேண்டுமாயின் 135 ஓட்டங்களை பெறவேண்டும் என்ற கட்டாயத்தில் தமது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த நியூஸிலாந்து அணிக்கு அதன் ஆரம்ப வீரர்கள் சிறந்த தொடக்கத்தினை அமைத்துக் கொடுத்தனர். அணியின் ஓட்டம் 75 ஆக இருந்த பொழுது ரதர்போர்ட் 40 ஓட்டங்களுடன் வெளியேறினார். அடுத்த பந்துப்பரிமாற்றத்திலேயே லாதம் 35 ஓட்டங்களுடன் வெளியேறினார். அடுத்து வந்த ரெய்லர் எந்த வொரு ஓட்டத்தினையும் பெறாது வெளியேற நியூஸிலாந்து அணி 79 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை இழந்து திடீரெனச் சரிவு கண்டது. அடுத்து வந்த ரெய்லர் சிறப்பாகச் செயற்பட்டு போராடிக்கொண்டிருந்தாலும் மறு முனையில் மக்கெலம் 22 ஓட்டங்களுடனும் நீஸம் 19 ஓட்டங்களுடனும் வெளியேற நியூஸிலாந்து அணி 5 இலக்குகள் இழப்புக்கு 159 ஓட்டங்களைப் பெற்று போராட ஆரம்பித்தது. தொடர்ந்து வந்த வற்லிங் வில் லியம்சனுடன் இணைந்து நிதானத்தை கையிலெடுக்க இலக்கு சரிவுகள் முடிவுக்கு வந்தது இறுதியில் நேற்றைய மூன்றாம்நாள் ஆட்டநேர நிறைவில் நியூஸிலாந்து அணி 5 இலக்குகள் இழப்புக்கு 253 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. வில்லியம்சன் 80 ஓட்டங்களுடனும் வற்லிங் 48 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் உள்ளனர்.

பந்துவீச்சில் இலங்கையணி சார்பாக பிரதீப் 3 இலக்குகளையும் கெரத் மற்றும் பிரசாத் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

ஆட்டத்தின் நான்காவது நாள் இன்றாகும். ஆட்டம் இலங்கை நேரப்படி அதிகாலை 3.30க்கு ஆரம்பமாகும். (த-ரி)

# 786, யங்ஸ்ரார் அணிகள் இறுதிக்கு



யாழ்ப்பாணம் ஜன. 6

வவுனியா உதைபந்தாட்ட லீக்கினால் அங்கத்துவக்கழகங்களுக்கு இடையே நடத்தப்படும் ஆளுநர் வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டத் தொடரின் அரையிறுதியாட்டத்தில் 786 விளையாட்டுக்கழக அணி, யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி ஆகியவை வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளன.

கடந்த வாரம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற முதலாவது அரையிறுதியாட்டத்தில் 786 விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வடதாரகை விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது. இதில் இரண்டு அணியினரும் ஆட்ட நேரமுடிவில் தலா ஓர் கோலைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வியைக் காண்பதற்காகச் சமநிலை தகர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.அதில் 786 விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மருதநிலா விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா 2 கோல்களைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வி காண்பதற்காகச் சமநிலை தகர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி 4:3 என்றகோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (த-23)

# ஹியூக்ஸுக்கான ஆட்டம்

பவுன்சர் பந்தில் படுகாயமடைந்து உயிரிழந்த பிலிப் ஹியுக்ஸ் நினைவாக சிட்னி மைதானத்தின் உடைமாற்றும் அறையின் வெளியே் வெண்கலத்தில் பொறிக்கப்பட்ட ஹியூக்ஸின் உருவப்படம் அமைக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியா சென்றுள்ள இந்திய அணி 4 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் மூன்று ஆட்டங்களின் முடிவில் இந்திய அணி 0-2 என தொடரை இழந்தது. நான்காவது ஆட்டம் சிட்னியில் இன்று ஆரம்பமாகின்றது. இந்த மைதானத்தில் நடந்த (நவம்பர் 27) உள்ளூர் ஆட்டத்தில் தான் ஆஸ்திரேலிய வீரர் பிலிப் ஹியூக்ஸ் பவுன்சர் பந்தால் தாக்கப்பட்டு மரணமடைந்தார்.

இவருக்கு சக வீரர்கள் வித்தியாசமான முறையில் அஞ்சலி செலுத்தவுள்ளனர். இதன்படி ஆஸ்திரேலிய வீரர்களின் உடைமாற்றும் அறையின் வெளியே வெண்கலத்திலான தகட்டில் செய்யப்பட்ட ஹியூக்ஸின் மார்பளவு புகைப்படம் பதிக்கப்பட்டிருக்கும். இதன் மூலம் ஒவ்வொரு முறையும் வீரர்கள் களத்திற்கு புறப்படும்போதும், மீண்டும் வரும்போதும் ஹியூக்ஸின் முகத்தை காண முடியும். சிட்னி டெஸ்ட் ஆட்டத்தின் முதல் நாள் ஆட்டத்தை காண ஹியூக்ஸின் குடும்ப உறுப்பினர்கள் வர உள்ளனர்.(த-ரி)



# செய்திகள்

## சமநிலை நோக்கி நகர்கிறது ஆட்டம்

தென்னாபிரிக்கா அணிக்கும் மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கும் இடையிலான மூன்று டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் மூன்றாவது ஆட்டம் தற்பொழுது தென்னாபிரிக்காவின் கேப்ரவுண் மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்றமேற்கிந்தியத்தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. இதன்படி முதல் இன்னிங்ஸில் சகல இலக்குகளையும் இழந்து 329 ஓட்டங்களில் சுருண்டது.

பந்துவீச்சில் தென்னாபிரிக்கா சார்பாக ஸ்ரெய்ன் 4 இலக்குகளையும் கார்மர் 3 இலக்குகளையும் மோர்கல் 2 இலக்குகளையும் சில் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தமது முதல் இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் 3 இலக்குகள் இழப்புக்கு 227 ஓட்டங்களை பெற்று வலுவான நிலையில் இருந்தது. அம்லா 55 ஓட்டங்களுடனும் வில்லியேர்ஸ் 32 ஓட்டங்களுடனும் மூன்றாம்நாள் ஆட்டவேளையில் தொடர்ந்து துடுப்பெடுத்தாட வந்தனர்: மேலதிகமாக 8 ஓட்டங்களை சேர்த்திருந்த பொழுது அம்லா ஆட்டமிழந்து சென்றார். அம்லா வெளியேறினதும் மறுமுனையில் அதிரடியைக் கையிலெடுத்தார் வில்லியர்ஸ். தொடர்ந்து வந்த சில் ஓரளவு பங்களிக்க சதம்கடந்து அசத்தினார் வில்லியர்ஸ். சில் 33 ஓட்டங்களுடன் வெளியேறியதும் அடுத்தடுத்து வந்த பின்வரிசை வீரர்களான பிளன்டர் 0, கார்மர் 10, ஸ்ரெய்ன் 0 என வந்த வேகத்தில் விடைபெற்றுச் சென்றனர். மறுமுனையில் தனித்து நின்று போராடிக் கொண்டிருந்த வில்லியர்ஸ் 148 ஓட்டங்களுடன் வெளியேறதென்னா பிரிக்கா அணி தனது முதல் இன்னிங்ஸுக்காக சகல இலக்குகளையும் இழந்து 421 ஓட்டங்களைப் பெற்று 92 ஓட்டங்களால் முன்னிலை வகித்தது. அதிக பட் சமாக வில்லியர்ஸ் 148 ஓட்டங் களைப் பெற்றார்.

பந்துவீச்சில் மேற்கிந்திய தீவுகள் சார்பாக கோல்டர் மற்றும் சாமுவேல்ஸ் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் ரெய்லர், கபிரியேல் மற்றும் பென் ஆகியோர் தலா ஓர் இலக்கினைக் கைப்பற்றியுள்ளனர்.

இன்னிங்ஸ் தோல்வியை தவிர்க்க வேண்டுமாயின் 92 ஓட்டங்களைப் பெறவேண்டும் என்ற கட்டாயத்தில் தமது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு அதன் ஆரம்பவீரர்களான பிறீத் வெய்ற் 16 ஓட்டங்களுடனும் சிமித் 7 ஓட்டங்களுடனும் வெளியேறி ஏமாற்றம் கொடுக்க அணியின் ஓட்டம் 27ஆக இருந்த வேளையிலேயே அதன் ஆரம்ப வீரர்கள் இருவரும் பவிலியன் திரும்பியிருந்தனர். தொடர்ந்து வந்த ஜோன்சன் மற்றும் சாமுவேல்ஸ் இணைப்பாட்டமாக 61 ஓட்டங்களைப் பகிர மூன்றாம் நாள் ஆட்டநேர நிறைவில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 2 இலக்குகள் இழப்புக்கு 87 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

பந்து வீச்சில் தென்னாபிரிக்கா சார்பாக மோர்கல் மற்றும் கார்மர் ஆகியோர் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றியுள்ளார்.(த–ரி)

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி இராசரத்தினம்

(ஓய்வுபெற்ற மேற்பார்வையாளர், இல்மனைற் தொழிற்சாலை, புல்மோட்டை)



துன்னாலை தாமரைக்குளத்தடியைப் பிறப்பிடமாகவும், பளை வண்ணான்கேணி , துன்னாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி இராசரத்தினம் 04.01.2015 ஞாயிறு இரவு காலமானார்.

அன்னார் சின்னத்தம்பி-சின்னாச்சி தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், பளையைச் சேர்ந்த சுப்பு-அன்னப்பிள்ளை தம்பதியரின் இளைய மருமகனும், இராசம்மாவின் (ஓய்வு பெற்ற அதிபர் கிளி/இயக்கச்சி அ.த.க பாடசாலை, யா/கட்டைவேலி மெ.மி.த.க பாடசாலை) அன்புக்கணவரும், கேந்திரநாத் , ராஜரங்கா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற பத்தினிப்பிள்ளை, இலட்சுமி , பாக்கியலட்சுமி , காலஞ்சென்ற சுப்பிர மணியம் மற்றும் பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, தங்கம்மா, நாகம்மா மற்றும் வடிவேலு, பாக்கியம், சரஸ்வதி, மனோன்மணி, காலஞ்சென்ற குலசேகரம் மற்றும் செல்வத்துரை, காலஞ்சென்ற துரைராஜா மற்றும் நிர்மலாதேவி, செகராஜசேகரம் ஆகி யோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.01.2015) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் துன்னாலையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வேரொண்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

### பரமசிங்கம் நாகேஸ்வரி

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், உடுப்பிட்டி சந்தை வீதி மற்றும் பிரதான வீதி, மகாறம்பைக் குளம் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட பரமசிங்கம் நாகேஸ்வரி நேற்று (05.01.2015) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சோமசுந்தரம் பரமசிங்கத்தின் (முன்னாள் கணக்காளர் குகன் மோட்டர்ஸ் - வவுனியா) K.V. அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராசரத்தினம்-இரத்தினம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், சோமசுந்தரம்-நல்லமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் மற்றும் அம்பிகைதர்சினி (ஆசிரியை-வ/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி), அம்பிகைகுமார், அம்பிகைதரன் ஆகியோரின் அன்புத் தாயும், நஞ்சன், ரூபரஞ்சினி,பிரியங்கா ஆகியோரின் அன்பு மாமியும், கேஷனா, விவேஹிதன், அபிலக்ஷன், ஆருத்ரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.01.2015) செவ்வாய்க் கிழமை பி.ப 2 மணியளவில் இல.225, பிரதான வீதி, மகாறம்பைக் குளம், வவுனியாவில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூந்தோட்டம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
0777289755, 0775161670 குடும்பத்தினர்.

### திருமதி இராசாத்தி இளையதம்பி



அச்சுவேலி பத்தமேனியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசாத்தி இளையதம்பி நேற்று (05.01. 2015) திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி- முத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்ற தமோதரம்பிள்ளை- மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், இளையதம்பியின் அன்பு மனைவியும், செல்லப்பாக்கியம், ஏகாம்பரம் (கனடா), சிவராசா (லண்டன்) ஆகியோ ரின் அன்புச் சகோதரியும், குலசேகரம் (சுவிஸ்), குணசேகரம் (கனடா), சிவசேகரம் (கனடா), தயாபரன் (சுவிஸ்), சதீஸ்குமார் (சுவிஸ்), சுதேஸ்குமார் (மோகன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், விஜயலட்சுமி (கன்டா), வரலட்சுமி (லண்டன்), சிவானந்தம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், சந்தானலட்சுமி (சுவிஸ்), பத்மராணி (கனடா), பிறேமிலா (கனடா), சுஜாதா (சுவிஸ்), தனுஷா (சுவிஸ்), உஷாராணி ஆகியோரின் அன்பு மாமியும், தர்சினி, அஜந்தா, வினோதன், யசிந்தா, சஜீபன், கஜானி, சுவேதன், சாதனா, கலையரசன், கபிலன், டர்வின், ரதிக்கா, கஜானன், பிரியலக்ஷன், சுலக்ஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.01.2015) பத்தமேனியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.பகல் 10.00 மணியளவில் பத்தமேனி தீர்த்தாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
விமான நிலைய வீதி,
பத்தமேனி, அச்சுவேலி
குடும்பத்தினர்.
077 9909804

**விற்பனைக்குண்டு**

அலுவலக தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 071 8980542

**Business Academy**
A/L Medium English & Tamil
*வணிகக்கல்வி *கணக்கீடு *பொருளியல்
A/L 2017 மற்றும் துரித மீட்டல் வகுப்பு ஆரம்பம்
10.01.2015 10.00AM
பிரபல ஆசிரியர் குழாம்
மேலதிக விபரங்களுக்கும், பதிவுகளுக்கும்...
Call to : 0767520940
No.19, Stanley Road. Jaffna.

**பிரத்தியேக வகுப்பு**
«« தமிழ், English Medium »»
«« A/L DAY CLASS »»
ஆரம்பம்:
06.01.2015 செவ்வாய் 3.30p.m
«« மீட்டலும் வினாவிடையும் »»
யாழ். பிரபல கல்லூரி ஆசிரியர்கள்
«« CHEMISTRY »»
பிரதீபன் B.Sc (Hons) Chemistry Spl
«« Physics »»
ரவிந்திரன் B.Sc, M.Sc.
«« A/L 2017,2016, 2015 »»
பிரிவுகளும் ஆரம்பமாகின்றன.
Note: மாணவர்களுடைய வசதி கருதி நேரம் தீர்மானிக்கவுள்ளதால் தமிழ்,English Medium அனைத்துப் பிரிவினரும் இன்று 3.30 மணிக்கு ஆசிரியர்களைச் சந்திக்கவும்.
பொருளியற் கல்லூரி
நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

**உடனடி பகுதிநேர வேலைவாய்ப்பு**

கணினி பக்க வடிவமைப்பாளர்,
★ Photoshop
★ Pagemaker
★ Indesign
தெரிந்த ஆண் வேலையாள் தேவை.



வேலை நேரம் :மாலை 6.00 மணி முதல் இரவு 11.00 மணிவரை
சுயவிபரக் கோவையுடன் இன்றும் (06.01.2015) நாளையும் (07.01.2015) நேரில் சமுகம் தரவும்.
உதயன் பணிமனை
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**SPOKEN ENGLISH**



O/L எழுதியோர், தொழில்புரிவோர், பல்கலை புகுமுக மாணவர்கள்,இளைஞர், யுவதிகள் இணைய முடியும்.
சனி,ஞாயிறு பயிற்சிநெறி ஆரம்பம் : 10.01.2015
பிரிவு 1 : காலை 08.00-10.00 பிரிவு 2 : மு.ப 10.00-12.00
பிரிவு 3 : பி.ப 01.00-03.00 பிரிவு 4 : மாலை 03.00-05.00
மூன்று மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்.
"ஆங்கிலத்தில் ஓரெழுத்து தெரியாதவர்களும் கூட இப்பயிற்சியில் இணைந்து மூன்றே மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியும்"
யாழ்நகர் - நெல்லியடி - சங்கானை.
SAAMSON LANGUAGE SCHOOL
179, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
077 621 4567
021 320 3313



ஒளிஅரசி
2015 வர்ண நாட்காட்டி உள்ளே
இதோ வெளிவந்துவிட்டது!
ஒளிஅரசி
இல்லத்தரசிகளின் தோழி
இலங்கையின் சஞ்சிகை வரலாற்றில் ஒரு பரிணாம புரட்சி
25/- இலாபத்தில் இவ்வாரம் வெளிவந்த 'ஒளிஅரசி' சஞ்சிகையை வாங்கி கீழ்வரும்
உடல், உளம், மனம், அறிவு, கல்வி, பொதுவிடயங்களை அழகாக, அளவாக, ஆனந்தமாக நுகரலாம்.
கடல்கொள்ளையர் புதிய தொடர்...
நாகரிக மனிதர்கள்
மாமி - மருமகள் உறவு
தரம் 04 பிரபலங்களின் நுட்பமான 20 வினா - விடைகள்
தொழில் வழிகாட்டி
இன்னும் பல வியத்தகு ஆக்கங்களுடன் ஜனவரி மாத இதழ் வெளிவந்துள்ளது.
பிரதிகளுக்கு உதயன் முகவர்களை நாடுங்கள்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.01.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.